PRAY PREPARE PREACH

# பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்

## பிலிப்பியர் நூலுக்கான பேசும் வரைகோடுகள்

...உலகமெங்குமுள்ள
வேதாகம ஆசிரியர்களுக்காக
எழுதப்பட்டுள்ளது

# பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்

## பிலிப்பியர் நூலுக்கான பேசும் வரைகோடுகள்

# பொருளடக்கம்

அ. விரைவு உதவி: பிலிப்பியர் நிருபத்திலிருந்து ஒரு பிரசங்கத்தைத் தயார் செய்வது எப்படி? . . . . . . . . . . . 4

ஆ. "பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்" நூலினை உபயோகிப்பது எப்படி? . . . . . . . . . . . 5

இ. பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி . . . . . . . . . . . 8

ஈ. பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தைக் கற்றலும் பிரசங்கித்தலும் . . . . . . . . . . . . . 11

உ. பிலிப்பியர் நிருபத்திலிருந்து பாடங்கள்ஷ . . . . . . . . . . . . . . .72

ஊ. பயிற்சி வழிகாட்டி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 75

**Preaching Philippians**
© Phil Crowter/The Good Book Company 2009

© 2017 தமிழ் மொழிபெயர்ப்பு, கொழும்பு இறையியல் கல்லூரி
Tamil Translation © 2017 by Colombo Theological Seminary

சகல பதிப்புரிமையும் ஆக்கியோனுக்கே உரியது. ஆக்கியோனின் எழுத்து மூல அனுமதியின்றி இந்நூலின் எப்பாகமும் எவ்விதத்திலும் பிரித்தெடுக்கப்படவோ, இலத்திரனியல் மூலங்களுக்கூடாகவோ பிரதி பண்ணப்படவோ கூடாது.

ISBN 978-955-36400-2-4

Colombo Theological Seminary, 189,Dutugemunu Street, Kohuwela
Sri Lanka
http://www.cts.lk

# தயவு செய்து இதை முதலில் வாசிக்கவும்!

இன்னுமொரு PPP புத்தகத்தை உங்களுக்கு வழங்குவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்கு இது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்கின்றோம். எல்லா இடங்களிலுமுள்ள மக்கள் தேவனுடைய வார்த்தையைத் தெளிவாகக் கேட்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். அப்பொழுது மக்கள் இயேசுவிடம் திரும்புவார்கள். கிறிஸ்தவர்கள் அதிகமாக இயேசுவைப்போல மாறுவார்கள். எல்லாத் துதியும் தேவனுக்கே உரியது.

நாம் உங்களுக்கு அநேக உதவிகளை வழங்கியிருக்கின்றோம். ஆனால் நீங்கள் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்! தயவுசெய்து நீங்கள் வாசிப்பதை வெறுமனே பின்பற்ற வேண்டாம்.

PPP என்றால் ஜெபம் செய்! தயார் செய்! போதனை செய்! (Pray – Prepare – Preach) என்பதைக் குறிக்கும். போதிப்பதற்கு முன் நீங்கள் செய்ய வேண்டிய அநேக காரியங்கள் இருக்கின்றன.

**ஜெபம் செய்.** உலகத்திலேயே மிகச் சிறந்த பிரசங்கமும் தேவனில்லாமல் ஒன்றுமில்லை. தேவனுடைய சத்தியத்தை நீங்கள் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள். தேவன் மக்களின் இருதயங்களில் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள். நீங்கள் பிரசங்கத்தைத் தயார் செய்யும்போது உங்களுக்காக ஜெபியுங்கள். தேவனுடைய வார்த்தை உயிருள்ளதாக உங்களிடத்தில் வர வேண்டுமென்று ஜெபியுங்கள்.

**தயார் செய்.** ஒரு வேதாகமப் பிரசங்கத்தைத் தயார் செய்வதற்கு உங்களுக்குப் பல மணி நேரம் தேவைப்படும். வேதப்பகுதியைப் புரிந்து கொள்ள கடும் முயற்சி எடுக்க வேண்டும். நாம் உங்களுக்கு வழங்கியுள்ள உதவிகளைக் குறித்து சிந்தியுங்கள். எந்தப் பகுதிகள் உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்? அதை எப்படி நல்ல விதத்தில் அவர்களுக்கு விளக்குவது? நாங்கள் ஒரு சில வார்த்தைகளையே கொடுத்திருக்கின்றோம். நீங்கள் எல்லோருக்கும் விளங்கக் கூடியதாக இன்னும் அதிகமாகப் பேசவேண்டும்.

**போதனை செய்.** இப்போது நீங்கள் போதிக்கலாம். நாம் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கின்றோம் என்பதை உணரும்போது அது நமக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். இவை நாம் சொல்ல நினைக்கும் காரியங்களல்ல. இவை தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கும் அவருடைய சத்தியங்களாகும். அவருடைய வேலையை அவை நிறைவேற்றுமென்று தேவன் கூறியிருக்கிறார்! 📖 **ஏசாயா 55:10~11**

இந்த புத்தகத்தை உபயோகிக்க சிறந்த வழி, பிலிப்பிய நிருபத்தை முதல் அதிகாரத்தில் தொடங்கி ஒவ்வொரு பகுதியையும் முறையாகப் போதிப்பதாகும். அது ஒரு நிருபமாயிருக்கிறது. எனவே அதை தொடக்கம் முதல் தொடர்ந்து வாசிப்பது புரிந்து கொள்ள எளிதாயிருக்கும்.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." பிலிப்பியர் 4:19

எப்படி ஒரு பிரசங்கத்தைத் தயார் செய்து அதைப் பகிர்ந்து கொள்வது என்பதற்கான மேலதிக உதவி இந்தப் புத்தகத்தின் இறுதியில் வழங்கப்பட்டிருக்கின்றது.

*பில் கிரவ்டர்*

# அ. விரைவு உதவி:

## மாற்கு நற்செய்திலிருந்து ஒரு பிரசங்கத்தை தயார் செய்வது எப்படி?

1. தேவனிடம் உதவிக்காக ஜெபிக்கவும்.

**2. வேதாகமப் பகுதியை பலமுறை வாசிக்கவும்.**
பகுதியைப் புரிந்து கொள்ள ▣ **பின்னணிப்** பகுதியை உபயோகிக்கவும். கடினமான வேதவசனங்களைப் புரிந்து கொள்ள ✹ **குறிப்புகள்** பகுதியை உபயோகிக்கவும்

**3. வேதாகமப் பகுதியில் தேவன் நமக்குப் போதிக்கும் முக்கிய விடயத்தை கண்டுபிடிக்க முயற்சி செய்யவும்.**
உங்கள் உதவிக்கு ⊙ **முக்கிய விடயப்** பகுதியை உபயோகிக்கவும்.

**4. உங்கள் மக்களுக்காக ஜெபிக்கவும். இந்த வேதாகம பகுதி அவர்களுக்கு எப்படி உதவியாயிருக்குமென்பதைக் குறித்து சிந்திக்கவும்**
உங்கள் உதவிக்கு ★ **நீங்கள் செய்ய வேண்டியது** பகுதியை உபயோகிக்கவும்

**5. உங்கள் உரையை உங்கள் சொந்த மொழியில் எழுதவும். வேதாகமம் கற்பிக்கும் முக்கிய விடயங்களிலிருந்து அதை ஆரம்பிக்கவும்.**
உங்கள் உதவிக்கு **பிரசங்கித்தல்** பகுதியில் உள்ள நமது குறிப்புகளை உபயோகிக்கவும்.

**6. இப்போது உங்கள் உரைக்கு ஒரு ஆரம்பத்தையும், ஒரு முடிவையும் எழுதவும்.**

**7. நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்**

- **முக்கிய விடயம்** தெளிவாக இருக்கின்றதா?
- **வேதாகமம்** போதிப்பதை நீங்கள் அவர்களுக்குக் காட்டுகின்றீர்களா?
- உங்கள் மக்கள் புரிந்து கொள்ளவும், மனதில் வைத்துக் கொள்ளவும் தக்கதாக **வார்த்தை உதாரணங்களை** உபயோகித்திருக்கின்றீர்களா?
- நீங்கள் மக்களுடன் **தொடர்புள்ளவர்களாக** இருக்கின்றீர்களா?
- என்ன **மாற்றம்** ஏற்படுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்?

**8. உங்கள் வார்த்தைகள் மூலம் தேவன் பேச வேண்டுமென்றும் அவருடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்றும் ஜெபிக்கவும்.**

மேலதிக உதவிக்கு அடுத்த பகுதியை வாசிக்கவும்.

# ஆ. ‘பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்’ நூலினை உபயோகிப்பது எப்படி?

நீங்கள் ஒரு பிரசங்கத்தை தயார் செய்யும் ஒவ்வொரு முறையும் இவைகளுடன் ஆரம்பியுங்கள்:

- தேவனுடைய உதவிக்காக ஜெபியுங்கள்.
- வேதபகுதியை வாசியுங்கள்.
- அந்த வேதப்பகுதியில் தேவன் நமக்கு கற்பிக்கும் முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்.

அதன்பின் இந்தக் குறிப்புகளை உங்கள் உதவிக்காக நீங்கள் உபயோகிக்கலாம். ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. முதல் பக்கம் வேதபகுதியைக் குறித்துச் சிந்திக்க உங்களுக்கு உதவி செய்கிறது. இரண்டாவது பக்கம் உங்கள் பிரசங்கத்திற்கான தலைப்புகளையும், யோசனைகளையும் தருகின்றது.

நீங்கள் 📖 அடையாளத்தைக் காணும்போது அதில் குறிப்பிட்ட வேதவசனங்களைக் வேதாகமத்தில் வாசிக்க வேண்டும்.

**கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:12–18**

**4 முக்கியமான காரியம்**

▣ பின்னணி

பவுல் சிறையிலிருக்கிறார். ஆனால், பிலிப்பியிலிருக்கும் அவருடைய நண்பர்கள் அவரைக் குறித்துக் கவலைப்படுவதை அவர் விரும்பவில்லை. அதனால் அவர்கள் ஒன்றும் சரியில்லை என்று நினைத்து விடக்கூடாது என்று அவர் விரும்புகிறார். அவர்கள் இயேசுவைக் குறித்து மக்களுக்கு சொல்லுவதை விட்டுவிடக் கூடாது என்று அவர் விரும்புகிறார். தேவன் நடக்கும் காரியங்களை எப்படி பார்க்கிறாரோ, அப்படியே அவர்களும் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் சிறையிலிருக்கிறார். ஆனால் அவர் சந்தோஷமாயிருக்கிறார். ஏனெனில், மற்றவர்கள் இயேசுவைக் குறித்து மக்களுக்குக் கூறுவதால் அவர் சந்தோஷமாயிருக்கிறார்.

📖 பிலிப்பியர் 1:12–18

பவுல் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிறார். ஆனால், இயேசுவைப் பற்றிக் கூற அவருக்கு சுதந்திரம் இருக்கிறது.

▣ முக்கிய விடயம்

மக்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை கேள்விப்படுகிறார்கள் என்பதே முக்கிய காரியமாகும். நமது பிரச்சினைகள் முக்கியமல்ல.

▣ நீங்கள் செய்ய வேண்டியது

மற்றவர்கள் இயேசுவைப் பிரசங்கிக்கும்போது, அவர்கள் பவுலைக் குறித்து பொறாமைப்படுபவர்களாயிருந்தாலும் கூட, அவர் சந்தோஷப்படுகிறார். இந்த மக்களுக்கு பவுலைக் குறித்து கெட்ட எண்ணங்களிருந்தன. ஆனால் அவர்கள் இயேசுவைக் குறித்து உண்மையைக் கூறுகிறார்கள்.

இயேசுவைக் குறித்து மக்கள் தவறானவைகளைப் போதிக்கும் போது, பவுல் ஒருபோதும் அதை விரும்புவதில்லை. நீங்கள் உரையாடும் மக்கள் இதைப் புரிந்துகொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள். மற்ற குழுக்கள் இயேசுவைக் குறித்து தவறானவைகளைப் போதிக்கும்போது நம்மால் ஒருபோதும் சந்தோஷமாயிருக்க முடியாது.

▣ குறிப்புகள்

- பிலிப்பியர் 1:12. பவுல் சிறையிலிருக்கிறார். ஆனால் அது சுவிசேஷத்தை தடை செய்யவில்லை. மாறாக, சுவிசேஷம் முன்னோக்கிப் போயிருக்கிறது! அதிகமான மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறார்கள்.
- பிலிப்பியர் 1:13. சிறையிலுள்ள ரோம சேவகர்கள் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறார்கள்.
- பிலிப்பியர் 1:14. சிறைச்சாலைக்கு வெளியே ஏனைய போதகர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்க அதிக தைரியமடைந்திருக்கிறார்கள்.
- பிலிப்பியர் 1:15-18. பவுலை நேசிக்கிற சில போதகர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். மற்ற போதகர்கள் பவுலின் மேல் பொறாமை கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்! அவர்களுக்கு “சுயநலமான இலட்சியம்” இருக்கிறது.(மக்கள் அவர்களைக் குறித்து உயர்வாக நினைக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள்.) அவர்களுக்கு தவறான “ஊக்குவிப்பு” களிருந்தன. (தவறான காரணங்களுக்காக அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்பினார்கள்.) ஆனால், மக்கள் எவ்விதத்திலாவது இயேசுவைக் குறித்த நற்செய்தியை கேள்விப்படுகிறார்கள் என்பதே முக்கிய காரியமாகும். எனவே பவுல் அதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்!

21

## கற்றுக்கொள்ளுதல் பக்கம்:

### வேதாகமத்தைப் புரிந்து கொள்ளுதல்

முதல் பகுதியானது வேதாகமப்பகுதியைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவி செய்கிறது.

**▣ பின்னணி**

வேதப்பகுதிக்கு முன்னும், பின்னும் என்ன வருகின்றதென்பதைக் குறித்து சிந்திப்பது மிகவும் முக்கியமாகும். ஒவ்வொரு முறையும் நாம் அப்படியான சில வசனங்களைப் பார்ப்போம். ஆயினும் அந்த வசனங்கள் பவுல் பிலிப்பிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின முழு நிருபத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும். எப்பொழுதும் ஒவ்வொரு பகுதியும் பவுல் கூறியிருப்பதைக் குறித்து என்ன சொல்கிறதென்பதை கேட்கவும்.

**பின்னணிப்** பகுதி இதைச் செய்ய உங்களுக்கு உதவியாயிருக்கும்.

**▣ முக்கிய விடயம்**

மிக முக்கியமான விடயத்தை நாம் ஒரு சில வார்த்தைகளில் கொடுத்திருக்கிறோம். அதைக்

குறித்து சிந்திக்கவும். வேதாகமம் இதைக் குறித்து கற்பிக்கும் விடயத்தை நீங்கள் காணலாம். உங்களுடைய உரையில் இந்த விடயம் தெளிவாக வெளிப்படுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

### ☆ நீங்கள் செய்ய வேண்டியது

வேதாகமப் பகுதியிலிருந்து நீங்கள் சிந்திக்க வேண்டிய ஒன்றை இந்தப் பகுதி தெரிவு செய்கிறது. வேதாமத்தைப் புரிந்து கொள்வதற்குக் கடினமாக நீங்கள் உழைக்க வேண்டியது மிக முக்கியம். இந்தப் பகுதியிலுள்ள முக்கிய விடயத்தை எப்படி போதிப்பது என்பதைக் குறித்து நீங்கள் கவனமாக சிந்திக்க வேண்டும்.

### குறிப்புகள்

இந்தப் பகுதி கடினமான வேதவசனங்களை உங்களுக்கு விளக்குகிறது. நீங்கள் போதிக்கும்போது தவறுகள் விடாமலிருக்க இது உங்களுக்கு உதவியாயிருக்கும்.

## பிரசங்கித்தல் பக்கம்:

### வேதாகமத்தைப் போதித்தல்

இரண்டாவது பக்கம் வேதப்பகுதியைப் போதிக்க உதவுகின்றது. நீங்களும் உங்கள் சொந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பகுதி உங்களுக்கு யோசனைகளைக் கொடுக்கிறது. அந்த யோசனைகளை எடுத்து சிறந்த முறையில் உபயோகிக்க வேண்டும். நாம் எலும்புகளைக் கொடுக்கிறோம். நீங்கள் அதன் மேல் சதையை வைக்க வேண்டும்!



**பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:12–18**

(நாம் எல்லாவற்றையும் சரியான விதத்தில் பார்க்க வேண்டும் என்பதைக் காட்ட ஒரு கதையைக் கூறவும்) உங்கள் வெளிக்கதவினருகிலிருந்து ஒரு சத்தம் வருகிறது. நீங்கள் வெளியே பார்க்கும்போது ஒரு மனிதன் நிற்பதைக் காண்கிறீர்கள். ஒரு திருடன்! ஆனால் உங்கள் கண்பார்வை மங்கலாக இருப்பதால் மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு மீண்டும் பார்க்கிறீர்கள். அப்போது அங்கே உங்கள் நண்பர் உங்கள் கதவை திருத்துவதற்காக வந்திருப்பதை காண்கிறீர்கள்!

நாம் நமது மூக்குக் கண்ணாடிகளைப் அணிந்து கொண்டு எல்லாவற்றையும் சரியான விதத்தில் பார்க்க பவுல் உதவி செய்கிறார். நாம் முதலில் பவுலைச் சிறையில் பார்க்கிறோம். அப்போது நாம் கவலைப்படுகிறோம். அவரால் இப்போது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியாதென்று நாம் நினைக்கிறோம். இப்போது அம்மக்கள் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள முடியாதென்று நினைக்கிறோம். ஆனால் நாம் நமது மூக்குக்கண்ணாடிகளை அணிந்து கொண்டு சந்தோஷப்பட வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். “கெட்டவைகள்” உண்மையில் நல்லவைகளே!

- இந்தப் பகுதியிலுள்ள எந்த “கெட்ட” காரியங்கள் சுவிசேஷம் முன்னோக்கிச் செல்வதைக் காட்டுகிறது?

**சிறைச்சாலையில் சுவிசேஷம்**

பிலிப்பியர் 1:12–13

சிறைச்சாலை பவுலுக்கு வேடிக்கையானதொரு இடமாய் இருக்கவில்லை. சங்கிலிகள் இரண்டு சேவகர்களோடு அவரை பிணைத்திருந்தன. ஆனால் பவுல் அதைக் குறித்துக் கவலைப்படவில்லை! அதன் அர்த்தம் அவரால் இயேசுவைக் குறித்து அந்த சேவகர்களிடம் கதைக்க முடியும். அப்போது அவர்கள் அதைப் பற்றி மற்ற சேவகர்களிடம் கதைப்பார்கள். அங்கே 9000 வரையிலான காவல் சேவகர்கள் இருந்தார்கள். அவர்கள் யாவரும் இயேசுவைப் பற்றிக் கேள்விப்படுவார்கள்! எனவே பிலிப்பியிலிருக்கும் அவருடைய நண்பர்கள் அதைக் குறித்து துக்கமல்ல சந்தோஷமே படவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

**சிறைக்கு வெளியே சுவிசேஷம்**

பிலிப்பியர் 1:14–18

அவருடைய கட்டுக்களை விட அதிக வேதனையைக் கொடுக்கும் ஒன்றைக் குறித்து அவர் கேள்விப்படுகிறார். சிலர் அவர் மேல் பொறாமை கொண்டிருக்கிறார்கள். இப்போது பவுல் சிறையிலிருக்கிறார். எனவே அவர்கள் பெரிய போதகர்களாக வர விரும்புகிறார்கள். ஆனால், பவுல் அதன் நல்ல பக்கத்தைப் பார்க்கிறார். அதன் அர்த்தமானது அதிகமான மக்கள் இயேசுவைப் பிரசங்கிக்கிறார்கள் என்பதே! அவர்களுக்கு பவுலின்மேல் பகை உணர்விருக்கிறது, ஆனால் அவர்கள் மக்களுக்கு இயேசுவைக் குறித்த உண்மையை போதிக்கிறார்கள். எனவே பவுல் மகிழ்ச்சியடைகிறார்.

அவருடைய சில நண்பர்களுக்கும் அவர் உதவியிருப்பதைக் குறித்து பவுல் மகிழ்ச்சியடைகிறார். அவர்களுக்கு சிறையைக் குறித்து பயமில்லை. இப்போது அவர்கள் முன்பைவிட அதிக தைரியத்துடன் இயேசுவைப் பிரசங்கிக்கிறார்கள்!

அதிகமான மக்கள் இயேசுவைக் குறித்த நற்செய்தியை கேட்கிறார்களென்பதே முக்கிய விடயமாகும்.

- அதிகமான மக்கள் இயேசுவைக் குறித்து கேள்விப்படுவதால், எந்த கெட்ட காரியங்கள் உண்மையில் நல்ல காரியங்களாயிருக்க முடியும்?

உங்களுக்கும் அதுவே முக்கிய விடயமாக இருக்கிறதா? காரியங்கள் உங்களுக்குப் பிழைத்துப்போகும்போது, நீங்களும் அவ்விதமாகவே பார்க்கிறீர்களா? அல்லது நீங்கள் அதன் கெட்ட பக்கத்தை மட்டுமே பார்க்கிறீர்களா?

1956ல் தென் அமெரிக்காவில் ஜிம் எலியாட்டும் (துஜைஅ நுடடழைவ) இன்னும் நான்கு மிஷனரி ஊழியர்களும் அக்குவா இந்தியர்களால் (யுரஉய ஐனெயைளெ) கொலை செய்யப்பட்டபோது, அது மிகவும் கெட்ட காரியமாய்த் தோன்றியது. ஆனால் அந்த உதாரணம் அநேக மக்களை இயேசுவைக் குறித்து சொல்ல ஊக்குவித்தது.

பவுலைப்போல காரியங்களைப் பார்க்க உதவும்படி தேவனிடம் கேளுங்கள். அப்போது உங்களைப் புண்படுத்தும் சம்பவங்களைக் குறித்து நீங்கள் கவலைப்படமாட்டீர்கள். சுவிசேஷம் முன்னோக்கிப் போவதையே முக்கியமாகக் கருதுவீர்கள்.

23

1. **உங்கள் உதவிக்காக நாங்கள் எழுதியிருப்பவை**

- **இரண்டு அல்லது மூன்று தலைப்புகள்.** இவை **இப்படி** எழுதப்பட்டிருக்கின்றன. இந்தத் தலைப்புகள் வேதாகமத்தைத் தெளிவாகப் போதிக்க உங்களுக்கு உதவியாயிருக்கும். உங்கள் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் நீங்கள் தலைப்புகளை மாற்றிக் கொள்ளலாம்.
- **வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் காட்டுகிறோம்.** மக்கள் வேதாகமத்துக்குச் செவி கொடுக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்திக்

கொண்டேயிருங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால், நீங்கள் போதிக்கும் வசனத்தைப் பார்க்கும்படி கூறுங்கள். இவ்வடையாளப்பகுதி அவ்விடயத்தை இனங்காண உதவும்.

- **வேதாகமம் போதிப்பது என்ன என்பதை நாம் உங்களுக்கு விளக்குகின்றோம்.** உங்கள் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எப்படி வேதாகமத்தை விளக்குவது என்பதைக் குறித்து நீங்கள் சிந்திக்க வேண்டும். உங்கள் மக்களைப் பற்றி உங்களுக்கே தெரியும். நமக்கு அவர்களைப் பற்றித் தெரியாது. எனவே எங்கள் வார்த்தைகளை விட உங்கள் வார்த்தைகள் சிறந்தவைகளாய் இருக்கும்.
- **நாம் சிலவேளைகளில் வார்த்தை உதாரணத்தை உபயோகிக்கிறோம்.** பிலிப்பியர் 1:1-5 குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு உதாரணம் இதோ:

⊞ குப்பையை எடுத்துக் கொண்டு போக ஒரு வாகனத்தில் சிலர் வந்தார்கள். நாம் வீதிகளை சுத்தமாக வைத்திருந்திருப்பதில் பங்காளிகளாயிருக்க வேண்டும். அங்கே எடுத்துச் செல்வதற்கு 15 மரக்கட்டைகள் இருந்தன. ஆனால் அந்த சோம்பேறி மனிதர்கள் 3 மரக்கட்டைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு போனார்கள்.

இந்த வார்த்தை உதாரணம் உங்கள் மக்களுக்கு உகந்ததாயிராமல் இருக்கக் கூடும். ஒருவேளை உங்கள் ஊரில் வாகனங்களில் குப்பை கொண்டு போகும் பழக்கமில்லாமலிருக்கலாம். ஒரு வேதாகம ஆசிரியர் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் வார்த்தை உதாரணங்களைக் கூற வேண்டும். வேதாகம சத்தியத்தைப் போதிப்பதற்கு நீங்கள் இன்னும் அநேக வார்த்தை உதாரணங்களை உபயோகிக்க வேண்டும். நீங்கள் காட்டும் வார்த்தை உதாரணமானது வேதாகமம் எதைப் போதிக்கிறதென்பதைக் குறித்த விடயத்தில் சரியாக இருக்க வேண்டுமென்பதில் நீங்கள் மிகக் கவனமாயிருக்க வேண்டும்.

- **வேதாகமப் போதனையை எப்படி மக்களுடன் இணைப்பது என்பதை நாம் உங்களுக்குக் காட்டுகிறோம்.** தேவனுடைய வார்த்தை நம்முடன் பேசுவதைக் கேட்பது மிக முக்கியம். வேதாகமப் போதனை எப்படி நம்மை மாற்றுகின்றது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஓர் உதாரணம் இதோ:

**நாம் உங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு யோசனைகளைத் தருகிறோம்.** நீங்கள் வேதாகமத்தை உங்கள் மக்களுடன் இணைப்பதற்கு இன்னும் அதிக வழிகளைக் குறித்து சிந்திக்க வேண்டும். உங்களுக்கு மக்களைத் தெரியும். அவர்கள் வாழ்க்கையை எப்படி வேதாகமம் மாற்ற வேண்டியிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

⊗ நாம் பங்காளிகளாயிருப்பதற்கு, நாம் யாவரும் சேவை செய்ய வேண்டும். நீங்கள் ஏனைய மக்களுக்கு சேவை செய்கிறீர்களா?

**2. நீங்கள் செய்ய வேண்டிய மற்ற காரியங்கள்:**

- **உங்கள் பிரசங்கத்தை எப்படி ஆரம்பிப்பதென்று சிந்தியுங்கள்.** இன்று இந்தப் பிரசங்கத்தைக் கேட்பது ஏன் முக்கியம்

என்பதை உங்கள் மக்கள் உணர வேண்டும். நீங்கள் இன்று வேதாகமத்திலிருந்து எதைப் போதிக்கப் போகின்றீர்களென்பதை அவர்களிடம் கூறுங்கள். அது ஏன் அவர்களுக்கு முக்கியம் என்பதையும் கூறுங்கள்.

- **எப்படி உங்கள் பிரசங்கத்தை முடிப்பது என்பதைக் குறித்துச் சிந்தியுங்கள்.** முக்கிய விடயங்களை அவர்களுக்கு நினைவு படுத்துங்கள். அவர்கள் சிந்திக்க அல்லது செயலாற்ற எதையாவது அவர்களுக்குக் கொடுங்கள்.
- **ஜெபியுங்கள்!** தேவனுடைய வார்த்தையிலிருந்து நீங்கள் தேவனுடைய சத்தியத்தைப் போதிக்கிறீர்கள். தேவன் உங்கள் வாயின் வார்த்தைகளை உபயோகித்து மக்களுடன் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள். தேவனுடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்று ஜெபியுங்கள்.
- **எப்போதும் உங்கள் சொந்த மொழியையே உபயோகியுங்கள்.** உங்கள் மக்கள் ஆங்கில மொழியை சரியாகப் பேசத் தெரியாதவர்களாயிருந்தால், ஆங்கிலத்தில் ஒன்றும் சொல்ல **வேண்டாம்.**

# இ. பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தைப் பற்றி சுவிசேஷ சிந்தனை

பவுல் தன் பயணத்தில் சுவிசேஷம் அறிவித்த முதல் ஐரோப்பிய நகரம் பிலிப்பியாகும். பிலிப்பி நகரம் கிரீஸில் (புசநநஉந) உள்ளது. வேதாகமத்தில் இந்தப் பகுதி மக்கெதோனியா என்று அழைக்கப்படுகிறது (இன்று மக்கெதோனியா என்று அழைக்கப்படும் நாட்டுக்குச் சற்று அப்பால்).



**பிலிப்பிய விசுவாசிகள்**

📖 **அப்போஸ்தலர் 16:6–40.** இது பவுலின் இரண்டாவது மிஷனரிப் பயணமாகும். பிலிப்பியில் முதலில் கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் லீதியாளும். சிறை அதிகாரியுமாகும். இவர்கள் பிலிப்பியில் சபையை ஆரம்பித்தார்கள்.

பிலிப்பிய சபை பவுலுக்கு அவருடைய மிஷனரிப் பணியில் உதவி செய்தது. பவுல் அதிகமாக வேலை செய்து சம்பாதிக்கத் தேவையில்லாதவகையில்,

அவருக்கு கிறிஸ்தவர்கள் பணம் அனுப்பினார்கள். இது பவுலுக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தது. ஏனென்றால், அவரைப் போலவே அவர்களும் சுவிசேஷத்தை அதிகமாக நேசித்தார்கள். அவர்கள் அவருடைய பங்காளிகள்.

ஆனால் அந்த சபையில் மூன்று ஆபத்துக்கள் இருந்தன.

1. சில மக்கள் விசுவாசிகளை வெறுத்தார்கள். அவர்கள் இவர்களுக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி, வாழ்க்கையை கஷ்டத்திற்குள்ளாக்கினார்கள்.
2. சில யூதர்கள் பிழையானவற்றைப் போதித்தார்கள். அவர்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவனாயிருப்பதற்கு ஒருவர் யூதனாக மாற வேண்டுமென்று கற்பித்தார்கள்.
3. துக்ககரமாய், சில கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் பிழையான எண்ணங்களையுடைவர்களாயிருந்தார்கள். அங்கே அவர்களுக்கிடையில் சண்டைகள் இருந்தன.

**பவுலின் நிருபம்**

பவுல் முதல்முறை பிலிப்பிக்குச் சென்றதிலிருந்து சுமார் பத்து வருடங்களின் பின் அவர் ரோமபுரியில் சிறையில் இருந்தார். (இது இயேசு மரித்து சுமார் முப்பது வருடங்களின் பின், கி.பி.62ல்). ஒரு நாள் பவுலைப் பார்க்க ஒருவர் வந்தார். அது எப்பாப்பிரோதீத்துவாகும். அவர் பிலிப்பியிலிருந்து வந்தார். (சுமார் 800 மைல்களைக் கடந்து) எப்பாப்பிரோதீத்து பிலிப்பிய சபையிலிருந்து பவுலுக்கு ஒரு பரிசைக் கொண்டு வந்தார்.

பவுல் அவரைக் கண்டதில் அதிக மகிழ்ச்சியடைந்தார். எப்பாப்பிரோதீத்து அவருடைய நீண்ட பயணத்தின் போது நோய் வாய்ப்பட்டு, அவர் சுகமடைய அதிக நாட்கள் சென்றன. எப்பாப்பிரோதீத்து சுகமடைந்த பின் பவுல் இந்த நிருபத்தை எழுதினார். எப்பாப்பிரோதீத்து அதை பிலிப்பியிலிருந்த பவுலின் நண்பர்களுக்கு எடுத்துச் சென்றார். பவுல் அதில் குறிப்பிட்டிருந்த சில விடயங்கள் இதோ:

- அவர்கள் அவருடன் இன்னும் பங்காளிகளாயிருந்தப்படியால் பவுல் மிக்க மகிழ்ச்சியடைகிறார். இயேசுவைக்குறித்து மக்களுக்குச் சொல்லுவதை அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.
- பொய்ப் போதகர்களைக் குறித்து பவுல் அவர்களை எச்சரிக்கிறார்.
- அவர்கள் இயேசுவைப் போல் தாழ்மையாயிருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். அவர்கள் சண்டை போடக் கூடாது.

அவருடைய நிருபத்தில் பவுல் அவர்கள் **சரியாக சிந்திக்க** அவர்களுக்கு உதவி செய்கிறார். இயேசுவைப்போல சிந்திப்பதை வெளிப்படுத்தும் வாழ்க்கை வாழும் மக்கள் சிலரை அவர் உதாரணம் காட்டுகிறார். எல்லோரும் இந்த மக்களைப் போலிருக்க வேண்டும்! நாம் சரியாக சிந்திக்க

பழகும்போது, நாம் சரியாக வாழ்வோம்.

இன்றைய விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தில் பல முக்கிய பாடங்கள் இருக்கின்றன. பவுல் அவர்களுக்கு என்ன கூறினார் என்பதை புரிந்து கொள்ள நாம் அதிக முயற்சி எடுக்கும் போது தேவனுடைய வார்த்தை நம்மிடம் வல்லமையான விதத்தில் பேசுகிறதென்பதைக் காணலாம். இந்த நிருபம் இயேசுவையும், சுவிசேஷத்தையும் முதன்மை ஸ்தானத்தில் வைத்து சிந்திக்க நம்மைப் பயிற்றுவிக்கின்றது. நமது வாழ்க்கையிலும், நமது சபைகளிலும் இது அதிகமாகத் தேவைப்படுகின்றது!

இந்த புத்தகத்தின் "உ" பகுதியில் **பிலிப்பியர் நிருபத்திலிருந்து பாடங்கள்** என்னும் ஒரு பகுதியைக் காண்பீர்கள். நீங்கள் பிலிப்பியர் நிருபத்தை குறித்த எல்லா பிரசங்கங்களையும் முடித்த பின்பு இந்த கேள்விகளை உபயோகிக்கலாம்.

இந்த புத்தகத்தின் "ஊ" பகுதியில் **பயிற்சி வழிகாட்டி – பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கிப்பது எப்படி என்னும்** ஒரு பகுதியைக் காண்பீர்கள்.

இது இந்நூலினை, உங்களுக்கு அல்லது இன்னும் சிறப்பாக அல்லது பிரசங்க குழுவிற்கு பயன்படுத்துவதற்கு உதவும். பிலிப்பியர் நிருபத்தை நீங்களாகவே பிரசங்கிக்க உங்களுக்கு உதவியாக அங்கே ஐந்து பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது நாங்கள் கூறுவதில் நீங்கள் அதிகமாக சார்ந்திருக்காமல். நீங்களே பிரசங்கத்தை தயாரிக்க உங்களுக்கு உதவியாயிருக்கும். அது நீங்களொரு சிறந்த பிரசங்கியாக மாறுவதற்கு உங்களை பயிற்றுவிக்கும். நீங்கள் இந்த புத்தகத்தை உபயோகிக்க தொடங்குவதற்கு **முன்** அதை வாசிக்கவும்.

# பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்

## ஈ. பவுல் பலிப்பியருக்கு எழுதின நிருபத்தை கற்றலும் பிரசங்கித்தலும்

# 1 சுவிசேஷத்தின் பங்காளிகள்

**பின்னணி**

பவுல் ரோமபுரியில் சிறையிலிருக்கிறார் (பிலிப்பியர் 1:12-14) அவருக்கு பிலிப்பியிலுள்ள கிறிஸ்தவர்களை சந்திப்பதற்கு அங்கே போக முடியாது. அவருக்கு இயேசுவைப் பற்றி அவர்களுக்குப் போதிக்க முடியாது. ஆனால், அவரால் அந்தக் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க முடியும். அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேற அவர்களுக்கு அவரால் உதவி செய்ய முடியும்.

அவர்கள் அவருக்கு எவ்வளவு முக்கியமானவர்களென்று முதலில் அவர் காட்டுகிறார். பவுல் ஒரு அப்போஸ்தலர். தேவன் அவருடைய சபையின் மேல் அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். ஆனால் பவுல் ஒரு ஊழியக்காரராகவும், அவர்களை நேசிக்கும் ஒரு நண்பனாகவும் பிலிப்பியருக்கு எழுதுகிறார். **பிலிப்பியர் 1:1~5.**

**முக்கிய விடயம்**

பவுலும், பிலிப்பிய கிறிஸ்தவர்களும் **பங்காளிகள்.** அவர்கள் சுவிசேஷப் பணியில் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள்.

(பவுல் “சுவிசேஷம்” என்று கூறும்போது, அவர் இயேசுவைப் பற்றிய முழு செய்தியையும் குறிப்பிடுகிறார். இயேசுவின் சுவிசேஷம் மக்களை இயேசுவை விசுவாசிக்கப் பண்ணுகிறது. அது கிறிஸ்தவர்கள் இயேசுவுக்காக ஜீவிக்க அவர்களுக்கு உதவியாய் இருக்கிறது.)

**நீங்கள் செய்ய வேண்டியது**

**அதே சுவிசேஷத்தின் மேலுள்ள அன்பு** பவுலையும், பிலிப்பிய சபையையும் இணைக்கிறது. இது நமக்குக் காட்டுவது என்ன? நாம் எப்படி மற்ற விசுவாசிகளோடு பங்காளிகளாக இருக்கிறோம்?

(உதாரணம்: நாம் மிஷனரி பணிகளுக்காகப் பணம் கொடுக்கலாம்)

ஆனால் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளும் எல்லா மக்களுடனும், அல்லது எல்லாச் சபைகளுடனும் நாம் பங்காளிகளாய் இருப்பது நல்லதல்ல. (பிலிப்பியில் இருந்த சமய ஈடுபாடுடைய சில மக்களை விட்டு கிறிஸ்தவர்கள் விலகி இருக்க வேண்டுமென்று பவுல் கூறினார் (பிலிப்பியர் 3:2, 18-19.)

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 1:1.** “பரிசுத்தவான்கள்” (தேவனின் மக்கள்) என்பது “பரிசுத்த மக்கள்”. பவுல் சில விசேட கிறிஸ்தவர்களைக் குறிப்பிடவில்லை. அவர் எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிப்பிடுகிறார். தேவன் நம் எல்லோரையும் பரிசுத்தமாயிருக்க அழைக்கிறார். (தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள்).

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:1 –5

- **பிலிப்பியர் 1:1.** “கண்காணிகள்” **சபையிலுள்ள தலைவர்களுக்கு** பல வித்தியாசமான பெயர்கள் இருக்கின்றன. (கண்காணி, ஆயர், போதகர், மூப்பர்). உதவிக்காரர்கள் (டீகன்) சபைத் தலைவர்களுக்கு உதவி செய்வார்கள்.
- **பிலிப்பியர் 1:3.** இங்கே “உடன்பட்டவர்கள்” என்று குறிப்பிடப்பட்டிருப்பது உண்மையில் “பங்காளிகள்” என்ற அர்த்தத்திலேயாகும். கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல தேவனின் விருப்பம். நாம் ஒன்றாக இணைந்து சுவிசேஷப் **பணி** செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் சுவிசேஷப் பணியில் பங்காளிகளாக ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:1 –5

### யார் பங்காளிகள்?

பிலிப்பியர் 1:1

### ஊழியக்காரர்களான பவுலும், தீமோத்தேயுவும்

இது நமக்கு எப்படியானதொரு உதாரணமாயிருக்கிறது! இவ்வளவு பெரிய அப்போஸ்தலரான பவுல் தன்னை ஒரு ஊழியக்காரன் என்று அழைக்கிறார்! நமது பெரும் இரட்சகரைப் போல.

நான் பெரு (Peru) என்னுமிடத்திலுள்ள ஒரு சபையைக் குறித்துக் கேள்விப்பட்டேன். அநேகமாக ஏழை மக்களே அங்கு போவார்கள். சில வேளைகளில் நன்றாகப் படித்த மக்கள் அங்கு வருவார்கள். அவர்களிடம் அதிக பணமிருப்பதால், அவர்கள் மிக முக்கியமானவர்களென்று அவர்கள் நினைத்துத் தாங்கள் **தலைவர்கள், முதலாளிகளாயிருக்க** வேண்டுமென்று நினைப்பார்கள். இது எவ்வளவு துக்ககரமானது. அவர்கள் **ஊழியக்காரராய்** இருக்க விரும்பினால், அவர்களால் அதிகமான உதவிகளைச் செய்ய முடியும்.

பங்காளிகளாக இருப்பதற்கு நாம் யாவரும் சேவை செய்ய வேண்டும். நீங்கள் மற்ற மக்களுக்கு சேவை செய்கிறீர்களா?

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:1 -5

### பிலிப்பியிலுள்ள தேவனுடைய பிள்ளைகளான பரிசுத்தவான்கள்

சபையில் சில பிரச்சினைகள் இருப்பதை பவுல் அறிவார். ஆனால் அவர் எல்லாக் கிறிஸ்தவர்களையும் "பரிசுத்தவான்கள்" என்றே அழைக்கிறார். அதன் அர்த்தம் "பரிசுத்த ஜனங்கள் - தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள்" தேவன் கிறிஸ்தவர்களைப் பரிசுத்தமானவர்களாக மாற்றியிருக்கிறார். அவர் இயேசுவின் இரத்தத்தால் நம்மைத் துப்புரவாக்கிக் கழுவியிருக்கிறார்.

நீங்கள் உங்களைத் தேவனுடைய **பரிசுத்த** மக்களில் ஒருவராக நினைக்கிறீர்களா? இது எப்படி உங்கள் வாழ்க்கையில் வெளிப்படும்?

## நம்மை பங்காளிகளாக்குவது எது?

பிலிப்பியர் 1:3

உங்களைப் போன்ற விருப்பமுள்ள இன்னொருவரை நீங்கள் சந்தித்தால் என்ன நடக்கும்? (உதாரணம் கூறவும்). உங்களால் மணிக்கணக்காக கதைத்துக் கொண்டிருக்க முடியும்.

**சுவிசேஷமும்** அப்படித்தான் அது இயேசுவின் செய்தியை நேசிக்கும் மற்றவர்களுடன் பசையைப் போல நம்மை ஒட்டிக் கொள்ளப் பண்ணுகிறது. நாம் உண்மையாகவே அவர்களுடன் மிக நெருக்கமாக இருப்பதை உணருகிறோம். அப்போது அவர்களுடன் **பங்காளிகளாக** வேலை செய்வது நமக்கு மகிழ்ச்சியளிக்கும். இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்வதில் அவர்களுக்கு உதவி செய்ய நாம் விரும்புவோம். நீங்கள் அப்படி உணருகிறீர்களா? இந்தக் கதையைக் குறித்து சிந்திக்கவும்.

என்னுடைய குப்பையை அகற்றுவதற்காக சில மனிதர்கள் ஒரு வாகனத்தில் வந்தார்கள். நாம் யாவரும் தெருக்களைச் சுத்தமாக வைத்திருப்பதில் பங்காளிகளாக இருக்க வேண்டும். என் வீட்டில் 15 மரத்துண்டுகள் இருந்தன. ஆனால் அந்த சோம்பேறி மனிதர்கள் 3 துண்டுகளை மட்டுமே எடுத்துச் சென்றார்கள்.

நீங்களும் இந்த மனிதர்களைப் போலிருக்கிறீர்களா? நீங்கள் சுவிசேஷத்தை நேசிப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால், நீங்கள் அதைப் பரப்ப கஷ்டப்பட்டு வேலை செய்ய இஷ்டமில்லாமல் இருக்கிறீர்கள். நீங்கள் மாற வேண்டுமா? உங்கள் பங்கை நிறைவேற்ற நீங்கள் என்ன செய்ய முடியும்?

பவுலும்,பிலிப்பியரும் எப்படிப் பங்காளிகளாக ஒன்றிணைந்து செயல்பட முடியும்? பவுல் சிறையிலிருக்கிறார். அவர் அவர்களை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறார். பிலிப்பியர் 1:4,5 ஒரு வழியைக் காட்டுகிறது.

**ஜெபம்** சுவிசேஷத்தைப் பரப்ப உதவியாயிருக்கும் ஒரு சிறந்த வழியாகும். பிலிப்பியில் இருக்கும் அவருடைய நண்பர்களைப் பற்றி நினைக்கும் போது பவுல் அடையும் சந்தோஷத்தைப் பாருங்கள். சுவிசேஷத்தை நேசிப்பவர்களில் யாரை உங்களுக்குத் தெரியும். என்று நினைத்துப் பாருங்கள் நீங்கள் ஒரு **பங்காளி**யாயிருப்பீர்களா? அவர்களுக்காக நீங்கள் ஜெபிப்பீர்களா?

# 2 நம்பிக்கை

### பின்னணி

பவுலும், பிலிப்பியில் வசித்த கிறிஸ்தவர்களும் **பங்காளிகள்.** அவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள் (பிலிப்பியர்1:1-5). இந்த விதமாக ஒன்றிணைந்து வேலை செய்யும்போது ஒருவர் மேல் ஒருவருக்கு **நம்பிக்கையாய்** இருப்பதை நம்மால் உணரக் கூடியதாயிருக்க வேண்டும். பவுல் ஏனிந்த விசுவாசிகளைக் குறித்து அதிக மகிழ்ச்சியடைகிறாரென்று இப்போது நாம் காண்கிறோம்.

அதற்கான காரணத்தை **பிலிப்பியர் 1:4~8**ல் காணலாம்.

### முக்கிய விடயம்

பவுல் இந்தக் கிறிஸ்தவர்களைக் குறித்து அதிக மகிழ்ச்சியடைகிறார். **தேவன்** அவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்வதை அவரால் காண முடிகின்றது. அதுபோல் **அவர்கள்** சுவிசேஷத்திற்காகக் கிரியை செய்வதையும் அவரால் காண முடிகின்றது.

### நீங்கள் செய்ய வேண்டியது

தேவனுடையதும் மற்றும் எமது கிரியைகள். தேவன் **எப்போதுமே** முதலில் கிரியை செய்கிறார். தேவன் நம்மை இரட்சிக்கிறார். தேவன் நமது இருதயத்தை மாற்றுகிறார். அதுபோல், அவருடைய மக்களில் ஒருவரும் கெட்டுப்போய் விடாதபடி அவருடைய பணியை செய்து முடிப்பதையும் அவர் உறுதி செய்கிறார். (**2 தீமோத்தேயு 1:12; யோவான் 10:27~28**)

நமது வேலை - தேவன் அவர்களுக்குள் செய்திருக்கும் கிரியையின் நிமித்தமே விசுவாசிகள் கிரியை செய்கிறார்கள். பிலிப்பியருடைய வாழ்க்கையில் தேவன் அவர்களை இரட்சிக்கும் வேலையை செய்திருக்கிறபடியினாலேயே அவர்கள் பவுலுடன் இணைந்து சுவிசேஷத்திற்காக வேலை செய்கிறார்கள். (**பிலிப்பியர் 2:13; எபேசியர் 2:10**)

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 1:5.** “இயேசு கிறிஸ்துவின் நாள்” இது இயேசு கிறிஸ்து மீண்டும் வரும் நாளைக் குறிப்பிடுகிறது. அப்போது நம்மில் தேவனின் கிரியை முடிவடையும்.
- **பிலிப்பியர் 1:7.** “என் கட்டுகளிலும் நான் சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி அதைத் திடப்படுத்தி வருகிறதினாலும்...” பிலிப்பிய கிறிஸ்தவர்கள் பவுலுக்கு **சிறையிலும்**, இயேசுவைப் பற்றி **பிரசங்கிப்பதிலும்** உதவி செய்தார்கள்.
- **பிலிப்பியர் 1:7.** “நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:6-8

பங்குள்ளவர்களானதால்...” அல்லது இப்படிக் கூறலாம்: “தேவன் எனக்குக் கொடுத்திருக்கும் இந்த சிலாக்கியத்தில் (தகுதி) நீங்கள் என்னுடன் பங்காளிகள்.” தேவனுக்கு ஊழியம் செய்வதால் அவர் அருளும் **ஈவாகும்** (கிருபை). மற்றையவர்கள் பணியில் பங்கு பெற்றால் அது மகிழ்ச்சியே.

- **பிலிப்பியர் 1:8.** அது உண்மையென்று தேவனுக்குத் தெரியும். பவுல் இந்த கிறிஸ்தவர்களின் மேல் ஆழமான உணர்வுகளுடன் அன்பு செலுத்துகிறார். அது இயேசுவிடமிருந்து வருகிறது.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:6-8

தன்னைக் கிறிஸ்தவரென்று சொல்லிக் கொண்டு ஒரு கிறிஸ்தவரைப் போல் வாழாமலிருக்கும் உங்கள் நண்பர்களில் ஒருவரைக் குறித்து நீங்கள் எப்போதாவது இப்படிச் சிந்தித்தது உண்டா: “நான் அவனைக் குறித்துக் கவலைப்படுகிறேன்” பவுல் பிலிப்பியிலிருந்த கிறிஸ்தவர்களைக் குறித்துக் கவலைப்பட**வில்லை.** இரண்டு முக்கிய காரணங்களினால், அவருக்கு அவர்கள் மேல் முழு நம்பிக்கையிருந்தது.

### நம்மில் தேவனின் கிரியை

**பிலிப்பியர் 1:5**

⊞ நான் ஒருமுறை நெருப்புக் குச்சிகளைக் கொண்டு மாதிரி தீயணைப்பு வாகனமொன்றை செய்யத் தொடங்கினேன். அதைச் செய்து முடித்திருந்தால் அது அழகாக இருந்திருக்கும். ஆனால், அதிக நேரமெடுத்ததால் சலிப்பு ஏற்படவே, அதைப் பாதியில் நிறுத்தி விட்டேன்.

- கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! தேவன் ஒருபோதும் நம்மைப் பாதியில் விட்டு விடுபவரல்ல. பவுல் எதைக் குறித்து உறுதியாயிருக்கிறார்?

இந்தக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து முன்னேறுவதற்கு சக்தியுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதால், பவுல் அப்படி நினைக்கவில்லை. அவர்கள்

## ⬇ பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:6–8

மிக நல்ல கிறிஸ்தவர்களாயிருப்பதால் அவர் அவர்கள் மேல் நம்பிக்கை வைக்கவில்லை. அவர் **தேவனுடைய கிரியையின்** மேல் நம்பிக்கையுள்ளவராய் இருக்கிறார். தேவன் ஒருபோதும் ஒன்றைத் தொடங்கி விட்டுப் பின் பாதியில் விட்டு விடுபவரல்ல. தேவன் மக்களை அவருடைய குடும்பத்திற்குச் சொந்தமாக இருக்க அழைத்து விட்டுப், பின் அவர்களை குடும்பத்தை விட்டு வெளியேற ஒருபோதும் அனுமதிப்பது இல்லை. தேவன் கிறிஸ்தவர்களைப் பார்த்து, அவர்கள் ஓட்டத்தை நல்லவிதமாக முடிக்க மாட்டார்களென்று ஒருபோதும் எண்ண மாட்டார். ஒரு வேளை அது அதிக காலம் எடுக்கலாம். ஆனால் தேவன் எப்போதுமே தான் ஆரம்பித்த வேலையை முடிப்பார்.

- என்னுடைய தீயணைக்கும் வாகனம் பெறுமதியான ஒன்றாய் இருந்திருந்தால் நான் அதைச் செய்வதை பாதியில் நிறுத்தியிருக்க மாட்டேன். தேவன் ஏன் அவர் ஆரம்பித்ததை நிறுத்துவதில்லை? (எபேசியர் 5:25-27)

⊠ நாம் சிறந்த கிறிஸ்தவர்களல்ல என்று நாம் உணரக் கூடும். நாம் அடிக்கடி இயேசுவை ஏமாற்றத்திற்குள்ளாக்குகிறவர்களாக இருக்கலாம். சில வேளைகளில் நாம் விட்டுவிடக் கூட நினைக்கலாம். ஆனால், தேவன் ஒருபோதும் நம்மை விட்டுவிட மாட்டாரென்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் அவருக்கு அதிக பெறுமதி வாய்ந்தவர்கள். இயேசு நமக்காக அவருடைய இரத்தத்தை விலையாகச் செலுத்தியிருக்கிறார். இயேசு வரும்போது நாம் பூரணப்படுத்தப்படுவோம். நம்மில் அவரது பணி அப்போது முடிவடையும்.

## தேவனுக்கான நமது பணி

📖 பிலிப்பியர் 1:7~8

இந்த கிறிஸ்தவர்கள் தேவனின் பணியைச் செய்கிறார்களென்று எப்படி பவுல் நிச்சயமாக நம்பினார்? அதற்கு ஒரு காரணம் அவர் சிறையிலிருக்கும்போது அவர்கள் எப்படி சுவிசேஷத்திற்காக உழைத்தார்கள் என அவர்களைக் குறித்து, நல்ல காரியங்களை கேள்விப்பட்டதாகும். **தேவனுக்காக நாம் வேலை செய்வது, தேவன் நமக்குள் கிரியை செய்திருக்கிறாரென்பதைக் காட்டும்.**

**பிலிப்பியர் 1:3**ஐ நினைவு கூறவும். பிலிப்பியர் 1:7ல் அவர்கள் அவருடன் சுவிசேஷத்தில் பங்காளிகளாயிருந்த விதத்தைக் குறித்து இன்னும் அதிகமாகக் கூறுகிறார். பவுல் சிறையில் இருந்தார். எனவே அவர்கள் அவர் மேல் அக்கறை காட்டினார்கள். பவுலுக்கு அன்பளிப்புகளை எடுத்துக் கொண்டு அவர்களில் ஒருவர் வாரக்கணக்காக பிரயாணம் செய்து அவைகளைச் சிறையில் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்தார். பவுலினால் இப்போது சுவிசேஷப் பணியை செய்ய முடியாதபடியால் அவர்கள் அதைச் செய்தார்கள். எனவே பவுல் இந்தக் கிறிஸ்தவர்களைக் குறித்து எவ்வளவு மகிழ்ச்சியடைகிறார் என்று பாருங்கள். அவர் அவர்கள்மேல் அதிக அன்பு செலுத்துகிறார். அவருக்கு அவர்கள் மேல் முழு நம்பிக்கையிருக்கிறது.

⊠ மற்ற கிறிஸ்தவர்கள் உங்களைக் குறித்து நம்பிக்கையுள்ளவர்களாயிருக்க முடியுமா? ஏன் அல்லது ஏன் இல்லை? நீங்கள் எப்படி இந்த பிலிப்பிய கிறிஸ்தவர்களைப் போல இருக்க முடியும்?

# 3 நான் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறேன்

**பின்னணி**

இந்தக் கிறிஸ்தவர்களைக் குறித்து நினைக்கும் போது பவுலுக்கு அதிக மகிழ்ச்சியேற்படுகிறது. ஏனென்றால் தேவன் அவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்வதை அவரால் காணக்கூடியதாய் இருக்கிறது. அத்துடன் அவர்கள் அவருடன் சுவிசேஷ பணியில் பங்காளிகளாயிருப்பதையிட்டும் அவர் மகிழ்ச்சியடைகிறார். **பிலிப்பியர் 1:3~8.**

இந்த நண்பர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் **வளர** வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். எனவே,அவர் ஜெபிக்கிறார். அவர் எதற்காக ஜெபிக்கிறார் என்பதைக் கவனிக்கவும். இவைகளை ஏன் அவர் தெரிந்தெடுக்கிறார் என்பதைக் குறித்து சிந்திக்கவும். **பிலிப்பியர் 1:9~11.**

**முக்கிய விடயம்**

பவுல் **அதிக அன்புக்காக** ஜெபிக்கிறார்.

அதனால் நாங்கள் **சிறந்தவைகளை தெரிவு செய்கிறோம்,**

அதனால் நாங்கள் **தேவனுடைய புகழ்ச்சிக்காக ஜீவிக்கிறோம்.**

**நீங்கள் செய்ய வேண்டியது**

பவுலின் ஜெபங்கள் எப்படி நமக்கு ஜெபிக்க உதவியாயிருக்க முடியும் என்று சிந்திக்கவும். நாம் ஒருவருக்காக ஒருவர் எப்படி ஜெபிக்கிறோம்? இங்கே சொல்லப்பட்டிருக்கும் காரியங்களுக்காக ஜெபிப்பதற்கு எப்படி நீங்கள் உங்கள் மக்களுக்கு உதவ முடியும்?

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 1:9.** பவுல் இங்கே இரண்டு காரியங்களுக்காக ஜெபிக்கிறார். அவையாவன அதிக அன்பும், ஞானமுள்ள அன்புமாகும். அவர்கள் சரியானவைகளின் மேல் அன்பு செலுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.
- **பிலிப்பியர் 1:11.** நாம் சரியானவைகளின் மேல் அன்பு செலுத்தும்போது நாம் சிறந்தவைகளை தெரிவு ("பிரித்தறிவது") செய்வோம்! நாம் சிறந்தவைகளை தெரிவு செய்யும்போது, நாம் சரியான முறையில் வாழ்வோம் ("பரிசுத்தமும், குற்றமற்றதும்").

  அப்போது இயேசு வரும் நாளுக்கு நாம் ஆயத்தமாய் இருப்போம்.
- **பிலிப்பியர் 1:10.** நாம் சிறந்தவைகளைத் தெரிவு செய்யும்போது, நாம் வாழ்க்கையில் இயேசுவின்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:9-11

கனிகளால் நிறைந்திருப்போம். அவர் நம்மில் நல்லவைகளையும், பரிசுத்தமானவைகளையும் உருவாக்குவார். அது தேவனுக்கு மகிமையையும், துதியையும் கொண்டு வரும்!

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:9-11

### அதி சிறந்த அன்பு

பிலிப்பியர் 1:9

⊞ உங்களுக்கு நல்ல சூடான தீ இருக்கிறது என்று கற்பனை செய்யுங்கள். அதை மேலும் சூடாக்குவதற்கு நீங்கள் அதில் ஊதத் தேவையில்லை! அதில் இன்னும் அதிக மரக்கட்டைகளைப் போடவும் தேவையில்லை!

பிலிப்பியிலுள்ள கிறிஸ்தவர்கள் ஏற்கனவே வெதுவெதுப்பான அன்பினால் நிறைந்திருக்கிறார்கள். இப்போது அதிக மரக்கட்டைகளைப் போடச் சொல்வதைப் போலிருக்கிறது அவருடைய ஜெபம். அவர்கள் அன்பு இன்னும் அதிக சூடாக வேண்டுமென்று அவர் ஜெபிக்கிறார்.

அது அதிக சூடாக வேண்டுமென்று மட்டுமல்லாமல் அது **ஞானமுள்ளதாயிருக்க** வேண்டுமென்றும் அவர் ஜெபிக்கிறார்.அன்பும் சிலவேளைகளில் நெருப்பைப்போல கட்டுப்பாட்டை மீறி விடமுடியும். எனவே அவர்கள் சரியானவைகளின் மேல் அன்பு செலுத்த வேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார்.

- நாம் அன்பு செலுத்தக்கூடிய சரியானவைகள் என்ன?

பிழையானவைகள் என்ன? எப்படி நம்மால் கூற முடியும்?

நாம் வேதாகமத்தை வாசித்தால், தேவன் விரும்பும் நல்லவைகளின் மேல் நாம் அன்பு செலுத்துவதில் வளருவோம்.

உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை சிலவேளைகளில் குளிர்ச்சியும், சோர்வும் அடைந்து விடுகின்றதா? அதிக அன்புக்காக ஜெபியுங்கள்ய உங்களுக்காகவும், மற்ற கிறிஸ்தவர்களுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் அன்பு ஞானமுள்ளதாயிருக்க ஜெபியுங்கள். தேவன் அன்பு செலுத்துபவைகளின் மேலேயே நீங்களும் அன்பு செலுத்த வேண்டுமென்று ஜெபியுங்கள்.

## சிறந்த தெரிவுகள்

பிலிப்பியர் 1:9

- ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்யும் வித்தியாசமான தெரிவுகள் எவை?

உண்பதற்கு அல்லது அணிவதற்கு நாம் எதைத் தெரிவு செய்கிறோம் என்பது முக்கியமல்ல. ஆனால் நாம் பேசுவதற்கு, அல்லது செய்வதற்கு எதைத தெரிவு செய்கிறோம் என்பது முக்கியமாகும். சிலவேளைகளில் நமக்கு முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும். நாம் எப்படி **சிறந்தவைகளைத்** தெரிந்தெடுப்பது என்பதை அறிந்து கொள்ள பவுல் ஜெபிக்கிறார்.

நாம் கெட்டவைகளை மாத்திரமல்லாமல், சிலவேளைகளில் **சிறந்தவைகளைத்** தெரிவு செய்வதற்காக, **நல்லவைகளையும்** வேண்டாமென்று தள்ளிவிட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்!

(சில உதாரணங்களைக் கூறவும். அல்லது குழுக்களாக இதைக் குறித்து கதைக்கலாம். நாம் செய்யக்கூடிய அல்லது பேசக்கூடிய சிறந்தவைகள் எவை? அதன்பின் தேவன் எப்படி சரியானவைகளை தேர்வு செய்வது என்பதை உங்களுக்குப் கற்பிக்கும்படி ஜெபிக்கவும்)

## தேவனுடைய மகிமைக்காக ஜீவித்தல்

பிலிப்பியர் 1:10-11

நாம் சிறந்தவைகளைத் தெரிவு செய்யும்போது நமது வாழ்க்கைக்கு என்ன நடக்கிறது?

1. நமது வாழ்க்கையில் கெட்டவைகள் இருக்காது. (பிலிப்பியர் 1:11)
2. நமது வாழ்க்கையில் அதிகமான நல்லவைகள் இருக்கும். (பிலிப்பியர் 1:10)

அப்போது இயேசு மீண்டும் வரும்போது, நாம் அவருக்கு ஆயத்தமாயிருப்போம். நமது வாழ்க்கை தேவனுக்கு மகிமையையும் துதியையும் கொண்டு வரும்!

எல்லாவற்றையும் விட **அது** உங்களுக்கு தேவையா? நீங்கள் நல்லவர்களென்று **மற்றவர்கள்** நினைக்க வேண்டும் என்பதற்காக அல்ல. ஆனால் அதன் மூலம் **தேவனுக்குத்** துதி உண்டாக வேண்டுமென்பதற்காகய பவுலின் ஜெபத்தை ஜெபியுங்கள் - தேவன் **'ஆம்'** என்று கூறுவார்ய

# 4 முக்கியமான காரியம்

**பின்னணி**

பவுல் சிறையிலிருக்கிறார். ஆனால், பிலிப்பியிலிருக்கும் அவருடைய நண்பர்கள் அவரைக் குறித்துக் கவலைப்படுவதை அவர் விரும்பவில்லை. அதனால் அவர்கள் ஒன்றும் சரியில்லை என்று நினைத்து விடக்கூடாது என்று அவர் விரும்புகிறார். அவர்கள் இயேசுவைக் குறித்து மக்களுக்கு சொல்லுவதை விட்டுவிடக் கூடாது என்று அவர் விரும்புகிறார். தேவன் நடக்கும் காரியங்களை எப்படி பார்க்கிறாரோ, அப்படியே அவர்களும் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் சிறையிலிருக்கிறார். ஆனால் அவர் சந்தோஷமாயிருக்கிறார். ஏனெனில், மற்றவர்கள் இயேசுவைக் குறித்து மக்களுக்குக் கூறுவதால் அவர் சந்தோஷமாயிருக்கிறார்.

பிலிப்பியர் 1:12~18

பவுல் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிறார். ஆனால், இயேசுவைப் பற்றிக் கூற அவருக்கு சுதந்திரம் இருக்கிறது.

**முக்கிய விடயம்**

மக்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை கேள்விப்படுகிறார்கள் என்பதே முக்கிய காரியமாகும். நமது பிரச்சினைகள் முக்கியமல்ல.

**நீங்கள் செய்ய வேண்டியது**

மற்றவர்கள் இயேசுவைப் பிரசங்கிக்கும்போது, அவர்கள் பவுலைக் குறித்து பொறாமைப்படுபவர்களாயிருந்தாலும் கூட, அவர் சந்தோஷப்படுகிறார். இந்த மக்களுக்கு பவுலைக் குறித்து கெட்ட எண்ணங்களிருந்தன. ஆனால் அவர்கள் இயேசுவைக் குறித்து **உண்மையைக்** கூறுகிறார்கள்.

இயேசுவைக் குறித்து மக்கள் **தவறானவைகளைப்** போதிக்கும் போது, பவுல் ஒருபோதும் அதை விரும்புவதில்லை. நீங்கள் உரையாடும் மக்கள் இதைப் புரிந்துகொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள். மற்ற குழுக்கள் இயேசுவைக் குறித்து **தவறானவைகளைப்** போதிக்கும்போது நம்மால் ஒருபோதும் சந்தோஷமாயிருக்க முடியாது.

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 1:12.** பவுல் சிறையிலிருக்கிறார். ஆனால் அது சுவிசேஷத்தை தடை செய்யவில்லை. மாறாக, சுவிசேஷம் முன்னோக்கிப் போயிருக்கிறது! அதிகமான மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறார்கள்.
- **பிலிப்பியர் 1:13.** சிறையிலுள்ள ரோம சேவகர்கள் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறார்கள்.
- **பிலிப்பியர் 1:14.** சிறைச்சாலைக்கு வெளியே

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:12-18

ஏனைய போதகர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்க அதிக தைரியமடைந்திருக்கிறார்கள்.

- **பிலிப்பியர் 1:15-18.** பவுலை நேசிக்கிற சில போதகர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். மற்ற போதகர்கள் பவுலின் மேல் பொறாமை கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்! அவர்களுக்கு "சுயநலமான இலட்சியம்" இருக்கிறது.(மக்கள் அவர்களைக் குறித்து உயர்வாக நினைக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள்.) அவர்களுக்கு தவறான "ஊக்குவிப்பு" களிருந்தன. (தவறான காரணங்களுக்காக அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்பினார்கள்.) ஆனால், மக்கள் எவ்விதத்திலாவது இயேசுவைக் குறித்த நற்செய்தியை கேள்விப்படுகிறார்கள் என்பதே முக்கிய காரியமாகும். எனவே பவுல் அதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்!

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:12-18

⊞ (நாம் எல்லாவற்றையும் சரியான விதத்தில் பார்க்க வேண்டும் என்பதைக் காட்ட ஒரு கதையைக் கூறவும்) உங்கள் வெளிக்கதவினருகிலிருந்து ஒரு சத்தம் வருகிறது. நீங்கள் வெளியே பார்க்கும்போது ஒரு மனிதன் நிற்பதைக் காண்கிறீர்கள். ஒரு திருடன்! ஆனால் உங்கள் கண்பார்வை மங்கலாக இருப்பதால் மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு மீண்டும் பார்க்கிறீர்கள். அப்போது அங்கே உங்கள் நண்பர் உங்கள் கதவை திருத்துவதற்காக வந்திருப்பதை காண்கிறீர்கள்!

நாம் நமது மூக்குக் கண்ணாடிகளைப் அணிந்து கொண்டு எல்லாவற்றையும் சரியான விதத்தில் பார்க்க பவுல் உதவி செய்கிறார். நாம் முதலில் பவுலைச் சிறையில் பார்க்கிறோம். அப்போது நாம் கவலைப்படுகிறோம். அவரால் இப்போது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியாதென்று நாம் நினைக்கிறோம். இப்போது அம்மக்கள் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள முடியாதென்று நினைக்கிறோம். ஆனால் நாம் நமது மூக்குக்கண்ணாடிகளை அணிந்து கொண்டு சந்தோஷப்பட வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். "கெட்டவைகள்" உண்மையில் நல்லவைகளே!

- இந்தப் பகுதியிலுள்ள எந்த "கெட்ட" காரியங்கள் சுவிசேஷம் முன்னோக்கிச் செல்வதைக் காட்டுகிறது?

# பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:12 – 18

## சிறைச்சாலையில் சுவிசேஷம்

பிலிப்பியர் 1:12–13

சிறைச்சாலை பவுலுக்கு வேடிக்கையானதொரு இடமாய் இருக்கவில்லை. சங்கிலிகள் இரண்டு சேவகர்களோடு அவரை பிணைத்திருந்தன. ஆனால் பவுல் அதைக் குறித்துக் கவலைப்படவில்லை! அதன் அர்த்தம் அவரால் இயேசுவைக் குறித்து அந்த சேவகர்களிடம் கதைக்க முடியும். அப்போது அவர்கள் அதைப் பற்றி மற்ற சேவகர்களிடம் கதைப்பார்கள். அங்கே 9000 வரையிலான காவல் சேவகர்கள் இருந்தார்கள். அவர்கள் யாவரும் இயேசுவைப் பற்றிக் கேள்விப்படுவார்கள்! எனவே பிலிப்பியிலிருக்கும் அவருடைய நண்பர்கள் அதைக் குறித்து துக்கமல்ல சந்தோஷமே படவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

## சிறைக்கு வெளியே சுவிசேஷம்

பிலிப்பியர் 1:14–18

அவருடைய கட்டுக்களை விட அதிக வேதனையைக் கொடுக்கும் ஒன்றைக் குறித்து அவர் கேள்விப்படுகிறார். சிலர் அவர் மேல் பொறாமை கொண்டிருக்கிறார்கள். இப்போது பவுல் சிறையிலிருக்கிறார். எனவே அவர்கள் பெரிய போதகர்களாக வர விரும்புகிறார்கள். ஆனால், பவுல் அதன் நல்ல பக்கத்தைப் பார்க்கிறார். அதன் அர்த்தமானது அதிகமான மக்கள் இயேசுவைப் பிரசங்கிக்கிறார்கள் என்பதே! அவர்களுக்கு பவுலின்மேல் பகை உணர்விருக்கிறது, ஆனால் அவர்கள் மக்களுக்கு இயேசுவைக் குறித்த உண்மையை போதிக்கிறார்கள். எனவே பவுல் மகிழ்ச்சியடைகிறார்.

அவருடைய சில **நண்பர்களுக்கும்** அவர் உதவியிருப்பதைக் குறித்து பவுல் மகிழ்ச்சியடைகிறார். அவர்களுக்கு சிறையைக் குறித்து **பயமில்லை.** இப்போது அவர்கள் முன்பைவிட அதிக தைரியத்துடன் இயேசுவைப் பிரசங்கிக்கிறார்கள்!

**அதிகமான மக்கள் இயேசுவைக் குறித்த நற்செய்தியை கேட்கிறார்களென்பதே முக்கிய விடயமாகும்.**

- அதிகமான மக்கள் இயேசுவைக் குறித்து கேள்விப்படுவதால், எந்த கெட்ட காரியங்கள் உண்மையில் நல்ல காரியங்களாயிருக்க முடியும்?

உங்களுக்கும் அதுவே முக்கிய விடயமாக இருக்கிறதா? காரியங்கள் உங்களுக்குப் பிழைத்துப்போகும்போது, நீங்களும் அவ்விதமாகவே பார்க்கிறீர்களா? அல்லது நீங்கள் அதன் கெட்ட பக்கத்தை மட்டுமே பார்க்கிறீர்களா?

1956ல் தென் அமெரிக்காவில் ஜிம் எலியாட்டும் (துஅை நுட்டழைவ) இன்னும் நான்கு மிஷனரி ஊழியர்களும் அக்குவா இந்தியர்களால் (யுரஉய ஐனெயையௌ) கொலை செய்யப்பட்டபோது, அது மிகவும் கெட்ட காரியமாய்த் தோன்றியது. ஆனால் அந்த உதாரணம் அநேக மக்களை இயேசுவைக் குறித்து சொல்ல ஊக்குவித்தது.

பவுலைப்போல காரியங்களைப் பார்க்க உதவும்படி தேவனிடம் கேளுங்கள். அப்போது உங்களைப் புண்படுத்தும் சம்பவங்களைக் குறித்து நீங்கள் கவலைப்படமாட்டீர்கள். சுவிசேஷம் முன்னோக்கிப் போவதையே முக்கியமாகக் கருதுவீர்கள்.

# 5 இயேசுவின் தெரிவுகள்

### பின்னணி

இந்தக் கிறிஸ்தவர்கள் சிறந்தவைகளை தெரிவு செய்ய வேண்டுமென்று பவுல் **ஜெபித்திருக்கிறார்.** பிலிப்பியர் **1:9–11.** இப்போது அவர் தன்னுடைய சொந்த உதாரணத்தைக் கூறுகிறார். பவுல் சிறையிலிருக்கிறார். அவருக்கு என்ன நடக்கப் போகிறது என்று அவருக்குத் தெரியாது. அவர் எதைத் தெரிந்தெடுக்கிறார்?

பவுலின் தெரிவுகள் இயேசுவின் தெரிவுகளாயிருந்தன.

பிலிப்பியர் **1:19–26**

அவர் ஒரு அற்புதமான கிறிஸ்தவரென்று மக்கள் நினைக்க வேண்டுமென்று பவுல் விரும்பவில்லை. அவர்கள் எப்படி சிந்திக்க வேண்டுமென்பதை இந்த விசுவாசிகளுக்குப் பவுல் காட்ட விரும்புகிறார். நாம் சரியான விதத்தில் **சிந்திக்க** வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அப்போது நாம் சரியானதைத் **தெரிவு** செய்து, சரியானபடி **ஜீவிப்போம்.** அவருடைய உதாரணத்தின் மூலம் பவுல் நமக்கு உதவி செய்ய நினைக்கிறார். பிலிப்பியர் **3:17.**

### முக்கிய விடயம்

கிறிஸ்துவுடன் **சதாகாலமும்ஜீவிக்க** பவுல் வாஞ்சிக்கிறார். ஆனால் கிறிஸ்துவுக்கு **சேவை** செய்வது அதைவிடச் சிறந்தது.

### நீங்கள் செய்ய வேண்டியது

பவுலுக்கு உண்மையில் மரிப்பதையோ, அல்லது உயிரோடிருப்பதையோ தெரிந்தெடுக்க முடியாது. அது தேவனால் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்பது பவுலுக்குத் தெரியும். ஆனால் உங்களால் மரணம் ஆதாயமென்று கூற முடியுமா? அநேகர் மரணத்திற்கு அஞ்சுகிறார்கள். விசுவாசிகளுக்கு மரணம் பயப்படக் கூடியதொன்றல்ல என்பதை உங்கள் மக்கள் கண்டு கொள்ள உதவி செய்யுங்கள். அது அவர்களை அவர்கள் வீட்டில் கொண்டு போய் சேர்க்கிறது.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 1:19. இரட்சிப்பின்** மறுவார்த்தை “விடுதலை” அல்லது “விடுவிப்பு” என்பதாகும். ரோம ஆட்சியாளன் (இராயன்) அவரைக் குறித்து என்ன தீர்மானம் எடுப்பானென்று பவுலுக்குத் தெரியாது. ஆனால், தேவன் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்பாரென்பது பவுலுக்குத் தெரியும். அவர் மரித்தாலும் பவுல் பாதுகாப்பாயிருப்பார். எதுவாகவிருந்தாலும், அதைத் தேவன் அவருடைய “இரட்சிப்புக்காக” கிரியை செய்யப் பண்ணுவார். அது பவுலுக்கு நல்லது!

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:19-26

- **பிலிப்பியர் 1:20.** இராயன் அவரைக் கொல்லத் தீர்மானம் எடுத்தாலும் இயேசுவை மகிமைப்படுத்த தைரியத்தை பவுல் எதிர்பார்க்கிறார்.
- **பிலிப்பியர் 1:22-24.** இயேசுவுடனே போய் ஜீவிக்க பவுலுக்கு மிகவும் ஆசை. ஆனால் அவர் ஜீவித்திருப்பாரானால் அவருக்கு சுவிசேஷ வேலை இருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு அவர் உதவி தேவையாய் இருக்கிறது.
- **பிலிப்பியர் 1:25-26.** எனவே பவுல் தான் தொடர்ந்து ஜீவிக்கப் போவதாக நம்புகிறார். அவர்கள் விசுவாசத்தில் வளர வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அடுத்தமுறை அவர்களைச் சந்திக்கும் போது அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்க அவர் விரும்புகிறார்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:19-26

### ஜீவிப்பதா அல்லது மரிப்பதா?

**பிலிப்பியர் 1:21-22**

நீங்கள் ஜீவிக்கத் தயாரா? நீங்கள் மரிக்கத் தயாரா? அநேக மக்களுக்கு வாழ்க்கை அதிக கடினமாயிருக்கிறது – ஆனால் மரிப்பது அதைவிடக் கடினம். ஆனால் பவுல் ஏன் வித்தியாசமானவராயிருக்கிறார்?

அந்த வித்தியாசத்தை ஏற்படுத்துவது **கிறிஸ்துவே. "கிறிஸ்து எனக்கு ஜீவன்."** பவுல் சிறையிலிருப்பதை நினைத்துப் பாருங்கள். அவர் கைகளிலுள்ள சங்கிலிகள் அவருக்கு வலியை ஏற்படுத்துகின்றன. அவருக்கு வெளியே போக சுதந்திரமில்லை. ஆனால், அவரைப் பாருங்கள்! அவர் துக்கமாகவா இருக்கிறார்? அவர் அதைக் குறித்து குறை கூறுகிறாரா? இல்லை! அவர் இயேசுவின் நிமித்தம் மிகவும் சந்தோஷமாயிருக்கிறார். அவர் இயேசுவைப் பற்றிக் கதைக்கிறார். அவர் இயேசுவுக்காக சிறையிலிருக்கிறார். அவருடைய வாழ்க்கை இயேசுவைப் பற்றியதாயிருக்கிறது!

**"மரணம் எனக்கு ஆதாயம்" (அதிக நன்மையைக் கொண்டு வரும்).** பவுல் வாழ்க்கையை விட்டு **ஓடிவிட** விரும்பவில்லை. அவர் இயேசுவுடன் சதாகாலமும் ஜீவிக்க விரும்புகிறார்.

அது இன்னும் மகிழ்ச்சியாக இருக்கும். பவுல் மரணத்திற்கு அஞ்சவில்லை. மரணம் இயேசுவிடம் நம்மை வழிநடத்தும் ஒரு கதவைப் போன்றது.

உங்கள் வாழ்க்கையைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். ஒருவேளை உங்கள் வாழ்க்கை அநேக காரியங்களினால் நிறைந்திருக்கக் கூடும். ஒருவேளை அது காலியாக இருக்கக்கூடும்.

உங்கள் மரணத்தைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பயப்படுகிறீர்களா? மக்கள் ஏன் பயப்படுகிறார்கள்?

நாம் எப்போது மரிப்பது என்பதை நம்மால் தெரிவு செய்ய முடியாது. ஆனால், **நாம் எப்படி வாழ்வது** என்பதை நம்மால் தெரிவு செய்ய முடியும். நீங்கள் **கிறிஸ்துவுக்காக** வாழ்கிறீர்களா? அப்போது மாத்திரமே நீங்கள் மரணத்திற்கு அஞ்ச மாட்டீர்கள். ஏனென்றால் மரணம் உங்களை இயேசுவிடம் கொண்டு போய் சேர்க்கும்.

## இயேசுவா அல்லது நானா?

வாழ்க்கையின் தெரிவுகளை எப்படிச் செய்வது என்பதை பவுல் நமக்குக் காட்டுகிறார். பவுல், ஒன்று ஜீவிப்பார், அல்லது மரிப்பார். ஆனால், அவர் இரண்டு காரியங்களைத் தெரிவு செய்திருக்கிறார்.

### 1. கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது

பிலிப்பியர் 1:19-20

எந்த நாளிலாவது அவரை ஒரு சேவகன் சிங்கங்களிடம் அழைத்துச் செல்லலாம் என்பதை பவுல் அறிவார். ஆனால் பவுல் கவலைப்படவில்லை. பவுல் வேறொன்றைக் குறித்து அக்கறை உள்ளவராயிருக்கிறார் என எண்ணலாம். **கிறிஸ்துவை மகிமைப்படுத்த** அவருக்கு தைரியம் வேண்டும். தான் வாழப் போகிறேனா, அல்லது சாகப்போகிறேனா என்பதைவிட பவுலுக்கு இயேசுவே முக்கியம்.

### 2. மற்றவர்களுக்கு முதலிடம் தருவது

பிலிப்பியர் 1:19-20

பவுல் மரிப்பதற்கு அதிக விருப்பமுள்ளவராயிருந்தாலும், அவருக்கு அது சுயநலமாய்த் தோன்றுகிறது! ஏனென்றால் விசுவாசிகள் அவர் ஜீவிப்பதை விரும்புகின்றனர். பவுல் கிறிஸ்துவுடன் சென்று சந்தோஷமாயிருக்க விரும்பினாலும் இங்கே அவருக்கு அதைவிட அதிக முக்கியமான பணியிருக்கிறது! அவர் முதலில் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார். அவர் **அவர்களை** சந்தோஷப்படுத்த விரும்புகிறார். எனவே அவர் இயேசுவுடன் பரலோகத்தில் அனுபவிக்கப் போகும் சந்தோஷத்திற்காக சற்று காத்திருக்க நினைக்கிறார்!

இயேசுவா அல்லது நானா? ஒவ்வொரு நாளும் நாம் பலவற்றை தெரிவு செய்கிறோம். இந்தத் தெரிவுகள் நான் **கிறிஸ்துவை மகிமைப்படுத்த** விரும்புகிறேனா அல்லது என்னைப் பிரியப்படுத்த விரும்புகிறேனா என்பதைக் காட்டும். அவை நான் **மற்றவர்களை முதலில் வைத்திருக்கிறேனா** அல்லது என்னையா என்பதைக் காட்டும். (அந்தத் தெரிவுகளைக் குறித்து அதிகமாக உரையாடவும். உதாரணம் காட்டவும்)

# 6 சுவிசேஷப் போராட்டம்

### பின்னணி

ஏன் பவுல் தன் சொந்தப் பிரச்சினைகளைக் குறித்து அதிகம் கூறியிருக்கிறார்? பிலிப்பியர் 1:12~26.

பிலிப்பியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய பிரச்சினைகளில் உதவி செய்யவே பவுல் அவைகளைக் கூறுகிறார்! இந்த அதிகாரத்தின் முக்கிய விடயத்திற்கு பவுல் வந்திருக்கிறார். **அவர்** சுவிசேஷத்திற்காகப் போராடுவதைப் போல, இயேசுவின் சத்தியத்திற்காக (சுவிசேஷம்) பிலிப்பியில் இருக்கும் கிறிஸ்தவர்களும் போராட வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். பிலிப்பியர் 1:27~30.

### முக்கிய விடயம்

பவுலைப் போலிருங்கள். சுவிசேஷத்திற்காக வாழுங்கள். சுவிசேஷத்திற்காக பாடனுபவியுங்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது

இது ஒரு போதகருக்கு அல்லது ஆசிரியருக்கு மிகவும் உபயோகமானதொரு பகுதியாகும். அதைக் குறித்து அதிகமாக ஜெபியுங்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் இப்படி கழிக்க விரும்புகிறீர்களா? உங்கள் சபைக் குடும்பம் சுவிசேஷத்தைப்பற்றி இப்படியா நினைக்கிறது? அதிகமான மக்கள் இயேசுவைப் பற்றிக் கேட்கவும், அவருக்காக வாழவும் வழிநடத்தப்படுவதற்காக நீங்கள் சபையோடு ஒன்றிணைந்து பணி செய்வதில் அவர்களுக்கு உதவி செய்கிறீர்களா?

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 1:27.** நமது வாழ்க்கை நாம் சொல்லும் சுவிசேஷத்தைப் போலிருக்க வேண்டும். நமது வாழ்க்கை அன்பினாலும், சத்தியத்தினாலும் நிறைந்திருக்க வேண்டும். ஏனென்றால் சுவிசேஷம் அன்பினாலும், சத்தியத்தினாலும் நிறைந்து காணப்படுகிறது.
- **பிலிப்பியர் 1:27.** பவுல் பிலிப்பிக்கு வரும்போது (அல்லது அவர்களைக் குறித்த செய்தியைக் கேள்விப்படும்போது) அவர் எதைக் காண்பார்? சுவிசேஷத்திற்காக எல்லோரும் **ஒன்றிணைந்து** போராடுவதை பவுல் காண விரும்புகிறார். அது ஒரு குழு விளையாட்டைப் போன்றது. ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவு திறமையாக விளையாட வேண்டும். வெற்றி பெறுவதற்கு அவர்கள் **ஒன்றாக இணைந்து** விளையாட வேண்டும்.
- **பிலிப்பியர் 1:28.** நாம் நமது எதிரி நம்மை பயமுறுத்த இடம் கொடுக்காமல் இருக்கும்போது அது இரண்டு விடயங்களைக் காட்டும். 1. அது அவர்கள்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 1:27–30

தோல்வி அடைவார்கள் என்பதையும், தேவன் அவர்களைத் தண்டிப்பாரென்பதையும் காட்டும். 2. அது தேவன் நம்மை இரட்சித்திருப்பதையும், அவர் கடைசிவரை நம்மைக் கைவிட மாட்டாரென்பதையும் காட்டும்.

- **பிலிப்பியர் 1:29.** இயேசுவுக்காகப் பாடனுபவிப்பது ஒரு சிலாக்கியம் அல்லது பெருமையாகும். அது தேவனின் **ஈவு.** தேவன் ஒரு கிறிஸ்தவனுக்கு **விசுவாசத்தையும், பாடனுபவித்தலையும்** தருகிறார்.
- **பிலிப்பியர் 1:30.** பவுல் சிறையிலிருக்கிறார். ஆனால் அவர் மட்டும் பாடனுபவிக்கவில்லை! அவர்கள் சுவிசேஷத்திற்காகப் போராடும்போது தேவனுடைய எல்லா மக்களும் ஒன்றாகப் பாடனுபவிக்கிறார்கள்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 1:27–30

### சுவிசேஷத்திற்காக வாழுங்கள்

பிலிப்பியர் 1:27

- சிலவேளைகளில் நல்ல திறமையான விளையாட்டு வீரர்கள் மோசமாக நடந்து கொள்வார்கள். (ஒரு உதாரணத்தை குறித்து சிந்திக்கவும்). அவர்களுடைய மோசமான நடத்தை அந்த விளையாட்டைப் பாதிக்கும்.
- கிறிஸ்தவர்கள் மோசமாக நடந்து கொள்ளும்போது அவர்கள் கூறும் செய்தியைக் குறித்து அது எப்படி மக்களை நினைக்கப் பண்ணும்? எந்த விதமான நடத்தை, மக்கள் இயேசுவை விட்டு புறக்கணிக்கப் பண்ணுகிறது?

இயேசுவைப் பற்றிய நற்செய்தி எவ்வளவு அழகானது என்று நினைத்துப் பாருங்கள். அது அன்பும், சத்தியமும், சந்தோஷமும் நிறைந்ததாயிருக்கிறது. **நமது வாழ்க்கை சுவிசேஷத்தைப் போலிருக்க வேண்டும்!** அது அன்பும், சத்தியமும், சந்தோஷமும் நிறைந்து காணப்பட வேண்டும்.

> தேவனை எது சந்தோஷப்படுத்துகிறது? நாம் அதிகமான வரங்களையுடையவர்களாய் இருப்பதா, அல்லது இயேசுவைப் போலிருப்பதா? இயேசுவைப் பற்றி அதிகமாகக்

கதைப்பதா, அல்லது நமது செய்தியைப் போல் வாழ்வதா?

## சுவிசேஷத்திற்காகப் போராடுங்கள்

பிலிப்பியர் 1:27

⊕ நீங்கள் ஒரு ஓட்டப் பந்தயத்திலிருக்கிறீர்கள் என்று கற்பனை செய்யுங்கள். அதற்கு ஒரு பெரிய பரிசு உண்டு. (அதில் வெற்றியடைய நீங்கள் எவ்வளவு கடினப்பட்டு முயற்சி செய்வீர்கள் என்பதை விளக்கவும்.)

நாம் சுவிசேஷத்திற்காக அதைவிட அதிகமாகக் கஷ்டப்பட வேண்டும். ஆனால் நாம் தனியாக ஓடுவதில்லை. நாம் ஒரு குழுவாகப் பிரயாசப்படுகிறோம். நாம் அதை விட்டுவிடக் கூடாது. நாம் ஒருவரையொருவர் குறை கூறக்கூடாது. நாம் மற்றவர் மனதைப் புண்படுத்தக் கூடாது. அப்படிச் செய்தால் நம்மால் ஒரு போதும் பந்தயத்தில் வெற்றியடைய முடியாது! இயேசுவின் சுவிசேஷம் மிக முக்கியமானது. எனவே நாம் ஒன்றாக இணைந்திருப்பது முக்கியம். அப்போது நம்மைச் சுற்றியுள்ள மக்களால் இயேசுவைக் குறித்த உண்மையை அறிந்து கொள்ள முடியும்.

⊳ சுவிசேஷம் உங்களுக்கு எவ்வளவு முக்கியம்? இயேசுவைப் பற்றி மக்கள் அறிந்த கொள்ளத்தக்கதாக நீங்கள் **ஒன்றிணைந்து பணி** செய்ய விரும்புகிறீர்களா? சண்டைகள் அல்லது பொறாமையான எண்ணங்கள் உங்களை தடை செய்ய இடமளிப்பீர்களா?

## சுவிசேஷத்திற்காகப் பாடனுபவியுங்கள்

பிலிப்பியர் 1:28~30

சாத்தான் சுவிசேஷத்திற்கு விரோதமானவன். எனவே சாத்தானின் பக்கமுள்ள மக்கள் சுவிசேஷத்திற்கு எதிரானவர்கள். சுவிசேஷத்திற்காகப் பாடுபடும் கிறிஸ்தவர்களை அவர்கள் தாக்குவார்கள். நாம் இயேசுவுக்காக பாடனுபவிக்கும்போது நம்மை தைரியப்படுத்த பவுல் மூன்று காரியங்களைச் சொல்கிறார்.

1. அது ஒரு **அடையாளம். பிலிப்பியர் 1:28.** நாம் இயேசுவைப் பின்பற்றுவதால் மக்கள் நமக்கு விரோதமாக இருக்கலாம். ஆனால், அது நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் என்பதைக் காட்டுகிறது. அது நாம் வெற்றியடைவோம், நமது எதிரிகள் தோல்வியடைவார்களென்பதைக் காட்டுகிறது.

2. அது ஒரு **ஈவு. பிலிப்பியர் 1:29.** இயேசுவில் விசுவாசம் வைப்போருக்கு தேவனின் நல்ல ஈவாகும். அதுபோல அவருக்கான பாடுகளையனுபவிப்பதற்குமான தேவனுடைய ஈவாகும்! மத்தேயு 5:10~12.

3. அது **சாதாரணமானது. பிலிப்பியர் 1:30.** சிறையிலிருக்கும் பவுல் விசுவாசிகளை ஊக்குவிக்க விரும்புகிறார். “பாடனுபவிப்பது நல்லது! விசுவாசத்தை விட்டு விடாதிருங்கள். நாம் இந்தப் போராட்டத்தில் ஒன்றாயிருக்கிறோம்!”

# 7 ஒன்றையே சிந்திக்கவும்

### பின்னணி

பவுல் தான் உயிரோடிருக்க விரும்புவதற்கான காரணத்தை இந்தக் கிறிஸ்தவர்களிடம் கூறுகிறார். அவர் **கிறிஸ்துவுக்காக** ஜீவிக்கிறார். (பிலிப்பியர்1:21). அவர் **சுவிசேஷத்திற்காக** ஜீவிக்கிறார். (பிலிப்பியர் 1:12,16,18,25).

பவுல் அவர்கள் (நாமும் கூட) **கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும்** வாழ வேண்டுமென்று விரும்புகிறார் (பிலிப்பியர் 1:27).

ஆனால் இதை இரண்டு விதமான காரியங்களால் தடுக்க முடியும்.

- **வெளியிலிருந்து வரும் தாக்குதல்.** கிறிஸ்தவர்களல்லாத மக்களிடமிருந்து வரும் பிரச்சினைகள். 📖 **பிலிப்பியர் 1:27~30**
- **உள்ளான தாக்குதல்.** கிறிஸ்தவர்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகள். 📖**பிலிப்பியர் 2:1~4, 4:2~3**

### முக்கிய விடயம்

ஒன்றையே நினையுங்கள்! (கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் முதன்மையாக வையுங்கள்) அப்போது ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவீர்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது

உங்கள் சபையில் கிறிஸ்தவர்களைப் பிரிப்பவைகள் எவை? இவைகளில் அதிகமானவை மிகச் சிறிய பிரச்சினைகளாகவே இருக்கும். அவை முக்கியமல்ல. அவை இயேசுவின் உண்மையான செய்தியைக் குறித்தவையல்ல. மக்கள் இதைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு நீங்கள் எப்படி உதவ முடியும்?

நாம் கிறிஸ்துவின் மேலும், சுவிசேஷத்தின் மேலும் அதிக அக்கறையுள்ளவர்களாயிருந்தால் நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்துகிறவர்களாயிருப்போம். அப்போது சிறிய காரியங்கள் பெரிதாகத் தோன்றாது.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 2:1.** "உங்களிடம் இருந்தால்" (சில மொழிபெயர்ப்புகளில்). இதற்கு அர்த்தம் யாதெனில், இந்த ஆசீர்வாதங்கள் யாவும் இருப்பதால் நீங்கள் ஒன்றையே நினையுங்கள் என்பதாகும்.
- **பிலிப்பியர் 2:3.** உங்களைப் பெருமை கொள்ளச் செய்யும் எதையும் செய்ய வேண்டாம். தாழ்மையாயிருங்கள் மற்றவர்கள் உங்களை விட முக்கியமானவர்களென்று நினையுங்கள்.

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 2:1 –4

- **பிலிப்பியர் 2:4.** “எனக்கான ஆர்வம்” என்பது “நன்மை” அல்லது “சிலாக்கியம்” என அர்த்தப்படும். உங்களுக்கு மட்டுமேயல்லாமல், மற்றவர்களுக்கும் பிரயோஜனமான காரியங்களைச் செய்யுங்கள்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:1 –4

### ஆபத்து

பிலிப்பியர் 2:3

> நீங்கள் ஒரு அரசியல்வாதிக்கு வாக்களிக்கும்போது எதைக் குறித்து அக்கறைப்படுவீர்கள்? அவர் நல்லவராகவும், ஏழைகளுக்கு உதவி செய்கிறவராகவும் இருக்க வேண்டுமென்றா?, அல்லது **உங்களுக்கு** அதிகமாகப் பணம் கொடுப்பவராக இருக்க வேண்டுமென்றா?

நாம் சுயநலமாக எளிதில் செயல்பட்டு விடலாம்! ஆனால் இயேசு அவருடைய மக்களை மாற்றியிருக்கிறார். கிறிஸ்தவர்கள் அதிகமாக அவர்களைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. ஆனால் சாத்தான் நாம் இதை மறக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். நாம் சுயநலவாதிகளாகவும், பெருமையுள்ளவர்களாகவும், இலட்சியம் உள்ளவர்களாயும் இருக்க வேண்டுமென்று அவன் விரும்புகிறான்.

(இதைக் குறித்து குழுக்களாக உரையாடுவது நல்லது).

- தேவனுடைய மக்கள் மத்தியில் **பெருமையான சிந்தனை** எந்த விதங்களில் வெளிப்படும்?
- அதன் விளைவுகள் என்ன?

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:1 –4

அதைக் குறித்து சிந்தித்து, ஜெபிக்க நேரத்தை ஒதுக்குங்கள். உங்களை மன்னித்து, மாற்றும்படி தேவனிடம் கேளுங்கள்.

### பதில்

பிலிப்பியர் 2:2~4

நாம் படிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம் **சரியாக சிந்திப்பதே**யாகும். நாம் சரியாக சிந்திக்கப் பழகாத வரையில் நம்மால் ஒருபோதும் சரியாக வாழ முடியாது.

எல்லா இடங்களிலுமுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்றையே சிந்திக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்! ஒரே ஆவி, ஒரே நோக்கம், ஒரே விருப்பங்கள், ஒரே அன்பு!

இயேசுவே எல்லாம் என்று விசுவாசிகள் நினைக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்! எல்லா மக்களும் இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தைக் கேட்க வேண்டுமென்று நாம் நினைக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் முக்கியமல்ல என்பதை, நாம் நினைக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். மற்றக் கிறிஸ்தவர்கள் முக்கியமென்று நாம் நினைக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

அப்போது நாம் ஒற்றுமையாகவும், தாழ்மையுள்ளவர்களாயும், அன்புள்ளவர்களாகவும் இருப்போம். ஒன்றாக நாம் இயேசுவுக்காக ஜீவிப்போம். பிலிப்பியர் 1:27ஐ நினைவு கூரவும்.

### காரணம்

பிலிப்பியர் 2:1

நாம் ஏன் பிலிப்பியர் 2:2-4ஐப் போல் வாழ வேண்டும்? ஏன் சுய நலமாயிருக்கக் கூடாது?

**ஏனென்றால் நாம் இயேசுவை அறிந்திருக்கிறோம்!** (பிலிப்பியர் 2:1).

உண்மையான கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கும் நான்கு ஈவுகளையும் குறித்து உரையாடவும்.)

தேவனிடத்திலிருந்து வந்த இந்த ஈவுகள் நம்மை மாற்றி இருக்கின்றன. எனவே நாம் சுயநலமாகவும், பெருமையாகவும் இருக்க முடியாது! தேவன் நமக்கு அதிகமாய் கொடுத்திருக்கிறார். எனவே நாம் நம்மிடமுள்ள எல்லாவற்றையும் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய தாராளமான அன்பு உங்களை தாழ்மையுள்ளவராயும், அன்புள்ளவராயும் மாற்ற வேண்டும் என்று ஜெபியுங்கள்.

நீங்கள் இயேசுவை இப்படியாக ஒருபோதும் அறியாமலிருக்கக் கூடும். உங்களை மாற்றும்படி ஜெபியுங்கள்.

**கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 2:5–11**

# 8 இயேசுவைப் போல சிந்திக்கவும்!

### பின்னணி

இந்த கிறிஸ்தவர்களைக் குறித்த பவுலின் பெரும் விருப்பங்களில் ஒன்று அவர்கள் **சரியாக சிந்திக்க** வேண்டும் என்பதாகும். அதற்காக அவர் **ஜெபித்திருக்கிறார்** (பிலிப்பியர் 1:9-11). அவர்கள் **தன்னைப்** போல சிந்திக்க வேண்டுமென்பதற்காக,அவர்களுக்கு அவர் அவருடைய சிந்தனை என்ன என்பதைக் கூறியிருக்கிறார். (பிலிப்பியர் 1:12-26). அவர்கள் சரியாக சிந்திக்க வேண்டுமென்று அவர் அவர்களுக்குக் கூறியிருக்கிறார் (பிலிப்பியர் 2:1-4).

இப்போது பவுல் இயேசு கிறிஸ்துவை நமக்கு சுட்டிக் காட்டுகிறார். நாம் கிறிஸ்துவைப் போல சிந்திக்க வேண்டும். அவருடைய மனப்பான்மை நமக்கு இருக்க வேண்டும். **பிலிப்பியர் 2:5~11**

### முக்கிய விடயம்

இயேசுவைப் போல சிந்தியுங்கள். அவர் தாழ்மை உள்ளவராய் இருந்தார். அவருடைய மக்களை மீட்பதற்காக அவர் எல்லாவற்றையும் கொடுத்தார்.

### நீங்கள் செய்ய வேண்டியது

இந்தப் பகுதி முழுதும் இயேசுவைப் பற்றியதாயிருக்கிறது. அவரை மக்கள் நேசித்து அவரை ஆராதிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால் முக்கிய விடயத்தை மறந்து விட வேண்டாம்! பவுல் இவை யாவையும் கூறுவதற்கான காரணம் **நாம் இயேசுவைப் போலிருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.** இயேசுவைப் போல நாம் நம்மைத் தாழ்த்தி, மற்ற மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 2:6-7.** இயேசு தேவனாவார். அவர் பரலோக மகிமையை உடையவராயிருக்கிறார். ஆனால் அவர் அதைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை. அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரு சிறுகுழந்தையாக மாறினார். நிச்சயமாக இயேசு தொடர்ந்து தேவனாகவே இருக்கிறார்! ஆனால், அவர் ஒரு ஏழை மனிதனாக உலகில் வாழ்ந்தார்.
- **பிலிப்பியர் 2:7.** “அடிமையின் ரூபமெடுத்து”. இயேசு சேவை செய்ய வந்தார். அவர் தன்னுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்தார். அவர் இந்த உலகத்தில் வரும்போது ஒரு முக்கியமான மனிதராக வரவில்லை. அவர் ஒரு ஊழியக்காரராக வந்தார்.
- **பிலிப்பியர் 2:8.** மிகவும் அவமானமான, தாழ்ந்த இடம் சிலுவையே. இயேசு மிகவும் மோசமான மனிதனைப்போல மரித்தார். (கலாத்தியர் 3:13 ஐயும் பார்க்கவும்)

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 2:5–11

- **பிலிப்பியர் 2:9.** இயேசு மிகவும் தாழ்ந்த இடத்திற்குப் **போனதால்**, அவர் மிக உயர்ந்த கௌரவத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ளவராயிருக்கிறார். **சிலுவை** இயேசுவுக்கு அதிக புகழ்ச்சியைக் கொண்டு வருகிறது! இயேசுவுக்கு அதிக வேதனையைக் கொடுத்த காரியமே, அவர் செய்த மிகச் **சிறந்த** காரியமாயிருக்கிறது. (வெளிப்படுத்தல் 5:12)
- **பிலிப்பியர் 2:10-11.** எல்லா மக்களும் இயேசுவின் மேல் அன்பு செலுத்துவார்களென்பது இதன் அர்த்தமல்ல. ஆனால் அவரை வெறுக்கும் மக்களும் கூட ஒருநாள் அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு அவரை வணங்க வேண்டியிருக்கும்!

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:5–11

(இயேசுவைத் துதித்து, மகிமைப்படுத்தும் சில பாடல்களைப் பாடி ஆரம்பிக்கவும்)

### இயேசுவைப் போல சிந்திக்கவும்

📖 பிலிப்பியர் 2:5~8

⊞ (மிக முக்கியமானதொரு பதவியிலிருக்கும் ஒருவரைப் பற்றியதொரு கதையைக் கூறவும். இந்த மனிதர் மிகவும் தாழ்மையுள்ளவராய் மாறுகிறார். மற்றவர்கள் செய்ய விரும்பாததொரு வேலையை அவர் செய்கிறார்.)

இப்போது இயேசு யாரென்று நினைத்துப் பாருங்கள்! அவர் எல்லாவற்றையும் படைத்தவர்! அவர் தேவன்! எல்லா தேவ தூதர்களும் அவரை ஆராதிக்கிறார்கள்!

இயேசு பரலோகத்தில் மிக உயர்ந்த ஸ்தலத்திலிருந்து பூமியின் மிகத் தாழ்ந்த இடத்திற்கு வந்தார்! அவர் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு, ஒன்றுமில்லாதவரானார். (இயேசு குழந்தையாக மாறவும், சிலுவைக்குப் போகவும் சம்மதித்ததைக் குறித்து பேசவும்.) எல்லா மக்களும் அவரைத் துதிப்பதற்கு அவர் தகுதியுள்ளவராயிருக்கிறார்! ஆனால் மக்கள் அவர் மேல்

துப்பி, அவரைப் பார்த்து நகைத்து, அவரைக் கொன்று போட்டார்கள்.

இயேசு இதைத் தெரிவு செய்தார்! அவர் ஊழியக்காரனாய் இருப்பதைத் தெரிந்து கொண்டார். அவரைத் துதியுங்கள்!

இயேசுவைப் போல சிந்தியுங்கள் ஒரு **ஊழியக்காரனைப் போல** சிந்தியுங்கள். இயேசுவைப் போல நடந்து கொள்ளுங்கள். **பிலிப்பியர் 2:5.** ஒன்றுமில்லாதவராயிருப்பதைக் குறித்து சந்தோஷப்படுங்கள்.

(உதாரணங்களைக் காட்டுங்கள். இது எப்படி நமது வாழ்க்கையில் வெளிப்படும் என்பதைக் குறித்துக் உரையாடவும்.)

- இயேசு இவை யாவையும் **ஏன்** செய்தார்? அவர் என்ன நினைத்திருந்தார்?

**மக்களை இரட்சிப்பதற்கு** இந்த வழி மட்டுமே இருந்தது. அதனால்தான் இயேசு ஒன்றுமில்லாதவராய் மாறினார். அவர் பாவிகளை அவ்வளவாக நேசித்தார்! அவர் ஒரு குற்றவாளியைப் போல சிலுவைக்குப் போக விருப்பமுள்ளவராயிருந்தார். அவரைப் போற்றுங்கள். அவர் மேல் அன்பு செலுத்துங்கள்!

எனவே நீங்கள் உங்கள் சபையில் கீழான வேலைகளைச் செய்ய விருப்பமுள்ளவர்களாயிருப்பீர்களா? நீங்கள் உங்களைத் தாழ்த்தி மற்றவர்களுக்கு முதன்மை ஸ்தானம் கொடுப்பீர்களா? அப்படியில்லா விட்டால் உங்களைக் குறித்து அது எதைக் காட்டுகிறது?

## இயேசுவுக்கு மகிமை

**பிலிப்பியர் 2:9~11**

யாரைத் தேவன் கௌரவிக்கிறார்? இயேசு எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரு ஊழியக்காரனாய் மாறினதால் தேவன் அவரை கௌரவிக்கிறார்!

உங்கள் ஊரிலோ அல்லது நகரத்திலோ ஒரு சிறு பிள்ளையைக் காப்பாற்ற தன் உயிரையே பணயம் வைத்த ஒருவரை நீங்கள் எப்படிக் கௌரவிப்பீர்கள்? இயேசு அவருடைய எல்லாப் பிள்ளைகளையும் நரகத்திலிருந்து காப்பற்ற அவருடைய உயிரைக் கொடுத்தார்! அதற்காக அவரை நாம் எப்படி கனப்படுத்த வேண்டும்! பிதா எப்படி அவரைக் கனப்படுத்துகிறார்! **பிலிப்பியர் 2:9~11**

நீங்கள் இயேசுவைத் துதித்து, அவரைக் கனப்படுத்துகிறீர்களா? அதைப் பிற்போட வேண்டாம். அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு இயேசுவை எல்லோரும் வணங்கும் அந்த நாள் **வரை** அதைத் தள்ளிப் போட வேண்டாம். அந்த நாளில் அவர் மீண்டும் வரும்போது எல்லோரும் இயேசுவை வணங்குவார்கள். இது அவர்கள் விரும்புவதாலல்ல. ஆனால், தேவன் இயேசுவுக்கு எல்லோரும் தங்கள் கௌரவத்தை செலுத்தும்படி உறுதி செய்வார்.

உங்கள் வாழ்க்கை இப்போது எப்படியிருக்கிறது? இயேசு துதிக்கும் கனத்துக்கும் பாத்திரராயிருக்கிறார்யூ அவர் சதாகாலங்களிலும் துதிக்குப் பாத்திரராயிருக்கிறார். இது எப்படி நமது வாழ்வில் வெளிப்படும்?

# 9 இரட்சிப்பு பிரகாசிக்கிறது

**பின்னணி**

பவுல் கூறும் மிக முக்கிய விடயம் பிலிப்பியர் 1:27 ஆகும். பவுல் அவர்களும் (நாமும்) கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும் வாழ வேண்டுமென்று விரும்புகிறார்.

எனவே அவர் அதற்கான நமக்குக் காட்டும் சிறந்த உதாரணம், இயேசு பிலிப்பியர் 2:1–11.

இப்போது பவுல் அவருடைய முக்கிய விடயத்திற்கு மீளவும் வருகிறார். பிலிப்பியர் 2:12-18. "ஆதலால்" (பிலிப்பியர் 2:12) என்று அவர் கூறியிருப்பது: "**இயேசு அப்படிச் செய்தபடியால்** (பிலிப்பியர் 2:1-11) நாமும் அப்படியே ஜீவிக்க வேண்டுமென்று கூறுவதாகும். அவர் உங்களை இரட்சித்தார். எனவே அவர் கொடுத்த அந்த இரட்சிப்பு உங்கள் மூலம் பிரகாசிக்க வேண்டும்." என்று அவர் கூறுகிறார்.

**முக்கிய விடயம்**

தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பு வெளியே தெரியக்கூடியது. அது உங்கள் வாழ்க்கையில் பிரகாசிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**நீங்கள் செய்ய வேண்டியது**

பிலிப்பியர் 2:12ல் பவுல் நாம் நமது இரட்சிப்பை சம்பாதிக்க வேண்டுமென்று கூறவில்லை! இரட்சிப்பு தேவனுடைய ஈவு. இயேசு சிலுவையின் மூலம் அவருடைய மக்களை **முற்றிலும்** இரட்சிக்கிறார். நாம் செய்யும் எதுவும் நம்மை இரட்சிக்க நமக்கு உதவாது.

ஆயினும், தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பு நம்மால் மறைத்து வைக்கக்கூடியதொன்றல்ல. அது நாம் உபயோகிக்க வேண்டியதொரு ஈவாகும். நாம் அதை வைத்துக்கொண்டு சோம்பேறித்தனமாயிருக்க கூடாது. நாம் அதை வெளியே காட்ட வேண்டும். நாம் நட்சத்திரங்களைப்போல பிரகாசிக்க வேண்டும்.

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 2:12.** "அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும்." கிறிஸ்தவர்கள் தேவனுக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் தேவனை துக்கப்படுத்தும் எதையும் செய்ய நாம் விரும்பக்கூடாது. இரட்சிப்பு ஒரு பெரிய ஈவு. நாம் தேவனால் இரட்சிக்கப்பட்ட மக்களாக வாழ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.
- **பிலிப்பியர் 2:15.** "கோணலும், மாறுபாடுமான சந்ததி" நம்மைச் சுற்றியுள்ள உலகம் கெட்டுப் போயும். (நேர்மையானதல்ல) தீமையாகவும் இருக்கிறது. ஆனால், கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்களாயிருக்க வேண்டும்.

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 2:12–18

- **பிலிப்பியர் 2:14.** “கிறிஸ்துவின் நாளில்” என்பது இயேசு கிறிஸ்து மீண்டும் வரும் நாள். இந்தக் கிறிஸ்தவர்கள் கடைசி வரை இயேசுவைப் பின்பற்றுவதை பவுல் உறுதி செய்ய விரும்புகிறார். அப்போது அவருடைய கடினமான உழைப்பு பயனுள்ளதாயிருக்கும்.
- **பிலிப்பியர் 2:17-18.** ரோம அரசனான இராயன் அவரை கொன்று விடக்கூடும் என்று பவுல் நினைக்கிறார். அவருடைய வாழ்க்கை பழைய ஏற்பாட்டு பலியைப்போல தேவனுக்கு கொடுக்கப்படப்போவதாக அவர் கற்பனை செய்கிறார். அவர் இப்படிக் கூறுகிறார்: “நான் உங்களுக்காக மரிக்க விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். உங்கள் விசுவாச வளர்ச்சிக்கு உதவியாக தான் எதாவது செய்திருப்பேனானால், அதற்கு மரணத்தை விலையாகச் செலுத்த விருப்பமாயிருக்கிறேன். கவலைப்படவேண்டாம். தேவனைத் துதியுங்கள்!”

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:12–18

### உங்கள் இரட்சிப்புக்காகப் பிரயாசப்படுங்கள்!

**பிலிப்பியர் 2:12–14**

⊞ உங்களுக்கு ஒரு பெரிய பரிசு கிடைக்கிறது என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு பசு மாடு! அதன் மூலம் உங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். எனவே நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் சோம்பேறித்தனமாக அந்த பசுமாட்டிற்கு ஒன்றும் செய்யாமலிருப்பீர்களா? அல்லது அதை நன்றாகக் கவனித்து அதன் மூலம் ஒவ்வொரு நாளும் பாலைப் பெற்றுக் கொள்வீர்களா?

தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பும் அப்படித்தான். அந்தப் பசுமாட்டைப்போல அதற்கு விலையில்லை. நாம் அதைக்குறித்து சோம்பேறித்தனமாக இருக்கக்கூடாது. அவருடைய இரட்சிப்பின் ஈவு நம் வாழ்க்கையில் கிரியை செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

- அது எந்த விதமான காரியங்களில் கிரியை செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்? (உதாரணங்கள்: பிலிப்பியர் 2:14,16). உங்களுக்கு அது எளிதாகத் தோன்றுகின்றதா? **பிலிப்பியர் 2:13**

நமக்கு நல்ல செய்தியிருக்கிறது. தேவன் நம்மைத் தனியாகக் கிரியை செய்ய விட்டுவிடுவதில்லை. அவர் நம்முடனும், நமக்குள்ளும் கிரியை செய்கிறார்! நமக்காக அவர் ஒரு பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார். அவர் நம்மை இயேசுவைப்போல தூய்மையும், பரிசுத்தமும் உள்ளவர்களாய் மாற்ற திட்டம் வைத்திருக்கிறார். எனவே அவர் நமது உட்புறத்தை மாற்றுகிறார். அவர் நமக்கு உண்மையைப் பேசவும், அன்பைக் காட்டவும், நமது கோபத்தைக் கட்டுப்படுத்தவும் உதவி செய்கிறார். நாம் மாற **விருப்பப்படாமலிருப்பதே** இதில் பெரிய பிரச்சினையாயிருக்கக்கூடும். ஆனால் நாம் மாற தேவனால் நமக்கு விருப்பத்தை ஏற்படுத்த முடியும்.

- கிறிஸ்தவர்களுக்கு ஒரு விசேட ஈவு இருக்கிறது - இரட்சிப்பு. அவர்களுக்கு விசேஷ உதவியாயிருக்கிறது - தேவனே அந்த உதவி! நாம் தேவனைப் பிரியப்படுத்த கிரியை செய்யும்போது இது நம்மை எப்படி உணரச் செய்ய வேண்டும் (பிலிப்பியர் 2:12)?

## பிரகாசிக்கும் இரட்சிப்பு!

பிலிப்பியர் 2:15~16

என் மேசையின் மேல் ஒரு உடைந்து போன விளக்கு இருக்கிறது. அதனால் பிரயோஜனமில்லை. அது வேலை செய்யாது!

**நமது இரட்சிப்பு கிரியை செய்தால், நாம் இருளில் பிரகாசிப்போம்.**

**1. தூய்மையான வாழ்க்கையின் மூலம் இரட்சிப்பு பிரகாசிக்கிறது.** பிலிப்பியர் 2:14

» உங்கள் சபையிலுள்ள கிறிஸ்தவர்கள் இருளில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் போல ஜீவிக்கிறார்களா? அல்லது சுற்றியுள்ள மற்ற மக்களைப்போல அவர்கள் செய்வதையே நீங்களும் செய்கிறீர்களா?

- உங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றுபவை எவை? மற்றவர்கள் இலஞ்சம் வாங்கி மனைவியை கொடுமைப்படுத்தி, பொய்சொல்லி, அல்லது... ஜீவிக்கும்போது உங்களால் எப்படி தேவனுக்கு விருப்பமானபடி ஜீவிக்க முடியும்?

**2. தேவனுடைய வார்த்தையை கூறுவதின் மூலம் இரட்சிப்பு பிரகாசிக்கிறது.** பிலிப்பியர் 2:14

நம்மிடம் ஜீவனைக் கொடுக்கும் ஒரு நற்செய்தி இருக்கிறது! நாம் அதை மறைத்து வைக்க முடியாது.

» நீங்கள் தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பைப் பெற்றிருக்கிறீர்களா? **அப்படியானால் உங்களுக்குள்ளே வைத்திருக்க வேண்டாம்!** இன்னும் இருளில் வாழும் மக்களுக்கு அதைக் கூறுங்கள்.

நாம் கிறிஸ்தவர்களென்று **சொல்லிக்** கொள்வது எளிது. ஆனால் இக்கிறிஸ்தவர்கள் கிரியை செய்யும் இரட்சிப்பை உடையவர்களாய் இருக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அது அவருக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது? பிலிப்பியர் 2:14~17

# 10 ஓர் நல்ல உதாரணம்

### பின்னணி

அவர் மரிக்கப் போகின்றாரா, அல்லது சிறையிலிருந்து விடுதலை அடைவாரா என்பதைக் குறித்து விரைவில் அறிந்து கொள்ளப் போவதை பவுல் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார். இயேசுவுக்காக மரிப்பதில் பவுலுக்கு மகிழ்ச்சியுண்டு. அவர் அப்படி மரித்தால் பிலிப்பிய கிறிஸ்தவர்கள் அதைக் குறித்து சந்தோஷப்பட வேண்டுமென்று பவுல் விரும்புகின்றார். **பிலிப்பியர் 2:17~18**

ஆனால், இந்தக் கிறிஸ்தவர்கள் அவர் மேல் எவ்வளவு அக்கறை உள்ளவர்களாயிருக்கிறார்களென்பதும் பவுலுக்குத் தெரியும். அவர்களுக்கு விரைவில் செய்தி அனுப்ப அவர் விரும்புகிறார். அவர் யாரை அனுப்புவார்? தீமோத்தேயுவையும், எப்பாப்பிரோதீத்துவையும். **பிலிப்பியர் 2:19~30**

இந்த இரண்டு கிறிஸ்தவர்களும் நல்ல உதாரணங்களாய் இருந்தார்கள். பவுல் பிலிப்பியர் 2ல் கற்பித்தவைகள் அவர்கள் வாழ்க்கையில் வெளிப்பட்டன. அவர்கள் இயேசுவைப் போலத் தாழ்மையுள்ள ஊழியக்காரர்கள். அவர்கள் சுவிசேஷத்திற்காகத் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்கள் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்கிறார்கள். தீமோத்தேயுவையும், எப்பாபிரோதீத்துவையும் போலப் பிலிப்பிய கிறிஸ்தவர்கள் இருக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

### முக்கிய விடயம்

தீமோத்தேயு ஓர் நல்ல உதாரணம். அவர் அதிகமாக தன்னைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. அவர் மற்றவர்களையும், இயேசுவையும், சுவிசேஷத்தையும் குறித்து அதிக அக்கறை செலுத்துகிறவராயிருக்கிறார்.

### நீங்கள் செய்ய வேண்டியது

தீமோத்தேயுவைத் தவிர மற்றெல்லோரும் அவர்கள் சொந்த வாழ்க்கையைக் குறித்து அதிக அக்கறையுள்ளவர்களாய் காணப்படுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும் முதலிடம் கொடுக்கவில்லை.

உங்கள் சொந்த வாழ்க்கையைக் குறித்து எண்ணிப் பாருங்கள். பவுல் உங்களைக் குறித்து என்ன கூறியிருப்பார்? தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் சபைக்கு சேவை செய்ய நீங்கள் எவ்வளவு அக்கறையுள்ளவராயிருக்கிறீர்கள்?

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 2:19.** பவுல் இந்தக் கிறிஸ்தவர்களின் மேல் எவ்வளவு அக்கறையுடையவராயிருந்தாரென்று இது காட்டுகிறது. அவர்கள் பவுலைக் குறித்து செய்தியை அறிய

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 2:19–24

விரும்பினார்கள். ஆனால் பவுல் அவர்களுடைய செய்தியை அறிய ஆவலாயிருந்தார்!

- **பிலிப்பியர் 2:21.** பிலிப்பியர் 2:4-5ஐப் பார்க்கவும். “எனக்கான ஆர்வம்” என்பது “நன்மை”, “சிலாக்கியம்” என்பவற்றைக் குறிக்கிறது. தீமோத்தேயு ஒருவரே இயேசுவுக்கு உரியவைகளை செய்ய மனதுள்ளவராய் இருந்தார். அவர் தன்னைக் குறித்துக் கவலைப்படவில்லை!
- **பிலிப்பியர் 2:22.** தீமோத்தேயு “அவர் உண்மையுள்ளவர்” என்பதை நிரூபித்திருக்கிறார். வருடக்கணக்காக அவர் பவுலோடு தேவனுக்கு ஊழியம் செய்திருக்கிறார். தீமோத்தேயு, பவுலோடு சேர்ந்து இயேசுவின் நற்செய்தியை பிலிப்பிக்கு எடுத்துச் சென்றார். (அப்போஸ்தலர் 16:1-3,12)
- **பிலிப்பியர் 2:24.** பவுல் மரிக்கத் தயாராயிருந்தார். ஆனால் இராயன் அவரை விடுதலை செய்வானென்று அவர் எதிர்பார்த்தார். அவர் பிலிப்பிய கிறிஸ்தவர்களிடம் போக விரும்பினார்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:19–24

» யார் உதவி செய்ய விருப்பமுள்ளவராயிருக்கிறார்? யார் போக விருப்பமுள்ளவராயிருக்கிறார்? நீர் விரும்புகிறீரா?

ஒரு நாள் தேவன் லின்டாவை அவள் வாழ்க்கையைக் குறித்து சிந்திக்கப் பண்ணினார். அப்போது அவர் கேட்ட கேள்விகளுக்கு அவள் இப்படிப் பதிலளித்தாள். ஆண்டவரே நீர் சொல்லும் எதையும் நான் செய்யத் தயாராயிருக்கிறேன். நீர் சொல்லும் எந்த இடத்திற்கும் நான் போகத் தயாராயிருக்கிறேன்

நீங்களும் இப்படித் தேவனிடம் கூற விரும்புகிறீர்களா?

### இயேசுவிற்கு முதலிடம்

**பிலிப்பியர் 2:20~21**

(சாக்குப்போக்குகளைக் குறித்துக் உரையாடவும்: “என்னால் உதவி செய்ய முடியாது ஏனென்றால்...”)

நாம் ஏன் சாக்குப்போக்கு சொல்லுகிறோம்? அநேகமாக நாம் **நம்மை முன்னிலைப்படுத்துவதுதான்** அதற்குக் காரணம். உதவி செய்யப் போனால் நாம் கடினமாக வேலை செய்ய நேரிடும். அல்லது நாம் செய்ய நினைத்திருக்கும் எதையாவது செய்ய முடியாமல் போய்விடும்...

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:19–24

தீமோத்தேயுவுக்கு அது மிகவும் கடினமான நெடுந்தூரப் பிரயாணம். ஆபத்தான 800 மைல்கள். ஆனால் அவர் சாக்குப்போக்கு கூறினாரா? ஏன் கூறவில்லை? பிலிப்பியர் 2:20–21

தீமோத்தேயு மட்டுமே போகத் தயாராயிருந்த **ஒரே மனிதர்**. பவுல் எவ்வளவு கவலைப்பட்டிருப்பாரென்று நினைத்துப் பாருங்கள். இயேசுவுக்கே முதலிடம் என்று சொல்லுவது எளிது. ஆனால் தீமோத்தேயு மட்டுமே செயலில் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தார்.

நாம் இயேசுவுக்கு முதலிடம் கொடுக்கும்போது நாம் உண்மையிலேயே **மற்றவர்கள்** மேல் அக்கறை உள்ளவர்களாய் இருப்போம். நாம் அவர்களுக்கு மிகச்சிறந்தவைகள் வேண்டுமென்று நினைப்பதால் நாம் அதற்காக கொடுக்க வேண்டிய விலையைக் குறித்துக் கவலைப்படமாட்டோம்.

» தீமோத்தேயுவைப் போன்ற மனிதர்கள் அதிகமில்லை. நீங்கள் அவரைப் போலிருக்க வேண்டுமென்று ஜெபிப்பீர்களா?

» நடைமுறையில் இது எப்படியிருக்கும்? மற்ற கிறிஸ்தவர்கள் மேல் நீங்கள் அன்பும், அக்கறையும் செலுத்துவதை எப்படிக் காட்ட முடியும்?

### ஒரு நம்பகமான ஊழியக்காரன்

பிலிப்பியர் 2:22

+ ஒருவரிடம் ஒரு முக்கியமான வேலையைக் கொடுத்து விட்டு நீங்கள் கவலைப்படுவதுண்டா? அவர் நேர்மையாய் அதைச் செய்வாரா? அது கடினமாகும் போது அதை அவர் விட்டுவிடுவாரா? அதை அவர் நன்றாகச் செய்வாரா?

பவுல் தீமோத்தேயுவைக் குறித்துக் கவலைப்படவில்லை! அவரை நம்ப முடியும் என்று அவருக்குத் தெரியும் ஏன்?

அவருடைய பிரயாணங்களில் பவுலோடு தீமோத்தேயு முன்பு போயிருக்கிறார். அவர்கள் மக்களுக்கு இயேசுவைப் பற்றி கூறினபோது, ஒன்றாக பல ஆபத்துக்களை எதிர் கொண்டிருக்கிறார்கள். பவுல், தீமோத்தேயுவுக்கு கடினமான பல வேலைகளைக் கொடுத்திருக்கிறார். ஆனால், தீமோத்தேயு ஒருபோதும் பவுலுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கவில்லை. அவர் பவுலுக்கு ஒரு மகனைப் போலிருந்தார்.

தீமோத்தேயு தன்னைக் குறித்து நிரூபித்திருந்தார். அவர் இயேசுவுக்கு ஒரு விசுவாசமுள்ள உண்மையுள்ள ஊழியக்காரன்.

» நீங்கள் தீமோத்தேயுவைப் போலிருக்க விரும்புவீர்களா? இயேசுவின் ஒரு நம்பகமான ஊழியக்காரனாக?

எப்படி அதைத் ஆரம்பிப்பது என்பதைக் குறித்து சிந்தியுங்கள். மற்றவர்கள் செய்ய விருப்பப்படாதவைகளிலிருந்து சிறியவைகளில் ஆரம்பியுங்கள். நீங்கள் ஒன்றைச் செய்வதாகச் சொன்னால் அதைக் கட்டாயம் செய்யுங்கள். எப்போதும் அதை இயேசுவுக்காகச் சிறப்பாகச் செய்யுங்கள்.

# 11 இன்னுமொரு நல்ல உதாரணம்

## பின்னணி

நாம் சரியாக **சிந்திப்பதற்கும்**, சரியாக **வாழ்வதற்கும்** நமக்கு உதவியாயிருப்பதற்குப் பவுல் அநேக உதாரணங்களை உபயோகித்திருக்கிறார்.

- பவுல் தம்மைக் குறித்து - பிலிப்பியர் 1:12-26
- இயேசு - பிலிப்பியர் 2:5-11
- தீமோத்தேயு - பிலிப்பியர் 2:19-24
- எப்பாப்பிரோதீத்து - **பிலிப்பியர் 2:25~30**

இந்த உதாரணங்களைப் பின்பற்றும்படி பின்பு அவர் நமக்குக் கூறுகிறார். **பிலிப்பியர் 3:17**

அவர் பிலிப்பிய கிறிஸ்தவர்கள் எப்பாப்பிரோத்தீத்துவுக்கு **மரியாதை** செலுத்த வேண்டுமென்றும் கூறுகிறார்.

## முக்கிய விடயம்

எப்பாப்பிரோத்தீத்துவைப் போன்றவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும். (அவர்களைப் பற்றி உயர்வாக நினையுங்கள். அவர்களுக்கு மரியாதை செலுத்துங்கள்). கிறிஸ்துவின் பணிக்காக தங்கள் உயிரைப் பணயம் வைப்பவர்களுக்கு மரியாதை செலுத்துங்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியது

நாம் சிலவேளைகளில் தவறான வகையைச் சார்ந்த மக்களுக்கு எளிதில் மரியாதை செலுத்தி விட முடியும். அவர்களுக்குப் பணம் அல்லது பதவி இருப்பதால் நாம் அவர்களுக்கு மரியாதை செலுத்தக் கூடும். சிலர் நன்றாகக் உரையாடக் கூடியவர்களாய் இருப்பதாலும் கூட நாம் அவர்களுக்கு மரியாதை செலுத்தக் கூடும். யாருக்கு உண்மையில் மரியாதை செலுத்த வேண்டுமென்பதை அறிந்து கொள்ள எப்படி நீங்கள் உங்கள் மக்களுக்கு உதவி செய்ய முடியும்? தேவன் மதிக்கும் மக்களுக்கு எப்படி உங்கள் சபை மரியாதை செலுத்த முடியும்?

## குறிப்புகள்

- **பிலிப்பியர் 2:25.** எப்பாப்பிரோதீத்து பிலிப்பிய சபையைச் சேர்ந்தவர். அவரை அவர்கள் அன்பு பரிசுகளுடன் ரோமாபுரியில் சிறையிலிருக்கும் பவுலிடம் அனுப்பி இருந்தார்கள். எப்பாப்பிரோதீத்து அதிக சுகவீனமுற்று இருந்தார். இப்பொழுது சுகமடைந்திருக்கிறார். எனவே பவுல் அவரை தீமோத்தேயுவுடனும், இந்த நிருபத்துடனும் பிலிப்பிக்கு திருப்பி அனுப்புகிறார்.
- **பிலிப்பியர் 2:25.** “உடன் வேலையாள்” (என்னுடன்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 2:25 – 30

ஊழியம் செய்பவர்). "உடன் சேவகன்" (என்னோடு சேர்ந்து போராடுபவர்). இப்படிக் குறிப்பிடுவதின் மூலம் பவுல் எப்பாப்பிரோதீத்துவுக்குத் தன் மரியாதையைத் தெரிவிக்கிறார். எப்பாப்பிரோதீத்து உண்மையிலேயே பவுலுடன் சுவிசேஷத்திற்கான போராட்டத்தில் பங்குபற்றியிருக்கிறார்.

- **பிலிப்பியர் 2:26.** எப்பாப்பிரோதீத்து கடும் சுகவீனமாயிருந்தார். ஆனால் **அவர்** யாரைக் குறித்துக் கவலைப்படுகிறாரென்று பாருங்கள். அவர் பிலிப்பிய கிறிஸ்தவர்கள் அவரைக் குறித்து கவலைப்படுவார்களென்று நினைத்துக் கவலைப்படுகிறார்!
- **பிலிப்பியர் 2:30.** எப்பாப்பிரோதீத்து கிறிஸ்துவுக்காகவும், **அவர்களுக்காகவும்** தன் உயிரைப் பணயம் வைத்தாரென்று பவுல் பிலிப்பியருக்கு நினைவுபடுத்துகிறார். அவர் **அவர்களுடைய** பரிசை எடுத்துக்கொண்டு வந்தார். (பிலிப்பியர் 2:25ஐப் பார்க்கவும்.)

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:25 – 30

### அன்புச் சகோதரன்

பிலிப்பியர் 2:25

எப்பாப்பிரோதீத்து ஓர் சாதாரண கிறிஸ்தவன். அநேகமாக அவருக்கு ஏதாவதொரு சாதாரண வேலை இருந்திருக்க வேண்டும். அவர் பிரசங்கித்தாரென்றோ அல்லது அவருக்கு வரங்கள் இருந்ததென்றோ வேதாகமத்தில் கூறப்படவில்லை.

**ஆனால் பவுல் அவருக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறாரென்று பாருங்கள்!** அந்தப் பெரிய அப்போஸ்தலன் இந்தச் சாதாரண கிறிஸ்தவனை "சகோதரன்" என்று கூறுகிறார். பவுலைச் சந்திப்பதற்கு அவர் தன் உயிரையும் பணயம் வைத்து வந்ததால் பவுலுக்கு அவர் மேல் அதிக மரியாதையிருந்தது.

கிறிஸ்துவுக்கு சேவை செய்வதற்கு உங்களுக்கு பவுலைப் போலவோ அல்லது தீமோத்தேயுவைப் போலவோ வரங்கள் பல இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நீங்கள் ஒரு இளைஞராகவோ, அல்லது மிகவும் வயது முதிர்ந்தவராகவோ இருந்தாலும் கூட நீங்கள் பவுலுக்கு ஒரு சகோதரனாய் இருக்கலாம். **உங்களால் முடிந்ததை** இயேசுவுக்காக செய்ய நீங்கள் விருப்பமுள்ளவராய் இருந்தால் போதும்.

### விசுவாசமுள்ள ஊழியக்காரன்

பிலிப்பியர் 2:25,30

பிலிப்பிய சபைக்கு அவர்களுடைய

## ⬇ பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 2:25 – 30

பரிசுகளை பவுலுக்கு எடுத்துச் செல்ல ஒரு ஆள் தேவைப்பட்டது. எனவே அவர்கள் எப்பாப்பிரோதீத்துவை அனுப்பினார்கள். ஒருவேளை மற்றவர்களுக்குப் போக முடியாத காரணங்கள் இருந்திருக்கக் கூடும். ஒருவேளை சிலர் போக விருப்பப்படாமலிருந்திருக்கலாம். ஆனால், எப்பாப்பிரோதீத்து தன்னுடைய சபைக்காகவும் கிறிஸ்துவுக்காகவும் அதைச் செய்ய முன்வந்தார்.

- பிலிப்பியர் 2:26 எதைக் காட்டுகிறது? பிலிப்பியிலிருக்கும் கிறிஸ்தவர்களைக் குறித்து எப்பாப்பிரோதீத்துவின் உணர்வுகள் என்ன?

» அநேக மக்கள் அது அவர்களுடைய சொந்த யோசனையாகவும், அவர்களுக்கும் பிரயோஜனமாகவும் இருந்தால் உதவி, செய்ய முன் வருவார்கள்.

» நீங்கள் உங்கள் சபைக்கு ஒரு வேலைக்காரனாயிருக்க விரும்புகிறீர்களா?, அது எந்த வேலையாயினும்?

### ஆபத்துக்களை சந்திக்கத் தயார்

📖 பிலிப்பியர் 2:30

⊞ ஒரு ஆபத்தான விளையாட்டைப் பற்றி கதைக்கவும். சிலர் அதை மிகவும் விரும்புவார்கள். மற்றவர்கள் அதை விட்டு விலகியிருப்பார்கள்! ஏனென்றால் அவர்களுக்கு ஒரு காலை முறித்துக் கொள்ளவோ, அல்லது வேறு காயங்களை ஏற்படுத்திக் கொள்ளவோ விருப்பமில்லை.

சுவிசேஷ ஊழியம் ஆபத்தானது! சுவிசேஷத்தை நேசிக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஆபத்துக்களை எதிர்கொள்ள துணிச்சல் தேவை. சிறையிலிருந்த பவுலை உற்சாகப்படுத்த எப்பாப்பிரோதீத்து தன் உயிரைப்பணயம் வைத்து வந்தார். அவர் கிட்டத்தட்ட மரித்தாரென்று சொல்லலாம். ஆனால் இயேசுவுக்காக அதை செய்வதில் அவர் சந்தோஷப்பட்டார்.

முன்பு உங்கள் நாட்டில் மக்கள் தங்கள் உயிரை பணயம் வைத்து போதித்தார்கள். இன்னும் அப்படியிருக்கக்கூடும் (நீங்கள் அறிந்திருந்தால், உண்மைக் கதைகளைக் கூறவும். இன்று நமக்கு வரக்கூடிய ஆபத்துக்களைக் குறித்து உரையாடவும்).

» எப்பாப்பிரோதீத்து ஒரு சிறந்த உதாரணமாயிருக்கிறார். அவர் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்து, சுவிசேஷத்தை நேசிக்கும் ஒரு சாதாரணக் கிறிஸ்தவனாயிருந்தார். நீங்கள் அறிந்திருக்கக் கூடிய இப்படியான மக்களைக் குறித்து சிந்திக்கவும்.

- அவர்களுக்கு மரியாதை செலுத்துங்கள்யூ (பிலிப்பியர் 2:29). அவர்களுக்கு முக்கிய பதவிகள் இல்லாமலிருக்கலாம். ஆனால் தேவன் அவர்களை மதிக்கிறார். (நாம் யாரை மதிக்க வேண்டுமென்பதையும், அது ஏன் என்பதையும் குறித்துப் பேசவும்).
- அவர்களைப் பின்பற்றுங்கள்யூ அவர்களுடன் நேரத்தை செலவிடுங்கள். அவர்களுடன் ஜெபியுங்கள். இயேசுவுக்கு எப்படி முதலிடம் கொடுப்பது என்பதை உங்களுக்குக் கற்றுத்தரும்படி கேளுங்கள்.

# 12 எனக்கு நிச்சயமுண்டு

**பின்னணி**

நாம் நமக்கு நல்ல உதாரணங்களைத் தேட வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். இயேசுவுக்காக ஜீவிக்கும் மக்களைப்போல நாம் வாழ வேண்டுமென்று அவர் விரும்புகிறார். **கெட்ட** உதாரணங்களைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார்.

பிலிப்பியில் சிலர் பிழையானவற்றைப் போதித்தார்கள். அவர்கள் யூதர்களாயிந்தார்கள். ஒரு உண்மையான கிறிஸ்தவனாயிருப்பதற்கு ஒருவன் யூதனா**யிருக்க** வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். ஒரு யூதனைப்போல விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் போதித்தார்கள்.

ஆகவே அவரை இரட்சிப்பதற்கு பவுல் எப்படி இயேசுவை விசுவாசிக்க கற்றுக்கொண்டாரென்று அவர் கூறுகிறார்.

பிலிப்பியர் 3:1~11

**முக்கிய விடயம்**

தேவனுடன் உங்களை சரி செய்து கொள்வதற்கு உங்கள் சொந்த முயற்சிகளின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டாம். இயேசுவின் மூலம் வரும் இரட்சிப்பைக் குறித்து உறுதியாயிருங்கள் (நிச்சயம்).

**நீங்கள் செய்ய வேண்டியது**

உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் யூதர்களாயில்லாமலிருக்கலாம். ஆனால் அதில் பலர் இப்படியான பிழையான எண்ணங்களைக் கொண்டவர்களாயிருக்கக்கூடும். சிலர் தாங்கள் ஆலயத்துக்குப் போவதால் நிச்சயமாக கிறிஸ்தவர்களாயிருப்பதாக நினைக்கிறார்கள். சிலர் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதின் மூலம் தேவனைப் பிரியப்படுத்தலாமென்று நினைக்கிறார்கள். சில உண்மையான கிறிஸ்தவர்கள் கூட தாங்கள் பரலோகம் போவோம் என்ற நிச்சயமில்லாதிருக்கிறார்கள்.

அவர்கள் யாவரும் கேட்க வேண்டிய ஒரே செய்தி இதுதான்: நாம் நம்மை இரட்சிப்பதற்கு இயேசுவை **மாத்திரமே** நம்பும்போது, நம்மால் அந்த நிச்சயத்தைப் பெற**முடியும்**.

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 3:1.** “சந்தோஷப்படுங்கள்”; “மகிழ்ச்சியாக இருங்கள்”. இது சந்தோஷமாயிருங்கள் என்று மாத்திரம் சொல்வதாக அர்த்தமாகாது. “இயேசுவுக்குள் நிச்சயத்துடன் இருங்கள் என்பது நீங்கள் இயேசுவிற்குள் பாதுகாப்பாக இருப்பதைக் குறித்து மகிழ்ச்சியாயிருப்பதாகும்” என்று அவர் கூறுகிறார்.
- **பிலிப்பியர் 3:2.** “நாய்கள்” இந்தக் கள்ளப்போதகர்களுக்கு விரோதமாகப் பவுல் மிகவும் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கிறார். அவர்கள் கிறிஸ்தவர்கள் யூதரைப் போல விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள். எனவே பவுல் அவர்களை “சுன்னத்துக்காரர்” என்று குறிப்பிடுகிறார். (விருத்தசேதனம் என்பது ஒரு சிறு பிள்ளையின்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 3:1 –7

நுனித்தோலை வெட்டி விடுவதாகும்)

- **பிலிப்பியர் 3:3.** யூதர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதைக் காட்டும் ஒரு அடையாளமே விருத்தசேதனமாகும். ஆனால் தேவனின் உண்மையான மக்களாகிய கிறிஸ்தவர்கள் தேவனின் பரிசுத்த ஆவியானவரின் அடையாளத்தை பெற்றிருக்கிறார்கள்! அவர்கள் தேவனுக்குச் சொந்தம் என்பதை அது காட்டுகின்றது. இதுவே "உண்மையான விருத்தசேதனம்" கிறிஸ்தவர்கள் மதசம்பந்தமான தங்கள் சொந்த முயற்சிகளின் மேல் நம்பிக்கை வைப்பதில்லை (மாம்சத்தில்). அவர்களுக்கு மகிழ்ச்சியுண்டு. ஏனென்றால், இயேசு அவர்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டார்.
- **பிலிப்பியர் 3:4-6.** பவுல் ஒரு சிறந்த யூதனாயிருந்தார். அவர் எல்லாச் சரியான காரியங்களையும் செய்தார். அதனால் தேவன் அவருடன் மகிழ்ச்சியாயிருக்கிறாரென்று அவர் நினைத்திருந்தார். ஆனால், அவர் நினைத்தது தவறாகும்.
- **பிலிப்பியர் 3:7.** பிற்பாடு பவுல் உண்மையைக் கண்டு கொண்டார். அவருடைய எல்லா "நல்ல காரியங்களும்" தேவனுக்கு முன்னால் ஒன்றுமில்லை. கிறிஸ்துவே எல்லாம்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 3:1 –7

### நிச்சயமானதும் - தவறானதும்

பிலிப்பியர் 3:4~7

⊞ ஒரு பரீட்சையில் நீங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுதிவிட்டீர்கள். நீங்கள் சந்தோஷத்துடன் வெளியே வருகிறீர்கள். நீங்கள் பரீட்சையை நன்றாகச் செய்திருக்கிறீர்களென்ற நிச்சயம் உங்களுக்கிருக்கிறது. ஆனால் பரீட்சை முடிவுகள் வந்தபோது, நீங்கள் பரீட்சையில் தோல்வியடைந்திருக்கிறீர்கள். அப்போது உங்களுக்கு எப்படி இருக்கும்?

பவுல் ஒரு இளம் யூதனாயிருந்த போது அவர் தன்னைக் குறித்து முழு நிச்சயமுள்ளவராயிருந்தார். அவர் நல்லதொரு யூத குடும்பத்திலிருந்து வந்தவர். அவர் பழைய ஏற்பாட்டை நன்றாகப் படித்திருந்தார். அவர் எல்லா யூதச்சட்டங்களையும் கடைப்பிடித்தார். அவருடைய முழுவாழ்க்கையையும் தேவனுக்குக் கொடுத்திருந்தார். எனவே, தேவன் தன்னைக் குறித்து மகிழ்ச்சியாயிருக்கிறாரென்று அவர் நிச்சயித்திருந்தார்.

ஆனால் பவுல் நினைத்திருந்தது முற்றிலும் தவறாயிருந்தது. நீங்கள் மூன்று வருடம் கடினப்பட்டுக் கற்றும், இறுதில் உங்கள் மதிப்பெண் 100க்கு 0 என்று வந்தால் உங்களுக்கு எப்படியிருக்கும் என்று சற்று கற்பனை

செய்து பாருங்கள். பவுலுக்கும் அது அப்படித்தானிருந்தது. பவுலின் முயற்சிகள் **அனைத்தும்** தேவனை சிறிதும் மகிழ்ச்சியடையப் பண்ணவில்லை. அது அவருக்கு “0“வை விட **குறைந்த** மதிப்பெண் கிடைத்தது போலிருந்தது. இப்போது பவுல் தேவனுக்கு நேரான தன்னுடைய முயற்சிகள் யாவையும் ஒரு **நஷ்டமாக** எண்ணுகிறார்.

பிலிப்பியர் 3:7

உங்கள் வாழ்க்கையைக் குறித்து நினைத்துப் பாருங்கள். நீங்கள் செய்த நல்ல காரியங்களை நினைத்துப் பாருங்கள். தேவன் உங்களை தண்டிக்காமல் மன்னித்து விடுவாரென்பதற்கான சகல காரணங்களையும் குறித்து சிந்தியுங்கள். (உதாரணங்கள் காட்டவும்). அவைகள் யாவையும் ஒன்றாகக் கூட்டுங்கள். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான அளவு செய்திருக்கிறீர்களா?

அவை யாவும் ஒன்றுமில்லை. அவைகளால் ஒருபோதும் நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு உங்களுக்கு உதவி செய்ய முடியாது. அவை தேவனைத் துக்கப்படுத்தும். சந்தோஷப்படுத்தாது. இவை யாவும் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெறுவதற்கான தவறான வழிகளாகும். நாம் செய்யும் எந்த காரியமும் நம்மை பரலோகம் கொண்டுப்போய் சேர்க்காது.

## நிச்சயமானதும் – சரியானதும்

பிலிப்பியர் 3:1–3

பவுலுக்கு இன்னும் நிச்சயமிருந்தது - ஆனால் இம்முறை அவர் சரி. தேவன் அவரை மகிழ்ச்சியடையச் செய்யும் சரியான வழியை பவுலுக்குக் காட்டியிருக்கிறார் - இயேசுவின் மூலம்.

எனவே அவர் “கர்த்தருக்குள் **சந்தோஷப்படுங்கள்**” என்று கூறுகிறார். உண்மையான கிறிஸ்தவர்கள் இயேசுவைக் குறித்து நிச்சயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மீட்புக்கு தங்கள் மேலல்லாமல், இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

- அது விசுவாசிகளுக்காக இயேசு பரீட்சை எழுதுவதைப் போலிருக்கிறது! நாம் முழுப்பாவிகளாய் இருக்கிறோம். நாம் தேவனை திருப்திப்படுத்துவதில் தோல்வியடைந்திருக்கிறோம். ஆனால் இயேசு 100 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறாரென்று நமக்குத் **தெரியும்**. எனவே அது அவர் நமது பரீட்சைத் தாளைக் கிழித்துப் போட்டுவிட்டு அவருடைய பூரணமானதை அந்த இடத்தில் வைப்பது போன்றதாகும்.

பிலிப்பியர் 3:3ல் பவுல் ஒரு உண்மையான கிறிஸ்தவனை விவரிக்கிறார் (இதைக் குறித்து இன்னும் அதிகமாகக் உரையாடவும். நாம் நமது மதரீதியான சொந்த முயற்சிகளின் மேல் நம்பிக்கை வைக்கக் கூடாதென்பதையும், நாம் நமது பூரணமான இரட்சகரின் மேல் மாத்திரமே நம்பிக்கை வேண்டும் என்பதையும் காட்டவும்).

நீங்கள் உங்கள் இரட்சிப்புக்கு இயேசுவை மட்டுமே நம்புகிறீர்களா? அப்படியானால் உங்களுக்கு **நிச்சயமுண்டு** ~ நீங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள் அவர் ஒருபோதும் உங்களைத் தோல்வியடைய விடமாட்டார்.

# 13 இயேசுவை அறிந்து கொள்வது

### பின்னணி

நாம் இயேசுவின்மேல் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை மட்டுமே பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். மற்றொன்றும் முக்கியமல்ல. பவுல் தான் ஒரு நல்ல யூதனாய் இருப்பதைக் குறித்து ஒரு காலத்தில் பெருமைப்பட்டார். இப்போது அது ஒன்றுமில்லையென்று அவர் காண்கிறார். பிலிப்பியர் 3:1~7

பவுலைப் பொறுத்தவரை அவருக்கு எல்லாமே இயேசுதான். இப்போது அவர் இயேசுவை அறிந்திருப்பதால், இன்னும் அதிகமாக அவரை அறிந்து கொள்ள அவர் விரும்புகிறார். நாமும் அப்படியே நினைக்கவேண்டுமென்பது அவர் விருப்பமாகும்! பிலிப்பியர் 3:8~11

### முக்கிய விடயம்

நீங்கள் இயேசுவை அறிந்திருந்தால், உங்களுக்கு எல்லாம் இருக்கிறது. இன்னும் அதிகமாக இயேசுவை அறிய வேண்டுமென்பதே உங்கள் விருப்பமாயிருக்கும்.

### நீங்கள் செய்ய வேண்டியது

நீங்கள் பவுலைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. அவர் இப்போது தன் நற்செயல்களின் மூலம் தேவனை திருப்தி செய்ய முயற்சி செய்வதில்லை. அதற்கு அவர் இப்போது இயேசுவை நம்புகிறார். பிலிப்பியர் 3:9ல் நாம் **விசுவாசத்தின்** மூலமாகவே தேவனுடன் நமது வாழ்க்கையை சரி செய்துகொள்ள முடியும். என்பதைக் காட்டுகிறார்.

அவர் எதை அதிகம் **மதிக்கிறாரென்பதை** பவுல் நமக்குக் கூறுகிறார். அவர் இயேசுவை மென்மேலும் அறிந்துகொள்ள **அதிகமாக விரும்புகிறார்.** நல்லவனாய் வாழவேண்டுமென்ற பவுலின் எல்லா முயற்சிகளும் குப்பையைப் போலிருக்கின்றன. இயேசுவே எல்லாம்.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 3:8.** ஒரு காலத்தில் பவுல் அவர் செய்த எல்லாக் காரியங்களையும் குறித்து பெருமைப்படுகிறவராய் இருந்தார். (பிலிப்பியர் 3:5-6). இப்போது அவையாவையும் அவரால் தூர எறிந்து விடமுடியும். அவைகள் தேவனை அறிந்துகொள்ள அவருக்கு உதவி செய்யவில்லை! அவை குப்பையைப் போன்றவை. இயேசுவை அறிவது மட்டுமே பிரயோஜனமான செயல் - ஏனென்றால் தேவனிடத்தில் போகும் வழி இயேசு மட்டுமே.
- **பிலிப்பியர் 3:9.** "கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன்". பவுல் அவர் இயேசுவோடு இருப்பதாகக் கூறுகிறார். முன்பு பவுல்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 3:8 – 11

தன்னுடைய நற்செயல்களின் மேல் நம்பிக்கை வைத்திருந்தார். இப்போது அவர் இயேசுவை நம்புகிறார். பவுலின் நீதி (தேவன் அவரை ஏற்றுக்கொள்ளும் வழி) இயேசுவிடமிருந்து வருகிறது. அது தேவனுடைய ஒரு ஈவு. அதைப் பவுல் விசுவாசத்தின் மூலம் பெற்றிருக்கிறார்.

- **பிலிப்பியர் 3:10.** "உயிர்த்தெழுதலின் வல்லமை" கிறிஸ்தவர்களுக்கு ஓர் உயிர்த்தெழுந்த இயேசு உண்டு! நாம் நமது வாழ்க்கையில் இயேசுவின் வல்லமையை உணர முடியும். இயேசுவின் வல்லமை நமது பாவத்தை தோற்கடிக்கிறது. எனவே நம்மால் இயேசுவை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள முடியும். (எபேசியர் 3:16-19)
- **பிலிப்பியர் 3:10.** ஒரு நாள் பவுலும் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பார். அவருக்கு அதில் சந்தேகமிருக்கவில்லை. ஆனால், அவர் அதை எதிர்பார்க்கிறார். அப்போது அவர் விரும்புகிறபடி இயேசுவை அவர் அறிந்து கொள்வார்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 3:8 – 11

### இயேசுவை அறிந்து கொள்வது

பிலிப்பியர் 3:8~9

ஒரு காலத்தில் பவுல் இயேசுவை அறிந்திருக்கவில்லை. இயேசுவை **வெறுத்தார்**! அவருக்கு இயேசு தேவையில்லாமலிருந்தது! அவருடைய சொந்த வாழ்க்கை தேவனை திருப்திப்படுத்தப் போதுமானது என்று அவர் நினைத்தார். ஆனால் திடீரென்று எல்லாம் மாறிப்போனது. (பவுலின் கதையைக் கூறவும். அப்போஸ்தலர் 22:6-16)

தேவன் உங்களை மாற்றியிருக்கிறாரா? அவர் பவுலை மாற்றியதைவிட அதிக மெதுவாகவே உங்களை மாற்றியிருக்கக்கூடும். ஆனால், பவுலை போல உங்களுக்கு இப்போது இயேசுவைத் தெரியுமா? அப்படியானால், இப்போது ~

1. **இயேசுவே உங்களுக்கு எல்லாம்**
   பவுல் தனக்கிருந்த எல்லாவற்றை விட்டுவிட்டிருந்தாலும், இன்னும் அவருக்கு எல்லாம் இருக்கிறது. ஏனென்றால் இயேசு எல்லாமாக இருக்கிறார். பிலிப்பியர் 3:8 உங்கள் விடயத்திலும் உண்மையாயிருக்கிறதா?
2. **உங்களை தேவன் ஏற்றுக்கொள்ளும் வழி இயேசுவே** பிலிப்பியர் 3:9
   அதனால்தான் இயேசுவே எல்லாம் என்று சொல்லமுடியும்! நமது சொந்த நீதி பயனற்றது. நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களென்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் தேவன் நமது முயற்சிகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஆனால், **இயேசுவை தேவன்**

**ஏற்றுக்கொண்டிருக்கிறார்**! இப்போது தேவன் பவுலின் நற்கிரியைகளை பார்க்க மாட்டார். அவர் பவுலை அல்ல இயேசுவையே பார்க்கிறார். எனவே, இயேசுவின் நிமித்தம் தேவன் பவுலைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்.

விசுவாசத்தின் மூலம் இயேசுவை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இயேசு செய்த காரியத்தினால் தேவன் **உங்களை** ஏற்றுக் கொள்கின்றாரா? நீங்கள் இயேசுவின் மேல் **விசுவாசமுள்ளவராயிருந்தால்** அவர் உங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார். நாம் இயேசுவை விசுவாசிக்கும் போது, தேவன் நம்மை நீதிமான்களாக்குகின்றார்.

## இயேசுவை மென்மேலும் அறிவது

பிலிப்பியர் 3:10–11

இப்பொழுதுதான் இதுவரை நீங்கள் சாப்பிட்டிராத நல்ல ருசியானதொரு சாப்பாட்டை சாப்பிட்டிருக்கிறீர்களென்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அது உங்களுக்கு இலவசமாய் கிடைத்ததென்று நினைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் விரும்பினால் எந்த வேளையிலும் மீண்டும் வந்து சாப்பிடலாம் என்று உங்களுக்கு கூறப்படுகின்றது. நீங்கள் மீண்டும் திரும்பி வருவீர்களா?

பவுலுக்கு இயேசுவைத் தெரியும். இயேசு அவரை பூரணமாய் திருப்தி செய்கிறார். ஆனால் பவுல் முழுமையடையவில்லை!. அவர் மீண்டும் மீண்டும் இயேசுவிடம் வர விரும்புகிறார். அவரை இன்னும் அதிகமாக அறிய வேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார். நீங்களும் அப்படியா? அவர் இயேசுவைக் குறித்து இன்னும் அதிகமாக அறிய விரும்பும் இரண்டு காரியங்களைக் கூறுகின்றார்.

1. **இயேசுவின் வல்லமை.** இயேசுவுக்கிருக்கும் வல்லமையைக் குறித்து நினைத்துப்பாருங்கள்! மரித்தோரிலிருந்து உயிர்தெழும்ப அவருக்கு எவ்வளவு வல்லமை இருந்தது என்பதை எண்ணிப்பாருங்கள்! பவுல் பெரிய அற்புதங்களைச் செய்வதற்காக அந்த வல்லமையைத், தான் அறிய வேண்டுமென்று நினைக்க**வில்லை.** இயேசுவின் சாயலுக்கு தன்னை **மாற்ற** வேண்டுமென்பதற்காகவே பவுல் அந்த வல்லமையைக் குறித்து அதிகம் விரும்புகிறார். அப்போது பவுலுக்கு இயேசுவை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள முடியும். உங்கள் முக்கிய விருப்பமும் அதுவாகத்தான் இருக்கிறதா?

2. **இயேசுவின் பாடுகள்.** பவுல் பாடுகளை அனுபவிக்கவில்லை! ஆனால் அவர் இயேசுவை நெருங்க விரும்புகிறார். ஒருவரை நெருங்குவதற்கு அவர்களுடைய வலிகளில் சிறிதேனும் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்களால் இயேசுவைப்போல சிலுவையில் பாடுபட முடியாது. ஆனால் உங்களால் பாவத்தை வெறுக்க முடியும். தீமையைக் குறித்து இயேசுவுக்கிருக்கும் வேதனையை நீங்கள் அனுப்பவிக்கலாம். நீங்கள் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கும்போது அவரைப்போல் பாடனுபவிக்க விருப்பமுள்ளவராய் மாறலாம்.

நாம் நல்ல உணவிற்காக திரும்பி வருவோம். ஆனால் நாம் இயேசுவை மேலும் அறிய திரும்பி வருவோமா?

# 14 ஓட்டத்தை ஓடுங்கள்

### பின்னணி

இயேசுவைப் போல நாம் சிந்திக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். நாம் சுவிசேஷத்திற்காக வாழவேண்டுமென்பது அவர் விருப்பமாகும்.

அவர் ஒரு ஆபத்தைக் குறித்து நம்மை எச்சரித்திருக்கிறார் -

யூதர்களைப்போல இருக்க வேண்டாம். தேவனுடைய ஆசீர்வாதத்தை சம்பாதித்துக் கொள்ள கடினமாக உழைக்க வேண்டாம். (பிலிப்பியர் 3:1-7)

இதற்கு எதிரான இன்னொரு ஆபத்தும் இருக்கிறது. "இயேசு நமக்காக எல்லாவற்றையும் செய்து விட்டார். எனவே நாம் ஒன்றும் செய்யாமல் அமைதியாக அமர்ந்திருப்போம்" என்று நாம் கூறக் கூடாது. இல்லை! பவுல் அவரைப் போல நாம் கடினமாக முயற்சி செய்ய வேண்டுமென்று விரும்புகிறார். நாம் நமது கிறிஸ்தவ ஓட்டத்தை நன்றாக ஓட வேண்டுமென்று அவர் விரும்புகிறார்! **பிலிப்பியர் 3:8~16**

### முக்கிய விடயம்

இறுதிவரை ஓட்டத்தை ஓடுங்கள். இயேசுவுக்காக வாழ கடினமாக முயற்சி செய்யுங்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது

பவுல் பரிசை **சம்பாதிக்க** விரும்புவதாக நாம் நினைக்கக் கூடாது. இயேசு ஏற்கனவே அதை அவருக்காக வென்று விட்டாரென்று அவர் அறிவார்! **இயேசு** பவுலைப் பிடித்துக் கொண்டார் (பிலிப்பியர் 3:12). **தேவன்** அவரை பரலோகத்திற்கு அழைத்தார் (பிலிப்பியர் 3:14).

ஆனால் தேவன் கிறிஸ்தவர்களை **ஓட்டத்தை ஓடும்படி** அழைத்திருக்கிறார். இயேசு நம்மை பரலோகம் கொண்டு சேர்க்கும் ஒரு வாடகை வாகனமல்ல. கடினமான ஓட்டத்தில் இயேசுவைப் பின்தொடரும்படி அவர் நம்மை அழைக்கிறார். அப்போது இயேசு ஏற்கனவே வெற்றி கொண்ட பரிசை நாம் பெற்றுக் கொள்வோம்.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 3:12-13.** அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு ஓடுகிறார் என்பதைக் காட்டுவதற்கு பவுல் வலிமை மிக்க சொற்களை உபயோகிக்கிறார். அவர் ஒலிம்பிக் (Olympic) விளையாட்டுக்களில் ஓடும் ஓட்டப்பந்தய வீரனைப் போலிருக்கிறார். அவர் "விடாமுயற்சி" (கடினமாக முயற்சி செய்) செய்வதாகக் கூறுகிறார். ஒரு ஓட்ட வீரன் வெற்றிக்கோட்டை அடைய முன்னேறிச் செல்வது போல, அவர் விடாமுயற்சியுடன் முன்னேறுகிறார்.
- **பிலிப்பியர் 3:14.** அதற்கான பரிசு பரலோகத்தில்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 3:12–16

இயேசுவிடமிருக்கிறது. தேவன் அந்தப் பரிசுக்காகப் பவுலைத் தெரிவு செய்தார். ஆனால் பவுல் தன்னைக் குறித்து மாத்திரம் நினைக்கவில்லை என்பதை இக்கடிதம் காண்பிக்கிறது. பவுல் பரலோகத்திற்கு **தனியாகப்** போய் சேர விரும்பவில்லை. இந்த அருமையான எல்லா விசுவாசிகளையும் பவுல் தன்னுடன் அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகவே தேவன் பவுலைத் தெரிவு செய்தார். எனவே பவுல் ஓடும்போது அவர் இந்தக் கிறிஸ்தவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஓடகிறார்.

- **பிலிப்பியர் 3:15-16.** எல்லாக் கிறிஸ்தவர்களுமே நன்றாக ஓடுவார்களென்று பவுல் எதிர்பார்க்கவில்லை. நாம் விட்டுவிடக்கூடாது என்று பவுல் விரும்புகிறார். எல்லாரும் அவரைப் போல சிந்திக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் பலவீனமானவர்களென்று அவர் அறிவார். எப்படியாவது நாம் முன்னோக்கிப் போக வேண்டுமென்று அவர் கூறுகிறார்! அப்போது நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்வோம்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 3:12–16

### ஒரு காரியம்

பிலிப்பியர் 3:12~13

⊞ ஓட்டப்பந்தயத்தில் ஓடும் ஒருவரைப் பற்றிய பவுலின் உதாரணத்தைக் குறித்து உரையாடவும். அவர் பந்தயத்தில் வெற்றியடைவதற்கு எவ்வளவு கடினமாக முயற்சி செய்வார், ஒவ்வொரு தசைப்பாகங்களையும் எவ்வாறு தயார்படுத்துவார் என்பதை விளக்கவும். ஓடுபவர் **ஒரு காரியத்தைப்** பற்றி மட்டுமே சிந்திப்பார். அவர் அந்த ஓட்டப்பந்தயத்தில் வெற்றியடைய வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாயிருக்கும்.

» நாம் அநேக காரியங்களில் ஈடுபடுவதால், பந்தயத்தில் ஓடுவதை மறந்து விடக்கூடும். நாம் மிக முக்கியமானதை மறந்து விடுகிறோம்! இயேசுவுக்காக வாழ்வதே ஒருவருக்கு மிக முக்கியமாகும். (இயேசுவுக்குப் பிரியமாக வாழ்வதை தடை செய்யக்கூடிய காரியங்களைக் குறித்து உரையாடவும். நீங்கள் பவுலைப் போலிருக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்).

இதை நீங்கள் கவனமாகப் பார்த்தால், இது ஒரு ஓட்டப் பந்தயம் மட்டுமல்ல ஒருவரையொருவர் துரத்தும் பந்தயமென்பது தெரியும். முதலில் இயேசு பவுலைத் துரத்திப் பிடித்தார். இப்போது பவுல்

பரலோகம் வரைக்கும் இயேசுவைத் துரத்திக் கொண்டு போகிறார்.

இயேசு உங்களைத் துரத்திப் பிடித்தது உங்களுக்கு நினைவிருக்கின்றதா? நீங்கள் அவருக்கு சொந்தமாக வேண்டுமென்று அவர் விரும்பினார். அவர் வீட்டுக்கு உங்களை அழைத்துச் செல்ல அவர் விரும்பினார். அவர் அன்பு உங்களைத் தொட்டு அவர் பின்னே செல்ல வைத்தது. இப்போது நீங்கள் அவரின் பின் துரத்திச் செல்லுங்கள்ழு ஒரு காரியத்தைச் செய்யுங்கள்: எப்போதும் இயேசுவோடு நெருங்கியிருங்கள்!

## பின்னானவைகளை மறக்கவும்

பிலிப்பியர் 3:13

கடந்த காலத்தின் பல காரியங்கள் நம்மை துக்கப்படுத்தவும், பெலவீனப்படுத்தவும் கூடும். அப்போது நாம் நல்லவர்களல்ல என்று நினைக்கத் தோன்றும். எனவே நம்மால் ஓட்டத்தை ஓட முடியாது. உங்களால் மறக்கக் கடினமாய் தோன்றுபவை எவை?

நாம் இயேசுவை விசுவாசிக்கும்போது அவர் நமது எல்லாப் தவறுகளையும், பாவங்களையும் மன்னித்து விடுகிறார். இயேசு அவைகளை மன்னித்து விட்டபடியால், நாம் அவைகளை மறந்து விட வேண்டும்! இயேசு நமது பாவங்களையெல்லாம் சிலுவையில் அறைந்து விட்டார். (ஏசாயா 43:25)

## பரிசை நினைவில் வைத்துக் கொள்ளவும்

பிலிப்பியர் 3:14

சில கிறிஸ்தவர்கள் தாங்கள் மிக நல்ல கிறிஸ்தவர்களென்றும், இனி படிப்பதற்கு அவர்களுக்கு வேறொன்றுமில்லையென்றும் நினைக்கிறார்கள்! எனவே அவர்கள் வேகமாக ஓடுவதை நிறுத்தி விடுகிறார்கள். பவுல் என்ன நினைக்கிறார்? பிலிப்பியர் 3:12

பவுல் இன்னும் அந்த இடத்தை அடையவில்லை. அவருக்கு இன்னும் அதிகமாக கற்க வேண்டியிருக்கிறது. அவர் இன்னும் அதிகமாக இயேசுவை விரும்புகிறார். எனவே பவுல் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கிறார். அவர் தன் கண்களை அந்தப் பரிசின்மேல் வைத்திருக்கிறார்.

**என்றென்றும் இயேசுவுடன் இருப்பதே அந்தப் பரிசாகும்.** நான் மாத்திரமல்ல, ஆனால் இயேசுவுக்குள்ளான என்னுடைய எல்லா சகோதரிகளும் அல்லது சகோதரர்களுக்குமாகும். நாம் ஒன்றாகப் பந்தயத்தில் ஓடுகிறோம். நாம் யாவரும் அந்தப் பரிசைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறோம். (அது எவ்வளவு அற்புதமாயிருக்கும் என்பதைக் குறித்துக் உரையாடவும்). 2 தீமோத்தேயு 4:7~8

இப்போது உங்களுக்கு இருக்கக்கூடிய, அல்லது உங்களால் சம்பாதிக்கக்கூடிய எல்லாப் பணத்தையும், உடைமைகளையும் பார்க்க வேண்டாம். அவை உங்கள் ஓட்டத்தை நிறுத்தி விடும்ழு பரிசைக் குறித்து சிந்தித்து, இயேசுவுக்காக ஓடுங்கள்!

# 15 பின்பற்றக்கூடிய இரண்டு வழிகள்

**பின்னணி**

இந்த நிருபத்தில் பவுல் நாம் பின்பற்றுவதற்கு அநேக நல்ல உதாரணங்களைக் கொடுக்கிறார் (பவுல், இயேசு, தீமோத்தேயு, எப்பாப்பிரோதீத்து). அவர் தவறானவைகளைக் கற்றுக் கொடுக்கும் கெட்ட உதாரணங்களைக் குறித்தும் எச்சரிக்கிறார் (பிலிப்பியர் 3:2).

இங்கே அவர் கூறிய எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறுகிறார். “சரியான மக்களைப் பின்பற்றுங்கள்” என்று அவர் கூறுகிறார். பிலிப்பியர் 3:12~4:1

**முக்கிய விடயம்**

சரியான வழியைப் பின்பற்றுங்கள். பரலோகத்திற்கு சொந்தமானவர்களைப் போல வாழுங்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியது**

பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். ஆனால் நாம் பேசும் மக்கள் எல்லோரும் இயேசுவை அறிந்திருக்கிறார்களா? இந்த இரண்டு விதமான மக்களையும் பார்க்கச் சொல்லுங்கள். அவர்கள். இரண்டு எதிரான வழிகளில் வாழ்ந்து, இரண்டு வித்தியாசமான இடங்களுக்குப் போய்ச் சேருகிறார்கள். அவர்கள் இவர்களில் யாரைப் போலிருக்க விரும்புகிறார்கள்?

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 3:17.** பவுல் இந்தக் கிறிஸ்தவர்களுக்கு ஒருமாதிரியைக் (உதாரணத்தை) காட்டியிருக்கிறார். அவர்கள் பின்பற்ற வேண்டிய ஒரு வாழ்க்கை முறையை அவர் காட்டுகிறார்.
- **பிலிப்பியர் 3:18.** பிலிப்பியர்3:2ஐ பார்க்கவும். இந்த மக்கள் (யூதர்கள்) தேவன் மேல் அன்பு செலுத்துவதாகக் கூறுகிறார்கள்! ஆனால் இயேசுவை நம்புவது மாத்திரம் போதாது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். நீங்கள் ஒரு யூதனாயிருக்க வேண்டுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள். இன்றும் அநேகர் இயேசுவின் மரணத்தின் மேல் விசுவாசம் வைப்பதற்கு **மேலதிகமாக** கிரியைகள் தேவையென்று கற்பிக்கிறார்கள். பவுல் அவர்களை சிலுவைக்கு பகைஞரென்று அழைக்கிறார்.
- **பிலிப்பியர் 3:19.** “அவர்களுடைய முடிவு அழிவு”. அவர்கள் நரகத்தில் முடிவடைவார்கள்.

  “அவர்கள் வயிறுதான் அவர்கள் தேவன்” - சரீரத்தின் தேவைகளை திருப்தி செய்பவைகள் மட்டுமே அவர்களுக்குத் தேவை (சாப்பாடு, பாலியல், வேடிக்கை...)

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 3:17-4:1

"அவர்களுடைய அவமானத்திலேயே அவர்களுடைய மகிமை" - அவர்கள் வெட்கப்பட வேண்டியவைகளைக் குறித்து பெருமைப்படுகிறார்கள்.

- **பிலிப்பியர் 3:20.** "பரலோகத்தின் பிரஜைகள்". அதன் அர்த்தமானது நமது தாய்நாடு பரலோகம். கிறிஸ்தவர்கள் பூமியில் பரதேசிகளாய் இருக்கிறார்கள். நாம் பரலோகத்துக்கு சொந்தமானவர்களைப் போல் வாழ வேண்டும்.
- **பிலிப்பியர் 3:21.** ஒருநாள் இயேசு திரும்ப வருவார். நமது பெலவீனமான சரீரங்களை அவருடைய வல்லமை மாற்றும். இயேசு அவருடைய சொந்த உடலைப்போலவே விசுவாசிகளுக்கும் உடலைக்கொடுப்பார். (1 கொரிந்தியர் 15:49-52).

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 3:17-4:1

### நீங்கள் பழகக்கூடிய தவறான மக்கள்

பிலிப்பியர் 3:18-19

உங்கள் நண்பர்களைத் தெரிவு செய்வதில் ஜாக்கிரதையாய் இருங்கள். இன்னும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மக்களுடன் கிறிஸ்தவர்கள் நல்ல நண்பர்களாய் இருப்பதை இயேசு விரும்புகிறார். ஆனால் நாம் அவர்களுடைய வழியைப் பின்பற்றுவதையோ, அவர்களைப்போல வாழ்வதையோ அவர் விரும்புவதில்லை. நாம் அவர்களுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

பவுல் ஏன் அழுகிறார்? நல்ல மனிதர்களைப் போல் காணப்படுபவர்களில் பலர் உண்மையில் சிலுவைக்கு எதிராளியாயிருக்கிறார்கள்! அவர்கள் ஆலயத்திற்குப் போகலாம். ஆனால், எமது பாவங்களுக்காக மரித்த இரட்சகரை விசுவாசிக்க அவர்களுக்கு விருப்பமில்லை. அவர்கள் இயேசுவின் பக்கமில்லை என்பதை அவர்கள் வாழ்க்கை காட்டுகிறது.

- பிலிப்பியர் 3:19ல் அவர்களைக் குறித்து பவுல் கூறும் நான்கு காரியங்கள் என்ன? (ஒவ்வொன்றையும் குறித்து உரையாடவும்).

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 3:17–4:1

இப்படியான மக்களை நீங்கள் அறிவீர்களா? ஒருவேளை அப்படியானவர்களை நீங்கள் தொலைக்காட்சியில் பார்க்க விருப்பமுள்ளவர்களாயிருக்கலாம். ஒருவேளை நீங்கள் அவர்களைப் போலிருக்கக்கூடும். இவர்களைப் பின்பற்ற வேண்டாம்; அப்படிச் செய்தால் நீங்கள் நரகத்தில் முடிவடைவீர்கள். **மத்தேயு 7:13–14**

நீங்கள் ஒரு கிறிஸ்தவனானால் நீங்கள் யாரைத் திருமணம் செய்யப்போகிறீர்கள் என்பதைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும். நீங்கள் தனிமையாயிருக்கப் பயப்படக்கூடும். ஆனால் இயேசுவின் மேல் அன்பு செலுத்தாத ஒருவரை நீங்கள் ஒருபோதும் திருமணம் செய்யக்கூடாது. அவருடன், அல்லது அவளுடன் ஒரு நெருங்கிய நட்பைக்கூட ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். அவர்கள் உங்களை தவறான வழியில் கொண்டு சென்று விடுவார்கள்.

### நீங்கள் பழகக்கூடிய சரியான மக்கள்

**பிலிப்பியர் 3:17,19–21**

அநேக மக்கள் நரகத்திற்கு நேராய் வழிநடத்தும் அகலமான பாதையில் செல்வார்கள். ஆனால் நம்மில் சிலர் குறுகிய, கடினமான பாதையில் செல்கிறோம். எனவே மற்றவர்கள் நம்மை புதுமையானவர்கள் என்று எண்ணுகிறார்கள். நாம் இப்படியானவர்களாயிருக்கிறோம்:

1. நாம் பரலோகத்தின் பிரஜைகள்; **பிலிப்பியர் 3:20** நீங்கள் பரலோகத்தில் பிறந்தவர் என்று கூறும் ஒரு கடவுச்சீட்டு உங்களுக்கு இருப்பதாகக் கற்பனைச் செய்யுங்கள்! இது அதைப்போலத்தான். கிறிஸ்தவர்கள் சிறிதுகாலம் இந்த உலகத்தில் ஜீவிக்கும் பரலோகத்திற்கு சொந்தமான மக்களாயிருக்கிறார்கள்.

- அதை நினைக்கும்போது அது எவ்வளவு வித்தியாசத்தை ஏற்படுத்தும்?

2. நாம் இயேசுவுக்காகக் காத்திருக்கிறோம் **பிலிப்பியர் 3:20.** இயேசு மீண்டும் வருவதாகக் கூறியதை நாம் நினைக்கிறோம். அவர் எங்களை வீட்டுக்கு அழைத்துச் செல்லப்போவதால் நாம் உற்சாகமடைகிறோம்!

3. இயேசு எங்களை மாற்றுவதற்கு நாம் காத்திருக்கிறோம் **பிலிப்பியர் 3:21.** வேதனையுடன், தனிமையில், ஏழையாக இருப்பது கடினம். ஆனால் நாம் இப்படியே அதிககாலம் இருக்கப் போவதில்லை! இயேசு நமது பலவீனமான சரீரங்களை மாற்றி விடுவார். அவர் நம்மை அவரைப்போல மாற்றுவார்.

இங்கே இரண்டு விதமான மனிதர்கள் இருப்பதை நாம் காணலாம். ஒன்று, இந்த உலகத்தையும், தங்களையும் மட்டும் நினைத்து வாழும் மக்கள். மற்றது, பரலோகத்தையும், இயேசுவையும் குறித்த சிந்தையில் வாழும் மக்கள். **நீங்கள்** எப்படி வாழ விரும்புகிறீர்கள்? **பிலிப்பியர் 4:1**

# 16 அதைச் செய்யவும்!

### பின்னணி

கிறிஸ்தவர்கள் எப்படிச் சிந்திக்க வேண்டுமென்பதைக் குறித்து பிலிப்பியர் 1-3 அதிகாரங்களில் பவுல் கற்றுக்கொடுக்கிறார். நாம் சரியான உதாரணங்களைப் நாம் பின்பற்ற வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் இயேசுவுக்காக ஜீவிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

பிலிப்பியர் 4ம் அதிகாரத்தில், இது நமது **நிஜ வாழ்க்கையில்** எப்படி கிரியை செய்கிறது என்பதைப் பவுல் காட்டுகிறார். நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் சண்டையிடுவதை நிறுத்துவதாகும். இரண்டு பெண்களும் இயேசுவைப்போல சிந்திக்க வேண்டும். பிலிப்பியர் 2:1~5, 4:1~5

### முக்கிய விடயம்

சண்டையிடுவதை நிறுத்துங்கள். கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருங்கள். சாந்த குணமுள்ளவர்களாயிருங்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது

இந்த இரண்டு பெண்களைப் போன்ற கிறிஸ்தவர்கள் உங்கள் சபையில் இருக்கிறார்களா? ஒருவேளை அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் கூட இருக்கலாம். இவ்விதமான பிரச்சினைகளுக்கு நமது கண்களை மூடிக் கொண்டிருக்காமலிருப்பது மிகவும் முக்கியம் என்று பவுல் காட்டுகிறார். தேவனுடைய வார்த்தை இந்த மக்களுடன் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள். யார் அவர்களுக்கு உதவக்கூடும் என்பதையும் குறித்துச் சிந்தியுங்கள். சண்டைகள் தொடர இடம் கொடுக்க வேண்டாம். அவை இயேசுவுக்கு அவமானத்தை ஏற்படுத்துவதுடன், சுவிசேஷத்தையும் நிறுத்தி விடும்.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 4:2.** இந்த இரண்டு பெண்களும் சண்டையை நிறுத்த வேண்டுமென்று பவுல் புத்தி சொல்லுகிறார். அத்துடன் இந்த நிருபம் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது! சண்டை, சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது மிகவும் முக்கியம்!
- **பிலிப்பியர் 4:3.** இந்தப் பெண்கள் சுவிசேஷத்தைப் பரப்புவதில் பவுலுடன் ஊழியம் செய்திருக்கிறார்கள்! அவர்கள் சண்டையிட்டுக் கொண்டது மிகவும் துக்ககரமானது. பவுல் எப்படி இன்னொருவரை இந்த விஷயத்தில் உதவி செய்யும்படி கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். நுகத்தடி (yoke-fellow) போல (பங்காளர்கள்) அனைத்திலும் சமனாக பங்காற்றும்படி கூறுகிறார்.
- **பிலிப்பியர் 4:5.** சாந்தகுணம். இதற்கு பொருள் “பலவீனம்” அல்ல. இரக்கமும், அக்கறையுமென்பதாகும்.

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 4:2–5

நம்மைவிட நாம்
மற்றவர்களைக் குறித்து அதிகம்
சிந்திக்க வேண்டும்.
**பிலிப்பியர் 2:3, 14; யாக்கோபு 3:17~18.**

- **பிலிப்பியர் 4-5.** "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்". இதற்கு அர்த்தம், இயேசு இங்கே நம்மோடு இருக்கிறார் என்பதாயிருக்கலாம். அல்லது அதன் பொருள் இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்பதாயிருக்கலாம். ஆனால் இரண்டுமே உண்மைதான். அவை இரண்டையுமே நாம் எப்போதும் மனதில் வைத்திருப்பது முக்கியம்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:2–5

### சண்டைகளை நிறுத்துங்கள்!

பிலிப்பியர் 4:2~3

⊞ இரண்டு பிரபல கால்பந்தாட்ட அணியைச் சேர்ந்த முகாமையாளர்கள் ஒருவரையொருவர் வெறுத்தனர். அனைத்துப் பத்திரிகைகளும் அதைப் பற்றி எழுதுகின்றன. ஒருவர் மற்றவர் தனக்கு விரோதமாகக் கூறிய யாவையும் மனதில் வைத்துக்கொண்டு அவருக்கு பிரச்சினையை உருவாக்க பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆனால், இது கால்பந்து விளையாட்டுக்கு தீங்கு விளைவிக்கும். கால்பந்தாட்டம் ஒரு நட்பான விளையாட்டாகும். அது ஒரு யுத்தமல்ல!

» நீங்கள் அப்படியானரா? உங்கள் மனதில் இன்னொருவருக்கு விரோதமாக எதையாவது வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் அவரைக் குறித்துக் கெட்டவைகளைக் கூறுகிறீர்களா? ஒருவேளை அவரைவிட்டு நீங்கள் தூரவிலகியிருக்கக்கூடும். நீங்கள் ஒரு கிறிஸ்தவனானால், இது இயேசுவுக்கு அவமானத்தைக் கொண்டு வருகின்றது. அது தேவனின் அன்பைக் குறித்த நமது செய்தி உண்மையல்லவென்று மக்களை நினைக்கப் பண்ணும். தேவனுடைய வார்த்தை அது நிறுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. உங்களுக்கு

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:2-5

மற்றவர்களுடன் இருக்கக்கூடிய சண்டைகளை சரிசெய்ய நீங்கள் என்ன செய்ய முடியும்?

- இந்த இரண்டு பெண்களும் முன்பு என்ன செய்திருக்கிறார்கள்? இப்போது அவர்கள் என்ன செய்கிறார்கள்?
- அவர்கள் சண்டையை நிறுத்த வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய பவுல் என்ன காரியங்களைச் செய்கிறார்?

உங்களால் ஒரு சமாதானம் பண்ணுகிறவராய் மாறி மற்ற கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய முடியும்.

### கர்த்தருக்குள் சந்தோஷம்!

பிலிப்பியர் 4:4

பவுலினால் கூறப்படுவதற்கு இவை எளிதான வார்த்தைகளல்ல! சில வருடங்களுக்கு முன் அவரும், சீலாவும் பிலிப்பியில் சிறையிலிருந்தார்கள். சேவகர்கள் அவர்களை அடித்தார்கள். அது அவர்களுக்கு மிகவும் வேதனையாயிருந்தது. ஆனாலும், அவர்கள் தேவனுக்கு பாடல்கள் பாடி துதித்தார்கள்! (அப்போஸ்தலர் 16:22-25)

இப்போது பவுல் மீண்டும் சிறையிலிருக்கிறார். சங்கிலிகள் அவருக்கு வேதனையைக் கொடுக்கின்றன. ஆனால் அந்த நிலைமையிலும் பவுல் “மிகுந்த சந்தோஷமாயிருங்கள்” என்று கூறுகிறார்!

- அவரால் எப்படி மிகுந்த சந்தோஷமாயிருக்க முடிகிறது? நாம் எப்படி **எப்போதும்** இந்த சந்தோஷத்துடன் இருக்க முடியும்?

கிறிஸ்தவர்களுடைய சந்தோஷம் அவர்கள் **வாழ்க்கையில் நடக்கும் காரியங்களினால் வரும் ஒன்றல்ல.** காரியங்கள் யாவும் நன்றாய் நடக்கும் போது மாத்திரம் இந்த சந்தோஷத்தையுடையவர்களாகவும், காரியங்கள் சரியில்லாமல் இருக்கும்போது துக்கமடைகிறவர்களாயும் நாம் இருப்பதில்லை. நமது சந்தோஷம் **கர்த்தருக்குள்** இருக்கிறது. நமக்கு என்ன நடந்தாலும் இயேசு நமக்கு எப்போதும் அதே அற்புதமான தேவனாயிருக்கிறார்.

- நீங்கள் இயேசுவுக்குள் எப்போதும் சந்தோஷமாயிருப்பதற்கு இயேசுவைக் குறித்த காரியங்கள் என்ன?

### சாந்தமாயிருங்கள்

பிலிப்பியர் 4:5

கிறிஸ்தவர்கள் கடினமாயிருக்கக்கூடாது. அவர்கள் தங்கள் சொந்த எண்ணங்களை குறித்து பெருமைப்பட்டுக்கொண்டு மற்றவர்களை அதிகாரம் பண்ணக்கூடாது. சில வேளைகளில் நாம் கடினமானவற்றைக் கூற வேண்டியிருக்கும். ஆனால் நாம் கவனமாயிருக்க வேண்டும். நாம் இயேசுவைப்போல அன்புடனும், சாந்தத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் மதிக்கும் ஒருவர் உங்கள் அறைக்குள் பிரவேசித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் பேசும் விதம் மாறுமல்லவா? அதுபோல் இயேசு எப்போதும் உங்கள் அறையில் இருப்பதை நினைத்துக் கொள்ளுங்கள்! அவர் ஒருநாள் தன் மக்களுக்காக திரும்பி வருவார். அவர் வரும் போது வெட்கப்பட்டுப்போக வேண்டாம்.

# 17 துக்க மருந்து

**பின்னணி**

நமது அனுதின வாழ்க்கையில் நாம் கிறிஸ்தவர்களைப்போல சிந்திக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அதாவது:

- கர்த்தருக்குள் ஒருவருக்கொருவர் இணக்கமுள்ளவர்களாய் இருப்பது (பிலிப்பியர் 4:2-3).
- எப்பொழுதும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பது. (பிலிப்பியர் 4:4)
- மக்களுடன் சாந்தமாய்ப் பழகுவது (பிலிப்பியர் 4:5).

அது நாம் நமது கவலைகளைக் கையாளும் விதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. பிலிப்பியர் **4:6~7**

**முக்கிய விடயம்**

உங்கள் கவலைகளை தேவனிடத்தில் கொடுத்து விடுங்கள். அப்போது அவருடைய சமாதானத்தைத் தருவதாக தேவன் வாக்களிக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியது**

இந்தச் சமாதானத்தைக் குறித்த வாக்குத்தத்தம் எல்லோருக்கும் உரியதல்ல. அது இயேசுவுக்குச் சொந்தமான மக்களுக்கு மட்டுமே சொந்தமாகும். நாம் நம்மை இரட்சிக்கும் இயேசுவை நம்பாமல் இருப்போமானால், நாம் **நிச்சயமாக** அதிகம் துக்கப்படுவோம். நமக்கு சமாதானமில்லையென்று தேவன் சொல்லுகிறார். உங்கள் பேச்சை கேட்பவர்களிடம், அவர்கள் பாவத்தை சிலுவையினிடத்தில் கொண்டு வந்து, தேவனுடைய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கூறுங்கள்.

**குறிப்புகள்**

- **பிலிப்பியர் 4:6.** பவுல் "ஜெபிக்கும்" படி மட்டும் கூறவில்லை. நாம் சரியாக ஜெபிப்பதற்கு நமக்கு உதவி செய்வதற்காக அவர் இன்னும் மூன்று வார்த்தைகளை உபயோகிக்கிறார்.

  "வேண்டுதல்" - இது தாழ்மையுடன் கேட்பது. நாம் ஒன்றுக்கும் தகுதியில்லாதவர்கள். ஆனால், நாம் ஒரு பெரிய கடவுளிடம் வருகிறோம்.

  "ஸ்தோத்திரம்" - உங்கள் கவலைகளை நிறுத்துவதற்கு ஒரு நல்ல வழி, தேவன் உங்களுக்குச் செய்திருக்கும் யாவற்றிற்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதாகும்.

  "விண்ணப்பங்கள்" - நமக்கு உண்மையில் தேவையாயிருப்பதை தேவனிடம் கேட்கிறோம். நாம் "தேவனே நான் கவலைப்படுகிறேன்" என்று சொல்வதை விட, அதைக்குறித்து நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை அவரிடம் கேட்கிறோம்.

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 4:6–7

- **பிலிப்பியர் 4:7.** "புத்திக்கும் மேலான". தேவனுடைய சமாதானம் நாம் புரிந்து கொள்ள முடியாதது.
- **பிலிப்பியர் 4:7.** "காத்துக்கொள்ளும்" பிலிப்பியிலுள்ள மக்கள் காவலாளர்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். பிலிப்பி ஒரு ரோம நகரமாயிருந்தது. அநேக ரோமச் சேவகர்கள் அதைக் காவல் காத்தார்கள். தேவனுடைய சமாதானம் அந்த ரோமச் சேவகர்களைப் போன்றதென்று பவுல் கூறுகிறார். அது நம்மை பாதுகாக்கிறது. அது நமது எதிரிகளாகிய பயங்களை நமக்குள் வரவிடாமல் தடுக்கிறது.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:6–7

### மருந்தை உட்கொள்ளவும்

பிலிப்பியர் 4:6

⊞ துக்கத்துக்கு மருந்தை கடையில் வாங்க முடியும் என்று கற்பனை செய்யுங்கள். அது அதிக பலனளிக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள். மருந்தினை விட துக்கமானது மிகப்பெரியதொரு பிரச்சினையாகும்.

ஆனால் அவருடைய துக்க மருந்து நிச்சயம் **பலனளிக்கும்** என்று தேவன் உறுதியளிக்கிறார். நம்மால் புரிந்து கொள்ளமுடியாத அளவு அது பலனளிக்கிறது. ஆனால் நாம் **அந்த மருந்தை உள்ளெடுக்க வேண்டும்**. தேவன் சொல்லுவதை கவனமாகக் கேளுங்கள்.

1. **"கவலைப்பட வேண்டாம்".** இப்படி உங்கள் நண்பரொருவர் உங்களிடம் கூறினால் வழக்கமாக அதினால் ஒரு பிரயோஜனமுமிருப்பதில்லை! ஆனால் இதை **தேவன்** நமக்குக் கூறுகின்றார் என்பதை மறக்க வேண்டாம். நாம் தொடர்ந்து கவலைப்படும்போது நாம் தேவனைத் துக்கப்படுத்துகிறோம். ஏனென்றால் அவர் நாம் கவலைப்படக்கூடாது என்று கூறுகின்றார்.

- நமக்கொரு பெரிய பிரச்சினையிருக்கும் போது நாம் கவலைப்படலாமா?

2. **"ஜெபிக்கவும்"** தேவன் "கவலைப்பட வேண்டாம்" என்று மாத்திரம் கூறாமல், அவர் மருந்தையும் கொடுக்கிறார்.

# ⬇ பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:6 – 7

கவலைப்படுவதற்கு பதிலாக கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டுமென்று கூறுகிறார். நாம் நமது எல்லாக் கவலைகளையும் அவரிடம் கொடுத்துவிட வேண்டுமென்று அவர் கூறுகிறார். (எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதைக் குறித்து பவுல் கூறும் யாவற்றையும் குறித்து உரையாடவும் - குறிப்புகளைப் பார்க்கவும். நாம் கவலைப்படாமலிருப்பதற்கு அவை ஒவ்வொன்றும் ஏன் முக்கியம்?)

தேவன் எங்கள் பிதாவாயிருக்கிறார். அவர் நம்மை பாதுகாத்து பராமரிப்பார். நாம் ஒரு சிறு குழந்தையைப்போல நமது சிறு கைகளை அவருடைய பெரிய கைக்குள் வைத்து, நாம் பாதுகாப்பாயிருப்பதை உணர முடியும். 📖 **மத்தேயு 6:25–34**

⊞ உங்களுக்கு ஒரு பணப்பிரச்சினையிருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் அனைத்து பற்றுச்சீட்டுகளையும் எடுத்துக் கொண்டுபோய் உங்கள் நண்பரிடம் கதைக்கிறீர்கள். இரண்டுமணி நேரம் உங்கள் நண்பன் கேட்டுக்கொண்டு இருக்கிறார். அதன்பின் அப்பற்றுச்சீட்டுகளுடன் மீண்டும் உங்கள் வீட்டிற்குத் திரும்புகிறீர்கள். அது உங்களை உங்கள் கவலையிலிருந்து விடுதலை செய்ததா? இல்லை, இன்னும் உங்களுக்கு பணப்பிரச்சினையிருக்கிறது! எனவே உங்கள் பிரச்சினையைக் குறித்து ஏதாவது **செய்யக்கூடிய** ஒருவரைத் தேட வேண்டும்.

ஜெபிக்கும் போது, நாம் நமது பிரச்சினைகளைக் குறித்து பேசுவதற்கு மாத்திரம் வருவதில்லை. நாம் நமது பிரச்சினைகளைத் தேவன் **தீர்த்து வைப்பாரென** நம்புகிறோம். அவைகளை அவரிடமே விட்டு விடுங்கள்! கவலையை அவரிடம் கொடுத்து விட்டு மீண்டும் அதை எடுத்துக்கொள்ள வேண்டாம். 📖 **1 பேதுரு 5:7.**

» தேவனுடைய துக்க மருந்தை உட்கொள்ளவும்! 📖 **பிலிப்பியர் 4:6.** நீங்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவீர்களா? நம்மில் சிலருக்கு இது அதிகக் கடினமாகத் தோன்றலாம். ஆனால், அவர் சொல்வதை நாம் செய்யும்போது தேவன் நமக்கு உதவி **செய்வார்.**

## தேவனின் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

📖 **பிலிப்பியர் 4:7**

(கவலை வேளைகளில் தேவன் அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுத்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறித்து கூறும்படி மக்களை கேளுங்கள்)

பிரச்சினைகள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் எவ்வளவு பயந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதும் பெரிதல்ல. தேவனுடைய சமாதானம் எல்லாவற்றையும்விட சக்தி வாய்ந்தது. அது அவருடைய விசேட சமாதானம். அதை நம்மால் விபரிக்க முடியாது. காவல்காரன் எதிரியை வெளியே வைப்பது போல அது கவலையை வெளியே வைக்கிறது.

தேவன் அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவர். நீங்கள் அவர் மருந்தை உட்கொண்டால் அவர் உங்களுக்கு சமாதானத்தை தருவார்.

# 18 சரியாகச் சிந்திக்கவும் சரியாகச் செய்யவும்

### பின்னணி

இந்த நிருபத்தில் பவுல் நாம் எப்படி **சரியாகச் சிந்திப்பது** என்பதை நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார். நாம் சரியாக சிந்தித்தால், சரியாக வாழ்வோம். நாம் இந்த விடயத்தில் பின்பற்றக்கூடிய பல உதாரணங்களை பவுல் நமக்குக் காட்டியிருக்கிறார். "அவர்களைப்போல சிந்திக்கவும், அவர்களைப்போல ஜீவிக்கவும்!" என்பதே அவருடைய செய்தியாகும்.

பவுல் மீண்டும் இதைக் கூறுகிறார். **பிலிப்பியர் 4:8~9**

(இந்த இரண்டு வசனங்களையும் அவருடைய முழு நிருபத்தின் சுருக்கமாக எடுத்துக்கொள்ளலாம். விசுவாசிகளால் அனுப்பப்பட்ட பரிசுக்காக அவர் அவர்களுக்கு நன்றி கூறுகிறார். பிலிப்பியர் 4:10-23.)

### முக்கிய விடயம்

சரியானவைகளைக் குறித்து **சிந்தியுங்கள்.** வேதவசனம் சொல்லுவதைச் **செய்யுங்கள்.**

### நீங்கள் செய்ய வேண்டியது

நாம் என்ன **நினைக்கிறோம்** என்பது முக்கியமல்ல, ஆனால் **எதைச் செய்கிறோம்** என்பதே முக்கியம் என்று அநேக கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் நல்ல கிறிஸ்தவர்களென்று மற்றவர்கள் நினைக்கவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இது தவறான எண்ணமாகும். நமது எண்ணங்களும், மனப்பான்மைகளுமே நமது செய்கைகளுக்கு நம்மை வழிநடத்துகின்றன. இதை உங்கள் செய்தியைக் கேட்பவர்களுக்கு விளக்க உங்களுக்கு உதவும்படி தேவனிடம் கேளுங்கள். இயேசு நமது மனதையும், இருதயத்தையும் மாற்ற வந்தார். அவர் நம்மை நமது தவறான எண்ணங்களிலிருந்து விடுதலை செய்ய வந்தார். நமது எண்ணங்கள் முதலில் சரியாக இருந்தால் மட்டுமே நம்மால் சரியான வாழ்க்கை வாழமுடியும்.

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 4:8.** உங்கள் மனதை நல்லவைகளினால் நிரப்புங்கள்! பவுல் "நல்லவைகளை" விவரிக்க அநேக வித்தியாசமான வார்த்தைகளை உபயோகிக்கிறார். "உன்னதம்" என்பது பெறுமதி. "போற்றத்தக்க" (கௌரவமான) என்பது பெறுமதி அல்லது கவர்ச்சிகரமான என்று பொருள்படும்.
- **பிலிப்பியர் 4:9.** பவுல் அவர்களுக்கு அநேக காரியங்களைக் கற்றுக்கொடுத்திருக்கிறார். அவைகளை அவர்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 4:8 – 9

பிலிப்பியிலிருக்கும்போது அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இந்த நிருபத்தின் மூலமாகவும் கற்றுக் கொடுத்தார். அவர்களுக்குப் பவுல் எப்படி வாழ்கிறாரென்பதைக் குறித்துத் தெரியும். அவர் எதைப் போதிக்கிறாரோ, அதையே செய்பவர். இங்கே பவுல் இப்படி கூறுகிறார்: "நீங்கள் அதைச்செய்யுங்கள்!". நாம் கற்றால் மட்டும் போதாது. நாம் கிறிஸ்தவர்களாக வாழ வேண்டும்.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:8 – 9

### சரியாகச் சிந்திக்கவும்!

பிலிப்பியர் 4:8

- பவுல் எதைக் குறித்து சிந்திக்க விரும்பினார்?
- நீங்கள் எதைக் குறித்து சிந்திக்க விரும்புகிறீர்கள்?
- அது எந்தளவிற்கு பிலிப்பியர் 4:8 உடன் ஒத்துப்போகிறது?

நாம் எப்படி சிந்திக்கிறோம் என்பது மிக முக்கியம். அதுவே நாம் வாழும் விதத்தை நிர்ணயிக்கின்றது. நாம் எவ்வளவு அதிகமாக இயேசுவைப்போல சிந்திக்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக இயேசுவைப் போல இருப்போம்.

» தவறான எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது நமக்குக் கடினமாகத் தோன்றலாம். பால் உறவு, அல்லது பணத்தைக் குறித்த தவறான எண்ணங்கள், பொறாமையான எண்ணங்கள், கோபமான எண்ணங்கள், சுயநலமான எண்ணங்கள் இவை யாவையும் இப்போதே தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து இவைகளுக்காக மன்னிப்பு கேளுங்கள். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு உதவிசெய்யும்படி இன்றே அவரிடம் கேளுங்கள். நல்லவைகளைக் குறித்து சிந்திக்கப் பழக உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.

- கிறிஸ்தவர்கள் அவர்களுடைய எண்ணங்களைக் கட்டுப்படுத்தப் பழகுவது எப்படி? (இதைக்

குறித்து அனைவரும் ஒன்றாகக் கலந்துரையாடவும்.)

அநேக காரியங்கள் நமக்கு உதவி செய்கின்றன. நாம் எதைப் பார்க்கிறோம், எதை வாசிக்கிறோம், எதை கேட்கிறோம் என்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். "அது உண்மையா, நல்லதா?" எனக் கேளுங்கள். நாம் நல்லவைகளைக் குறித்துக் உரையாடும்போது ஒருவருக்கொருவர் உதவிசெய்யலாம். நாம் முடியாது என்று விரைவில் விட்டுவிடக்கூடாது. தேவனுடைய ஆவியானவர் அவருடைய மக்களுக்கு உதவி செய்வார். ஆனால் நாம் சிந்திக்கும் விதத்தை மாற்றுவதற்கு அதிக காலம் எடுக்கக்கூடும். அதைக் குறித்து ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டும்.

நமது எண்ணங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சிறந்த வழி பிலிப்பியர் 4:8க்குக் **கீழ்ப்படிவதாகும்**. தேவன் நம்மிடம் **உண்மையானவைகள், தூய்மையானவைகள், அன்புள்ளவைகள்** முதலியவற்றைக் குறித்தே எப்போதும் சிந்திக்க வேண்டுமென்று கூறுகிறார். நாம் நமது மனதை நல்லவைகளினால் நிரப்பி வைத்திருப்போமானால், அங்கே குப்பைகளுக்கு இடமிருக்காது!

இங்கே சில கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகமாகத் தேடுங்கள். நீங்கள் எப்படி மற்றவர்களுக்கு உதவிசெய்ய முடியும் என்பதைக் குறித்து சிந்தியுங்கள். இயேசுவுக்காக பாடுகளை அனுபவிக்கும் கிறிஸ்தவர்களைக் குறித்து அறிந்து, அவர்களுக்காக ஜெபியுங்கள். மிஷனரி ஊழியக்காரர்களுக்கு எழுதுங்கள். எப்படி மற்றவர்களுக்கு இயேசுவைக் குறித்து கூற முடியும் என்று சிந்தியுங்கள். தேவனைக் குறித்து அறிந்து கொள்ள உதவும் புத்தகங்களை வாசியுங்கள்.

நாம் சிந்திக்கக்கூடிய மிகச்சிறந்த விடயம் **வேதாகமத்தைப்** பற்றியேயாகும். **பிலிப்பியர் 4:8.** அங்கு சொல்லப்பட்ட நல்லவைகள் யாவும் வேதாகமமே. ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசியுங்கள். அதில் முக்கியமானவைகளை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதைக்குறித்து பணி செய்யும் இடத்தில், வீட்டில், தோட்டத்தில் - எங்கும் சிந்தித்துக் கொண்டிருங்கள். **சங்கீதம் 19:7–11**

## சரியாகச் செய்யவும்!

**பிலிப்பியர் 4:9**

பிலிப்பியிலுள்ள சபையைக் குறித்து கற்பனை செய்யுங்கள். அவர்களுக்குப் பவுலிடமிருந்து வந்த இந்த நிருபம் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர்கள் யாவரும் ஒன்றாக அதை வாசித்தார்கள். அடுத்து மிக முக்கியமான பகுதி வருகிறது! அவர்கள் அந்த நிருபத்தை தள்ளி வைத்துவிட்டு அதை மறந்து விடுவார்களா? அல்லது அவர்கள் மனதில் பதியும் வரை அதை மீண்டும் வாசிப்பார்களா? தேவன் பவுல் மூலம் அவர்களுக்குச் சொல்லும் காரியங்களை அவர்கள் **பின்பற்றுவார்களா**?

நம்மைப் பொறுத்தமட்டில், நீங்களும். நானும் எப்படி? நாம் ஒன்று கூடுவது வேதாகமம் என்ன சொல்லுகிறதென்று அறிந்துகொள்வதற்காக மட்டுமல்ல. நாம் அதைச் செய்ய வேண்டும். இந்த நிருபம் இதுவரை எப்படி உங்களை மாற்றியிருக்கிறது என்பதைக் குறித்துக் கூடிக் கலந்துரையாடவும். நீங்கள் எவைகளைச் சரிசெய்ய முயல வேண்டும்?

# 19 திருப்தியாயிருப்பது எப்படி

### பின்னணி

பவுல் தன் நிருபத்தை முடிக்கும்போது நன்றியென்று கூறுகிறார். பிலிப்பியில் இருந்த அவருடைய நண்பர்கள் அவருக்குப் பரிசுகள் அனுப்பியிருந்தார்கள்.

பவுல் நன்றியென்று மட்டும் கூறாமல், சில பாடங்களையும் கற்றுக் கொடுக்கிறார். கிறிஸ்தவர்கள் எப்படிச் சிந்திக்க வேண்டுமென்பதைக் குறித்து நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றுஅவர் விரும்புகிறார்.

பிலிப்பியர் 4:10~23

### முக்கிய விடயம்

வாழ்க்கை எப்படியாயிருந்தாலும், கிறிஸ்தவர்கள் இயேசுவுக்குள் திருப்தியாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

### நீங்கள் செய்ய வேண்டியது

திருப்தியாக இருப்பது எப்படி என்பதை கற்பது நம்மில் அநேகருக்கு மிகவும் முக்கியமாகும். ("திருப்தி" என்பது, தேவன் எங்களுக்குக் கொடுத்திருப்பவைகளுக்காக நாம் மனதுக்குள் சந்தோஷமாய் இருப்பதாகும்). அநேக கிறிஸ்தவர்கள் எப்படி பணக்காரர்களாக வேண்டுமென்று கற்பதற்கு விருப்பப்படுகிறார்கள். ஆனால், எப்படித் திருப்தியாக இருப்பது என்பதைக் கற்க அவர்கள் விரும்புவதில்லை. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கும் இக்கூற்று பொருந்தும். இந்த உலகத்தின் மக்களில் அநேகர் சந்தோஷமாக வாழ்வதில்லை. அவர்கள் எப்போதும் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த பல முயற்சிகளை மேற்கொள்ளுகிறார்கள். அப்படியே அவர்கள் பணக்காரர்களாக மாறினாலும் கூட இன்னும் அவர்கள் எதிர்பார்த்த சந்தோஷம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. பவுல் திருப்தியாக இருக்கிறார். ஏனென்றால் அவருக்கு இயேசுவைத் தெரியும். இயேசு அவருடைய எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுகிறார். (நீங்கள் உரையாடும் மக்கள் கிறிஸ்தவர்களாயில்லாவிட்டால் உங்கள் உரையாடல் குறிப்புகளை மாற்றுங்கள்)

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 4:10.** பிலிப்பியிலிருந்த கிறிஸ்தவர்கள் அடிக்கடி பவுலுக்கு உதவி செய்தார்கள். அவருடைய சமயப்பணிக்காக (மிஷனரி) அவர்கள் அவருக்குப் பணம் அனுப்பினார்கள். (பிலிப்பியர் 4:15-16) அவர்களால் இதை அதிக காலம் செய்ய முடியாமலிருந்தது. ஆனால் அவர்கள் அவரை மறந்து விடவில்லையென்பது பவுலுக்குத் தெரியும். அவருக்கு உதவியனுப்ப அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 4:10–13

- **பிலிப்பியர் 4:11.** பவுல் அவர்களுடைய பரிசுகளை விரும்பினார். ஆனால் பரிசுகள் வராமலிருந்தபோதும் சந்தோஷமாயிருந்தார்! ஒன்றுமே இல்லாமல் இருக்கும்போது கூட அவர் சந்தோஷமாக இருக்கக் கற்றுக் கொண்டிருந்தார்!
- **பிலிப்பியர் 4:13.** இயேசு நம்மை திருப்தியடையப் பண்ணுகிறார். திருப்தியாக இருப்பது முடியாத காரியமாகத் தோன்றக்கூடும். ஆனால் இயேசுவை விசுவாசிக்கும் போது எல்லாம் கூடும். இயேசுவின் வல்லமை நாம் அவரை நம்பும்போது நம்மை பெலப்படுத்தும். (இயேசுவின் வல்லமையின் மூலம் அவர் விரும்பும் எல்லாவற்றையும் அவரால் செய்ய முடியுமென்று பவுல் கூறுவதாக நாம் நினைக்கக் கூடாது. தேவன் அவர் வாழ்க்கையில் அனுமதிக்கும் எதையும் இயேசுவின் வல்லமையின் மூலம் கடந்து போக முடியுமென்றே பவுல் கூறுகிறார்.)

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:10–13

### உள்ளான திருப்தி

பிலிப்பியர் 4:10–உ12

பிலிப்பியிலிருந்து எப்பாப்பிரோதீத்து பரிசுடன் வந்தபோது பவுல் மிகவும் சந்தோஷப்பட்டார்! ஆனால் அவர் **வருமுன்பும்** பவுல் சந்தோஷமாயிருந்தார். ஏன்?

- பவுல் சந்தோஷமாக இருந்திருக்க முடியாத எல்லாக் காரணங்களையும் குறித்து சிந்தியுங்கள் (அவருக்கு சுதந்திரம் இருக்கவில்லை, சங்கிலிகள் அவருக்கு வேதனையைக் கொடுத்தன, அவர் சிறையில் அநேக மாதங்கள் இருந்திருக்கிறார், தனக்கு என்ன நடக்கப்போகிறதென்று அவருக்குத் தெரியாது...)

ஆனால் பவுல் சிறையிலும் திருப்தியாக இருந்தார். ஏன்? அதற்குக் காரணம் அவர் **உள்ளே** திருப்தியாக இருந்தார். அவர் சந்தோஷமாயிருப்பதற்கு அவருக்கு சுதந்திரம் தேவைப்படவில்லை! அவர் சந்தோஷமாயிருப்பதற்கு அவருக்கு வசதிகள் தேவைப்படவில்லை! அவரை சந்தோஷப்படுத்த அவருக்குப் பணம் தேவைப்படவில்லை! நீங்கள் எப்படி?

⊞ உங்களுக்கு ஒரு பண்ணையிருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான எல்லா உணவும் இருக்கிறது.

உங்களுக்குச் சொந்தக்கிணறும் இருக்கிறது. ஒரு ஆற்றிலிருந்து உங்களுக்குத் தேவையான மின்சாரத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள். உங்களுக்கு எதையும் வெளியிலிருந்து கொண்டுவர வேண்டுமென்ற அவசியம் இல்லை. உங்களுக்குத் தேவையான யாவையும் பண்ணைக்கு உள்ளேயே கிடைக்கின்றன.

பவுல் அந்தப் பண்ணையைப் போன்றவர். அவருக்குத் தேவையான அனைத்தும் **அவருக்குள்ளிருந்தே** கிடைக்கின்றன. வெளியில் அவருக்கு என்ன நேர்ந்தாலும் அவர் திருப்தியாக இருக்கிறார்.

உங்களுக்கு உள்ளான திருப்தியிருக்கிறதா? அல்லது ஒரு அழகான வீடு உங்களைத் திருப்திபடுத்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது அதிக பணம்? அல்லது நல்ல உத்தியோகம்? அல்லது நல்ல கணவன் அல்லது மனைவி?

ஆனால் என்ன நடக்கிறது? உங்களுக்கு ஒரு பொருள் கிடைக்கும்போது, இன்னொன்று தேவைப்படுகிறது. அல்லது நீங்கள் இன்னும் திருப்தியடையவில்லை. அதற்குக் காரணம் நீங்கள் **உள்ளே** திருப்தியுடையவராயிருக்க வேண்டியது தேவையாகும்.

வாழ்க்கை மிகவும் கடினமாயிருப்பதால் திருப்தியுடன் வாழ்வது கஷ்டமென்று நீங்கள் நினைக்கலாம். உங்களுக்கு அதிக வேதனையிருக்கலாம். ஆனால் பவுல் கூறுவதை நினைத்துக் கொள்ளுங்கள். "நான் எந்த நிலையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் **கற்றுக்கொண்டேன்**" அது எளிதல்ல. அதற்கு அநேக வருடங்கள் எடுக்கலாம். ஆனால் தேவன் நாம் திருப்தியாக இருக்க நமக்குக் கற்றுக் கொடுக்க விரும்புகிறார்.

எனவே, இது எப்படி சாத்தியமாகும்? கிறிஸ்தவர்கள் **எப்படி உள்ளான** திருப்தியுடன் வாழ முடியும்?

## இயேசுவில் திருப்தியடைதல்

பிலிப்பியர் 4:13

அந்தப் பண்ணையைக் குறித்து சிந்தியுங்கள். எல்லாம் உள்ளேயிருந்து வருகின்றன. ஆனால் உங்களிலிருந்தல்ல! இயேசுவே நமது உணவும், தண்ணீரும், மின்சாரமுமாய் இருக்கிறார். இயேசு எல்லாவற்றையும் கொடுக்கிறார். ஆதலால் நாம் திருப்தியாயிருக்க முடியும். அது நமது வாழ்க்கையை இலகுவாக்காது! ஆனால் நாம் நமக்கு தொடர்ந்து உதவி செய்ய இயேசுவை நம்புகிறோம். வாழ்க்கை மிகவும் கடினமாயிருக்கும் போது கூட விசுவாசிகள் திருப்தியுடன் இருக்க முடியும். ஏனென்றால் நமது பிதா இவை யாவையும் நமக்குத் திட்டமிட்டிருக்கிறார். நமது இரட்சகர் அவைகளைக் கடந்து செல்ல நமக்குப் பெலன் தருகிறார்.

**யோவான் 7:37-38. மற்றவைகளின்** மூலம் சந்தோஷப்பட முயற்சிக்க வேண்டாம்! இயேசு ஜீவதண்ணீராக **நமக்குள்** இருக்கிறார். உங்களுக்குள் இயேசு இருந்தால், ஒருவேளை உங்களுக்குப் பணமோ, வீடோ, சுகமோ இல்லாமல் இருக்கக்கூடும். ஆனால், உங்களுக்கு மன்னிப்பு, சமாதானம், பரலோகம் முதலியன இருக்கின்றன. நீங்கள் அவரோடு சதாகாலமும் வாழ்வீர்கள். எனவே, இப்போது நீங்கள் திருப்தியாயிருக்கிறீர்களா?

# 20 தேவனுக்குக் கொடுத்தல்

### பின்னணி

பவுல் அவருடைய நிருபத்தை முடிக்கும் போது அவருடைய நண்பர்களுக்கு அவர்களுடைய அன்புப் பரிசுக்காக நன்றி கூறுகிறார். அவர்களுடைய தாராள மனப்பான்மையைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறாரென்பதையும் அவர் கூறுகிறார். பிலிப்பியர் 4:14~23

### முக்கிய விடயம்

தேவனுக்குக் கொடுங்கள் - அது ஆராதனை! தேவனுக்கு கொடுங்கள் - அவர் உங்களை கவனித்துக்கொள்ளுவார் என்று நம்புங்கள்!

### நீங்கள் செய்ய வேண்டியது

சபை உங்களுக்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்பதற்காக கொடுப்பதைப் பற்றி ஒருபோதும் பிரசங்கிக்க வேண்டாம்! பவுல் அதிகமான பரிசுகளை எதிர்பார்க்கவில்லை (பிலிப்பியர் 4:17). உங்கள் தேவைகள் சந்திக்க தேவனை நம்புங்கள் (பிலிப்பியர் 4:19).

உங்கள் சபை எவ்வளவு தாராள மனப்பான்மையுடையதாய் இருக்கிறது? அது மற்ற சபைகளுக்கு அல்லது மிஷனரி ஊழியங்களுக்கு உதவி செய்கின்றதா? இந்த வார காணிக்கையை அதனால் கொடுக்க முடியுமா? இதுவே நல்லவிதமாக தேவனை ஆராதிப்பதாக அமைய முடியும் (பிலிப்பியர் 4:18).

### குறிப்புகள்

- **பிலிப்பியர் 4:15-16.** பிலிப்பி மக்கெதோனியா என்னும் பகுதியில் இருந்தது. அங்கிருந்த அநேக கிறிஸ்தவர்கள் ஏழைகளாயிருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் பவுலுக்குப் பணம் அனுப்பினார்கள். இது இயேசுவைக் குறித்து மற்ற இடங்களில் கூறுவதற்கு பவுலுக்கு மிகவும் உதவியாயிருந்தது. (2கொரிந்தியர் 8:1-5).
- **பிலிப்பியர் 4:17.** பவுல் இந்த கிறிஸ்தவர்கள் பணம் கொடுப்பதை விரும்புகிறார். அது அவர்களுக்கு **உதவியாயிருக்கும்,** அவருக்கல்ல! பவுல் ஓர் உதாரணத்தைக் காட்டுகிறார். தேவன் அவர்கள் கொடுக்கும் பரிசுகளை **அவர்களுடைய** வங்கிக் கணக்கில் போடுவதைப் போன்றதாகும்! பவுல் பணத்தைக் குறிப்பிடவில்லை. அவர்கள் கொடுக்கும் போது தேவன் அவர்களைப் பல விதத்தில் **ஆசீர்வதிப்பார்** என்றே அவர் கூறுகிறார்.
- **பிலிப்பியர் 4:18.** பவுலுக்கு அவர்கள் கொடுக்கும் பரிசுகள் உண்மையில் அவர்கள் தேவனுக்கு செலுத்தும்

## கற்றுக்கொள்ளுங்கள்: பிலிப்பியர் 4:14 –23

ஆராதனையாகும்! அந்தப் பரிசுகள் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கும்.

- **பிலிப்பியர் 4:19.** தேவன் அவருடைய பிள்ளைகளுக்காக ஒரு வீடு நிறைய விலை மதிக்க முடியாத பொருட்களை வைத்திருக்கிறார். இயேசு சிலுவையில் மரித்தபோது இவை யாவையும் விசுவாசிகளுக்காக சம்பாதித்தார். எனவே நாம் ஒருபோதும் கவலைப்படத் தேவையில்லை. அவர் எங்களை கவனித்துக்கொள்ளுவார்!
- **பிலிப்பியர் 4:22.** இராயன் (ரோமாபுரியின் அரசன்) முழு உலகத்தையும் அவனை ஆராதிக்க வேண்டுமெனக் கூறினான். ஆனால் அவனுடைய வேலைக்காரர்களில் சிலர் இயேசுவை ஆராதித்தார்கள்! இது பவுலுக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது.
- **பிலிப்பியர் 4:23** (பிலிப்பியர் 1:2). இவைகள் இந்த நிருபத்தை முடித்து வைக்கும் வெறும் வார்த்தைகளல்ல. அவர்களுக்குத் தேவையானதெல்லாம் இயேசுவின் கிருபையே. கிருபையே மன்னிப்பில் தொடங்கி பரலோகத்தில் முடிவடையும் இலவச பரிசாக இருக்கிறது.

## பிரசங்கியுங்கள்: பிலிப்பியர் 4:14 –23

### வழக்கத்திற்கு மாறாகக் கொடுத்தல்

**பிலிப்பியர் 4:14–16**

அநேக கிறிஸ்தவர்கள் குறைந்தளவு பணத்தையே தேவனுக்கு கொடுப்பார்கள். பவுல் இந்த கிறிஸ்தவர்களை மிகவும் நேசிக்கிறார். ஏனென்றால் அவர்கள் **தம்மையே** அவருக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் அவருடைய பங்காளிகள். பவுலைப் போலவே அவர்களும் சுவிசேஷத்தை நேசிக்கிறார்கள். மற்ற மக்களுக்கு இயேசுவைப் பற்றி கூறுவதற்கு அவர்கள் அவருக்கு உதவி செய்கிறார்கள். அதனால்தான் பவுல் மகிழ்ச்சியடைகிறார். அவர்கள் பரிசு, பணத்தைவிட அதிக உயர்ந்தது. **மற்ற எந்த** சபையும் அவரைக் குறித்து இவ்வளவு அக்கறை காட்டவில்லை.

> பிலிப்பிய கிறிஸ்தவர்களைப் போலிருங்கள். உங்களால் அதிகம் கொடுக்க முடியாமலிருக்கலாம். ஆனால், நீங்கள் **எப்படி** கொடுக்கிறீர்களென்பதே முக்கியமாகும். உங்கள் இருதயத்தைக் கொடுங்கள். உங்கள் ஜெபங்களைக் கொடுங்கள். சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## பாதுகாப்பாக கொடுத்தல்

📖 பிலிப்பியர் 4:17~19

⊞ ஒரு கிறிஸ்தவ நண்பர் உங்களிடம் ஒரு பரிசுடன் வருகிறார். அது அவருக்கும் தேவையானது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதை உங்களுக்குக் கொடுத்தால் அவர் கஷ்டப்பட வேண்டி வரும் என்று நீங்கள் பயப்படுகிறீர்கள். ஒருவேளை நீங்கள் "நன்றி, ஆனால் இதை என்னால் உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது" என்று கூறுகிறீர்கள்.

- அது சரியா? அவருடைய பரிசு இயேசுவின் மீதுள்ள அவருடைய அன்பின் மூலம் வந்திருக்குமானால், **அவர்** கஷ்டப்படுவாரா? 📖 பிலிப்பியர் 4:17

பவுல் அவருடைய நண்பர்களைக் குறித்தும் கவலைப்படவில்லை! அவர்கள் கொடுத்ததைக் குறித்து அவர் சந்தோஷப்பட்டார். அது அவர்களுக்கு **நல்லது**. ஏனென்றால் தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார்.

⊞ இப்போது இப்படி கற்பனை செய்யுங்கள். உங்கள் நண்பருக்கு ஒரு செல்வந்தனான நண்பருண்டு. அப்போதும் நீங்கள் அவரைக் குறித்து கவலைப்படுவீர்களா? இல்லை, ஏனென்றால் அந்தப் செல்வந்தனான நண்பர் அவருக்குத் தேவையான யாவற்றையும் கொடுப்பார். 📖 பிலிப்பியர் 4:19

[இந்த அற்புதமான வாக்குத்தத்தத்தைக் குறித்து உரையாடவும். தேவன் எவ்வளவு பெரிய செல்வந்தர்? அவருடைய மகனைக் குறித்து அவர் எவ்வளவு கவலைப்படுகிறார்? பணத்தை விட அதிக நன்மையானவைகளைக் கொடுக்க அவரால் முடியும்! "கிறிஸ்துவுக்குள்" அவர்களுக்கு தேவன் வைத்திருக்கும் ஐசுவரியங்கள் என்ன? விசுவாசிகளுக்கான இயேசுவின் மரணத்தின் மூலம் அவர் தரும் வாக்குறுதி என்ன? (ரோமர் 8:32)]

> ≫ நீங்கள் உங்கள் பணத்தைக் கொடுக்க ஏன் உங்களுக்குக் கடினமாயிருக்கிறது? நீங்கள் இயேசுவின் மேல் அன்பு செலுத்தும்போது நீங்கள் கொடுப்பது பாதுகாப்பானதுயூ அவர் உங்களைப் பார்த்துக் கொள்வார். அவர் பணத்தைவிட மேலானவைகளை உங்களுக்குத் தருவார்!

## ஆராதனையாகக் கொடுத்தல்

📖 பிலிப்பியர் 4:18,20

- எந்த விதமான ஆராதனை தேவனை மகிழப்பண்ணுகிறது?

எப்பாப்பிரோதீத்துவின் நீண்ட பயணம் துதியினால் நிறைந்த ஓர் நீண்ட ஆராதனைக்கூட்டத்தைப் போன்றது! பாடல்களை விட அதிகமாக இந்தப் பரிசுகள் தேவனைத் துதித்தன! அது தேவனுக்கு சுகந்த வாசனையாயிருந்தது. அவர்களுடைய அன்பு, மேலே தேவனிடத்திற்குச் சென்றது. அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

> ≫ பிலிப்பிய கிறிஸ்தவர்களைப் போலிருங்கள். உங்களுக்கு அதிகமாகக் கொடுக்க முடியாமலிருக்கலாம். நீங்கள் எப்படி கொடுக்கிறீர்கள் என்பதே முக்கியமாகும். உங்கள் இருதயங்களைக் கொடுங்கள். உங்கள் ஜெபங்களைக் கொடுங்கள். சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# உ. பிலிப்பியர் நிருபத்திலிருந்து பாடங்கள்

தேவனுடைய வார்த்தையிலிருந்து நமது வாழ்க்கைக்குப் பாடங்களைப் பெற்றுக்கொள்வது மிக முக்கியமாகும். இது உங்கள் மக்கள் குழுக்களாக இவ்வினாக்களைக் கலந்தாலோசிக்கவும் ஜெபிக்கவும் அவர்களுக்கு உதவியாயிருக்கும். இந்த நிருபத்தின் சில முக்கிய பாடங்களை நாம் கற்பதற்கு இவ்வினாக்கள் நமக்கு உதவி செய்கின்றன. பிலிப்பிய நிருபத்தில் உங்கள் சகல உரையாடல்களையும் முடித்தபின் நீங்கள் இவ்வினாக்களைப் பயன்படுத்தலாம். அல்லது ஒவ்வொரு அதிகாரத்தின் பின்னும் நீங்கள் இவைகளை உபயோகிக்கலாம்.

## பிலிப்பியர் 1ம் அதிகாரம்

1. மற்ற விசுவாசிகளின் மேல் அன்பு செலுத்துவது
பிலிப்பியர் 1:3-5, 8, 24
- சுவிசேஷத்தின் மேலுள்ள அதே அன்பு பவுலையும், பிலிப்பிய சபையையும் ஒன்றாக இணைக்கிறது. நீங்களும் அப்படியா? இந்த அன்பு உங்கள் சபையிலும், உங்கள் சொந்த வாழ்க்கையிலும் எவ்வாறு வெளிப்படுகிறது?
- மற்ற கிறிஸ்தவர்கள் மேல் நீங்கள் காட்டும் அன்புக்கு நீங்கள் கொடுக்கும் விலை என்ன?

2. இயேசுவுக்காக ஒன்றாக உழைப்பது
பிலிப்பியர் 1:5, 18, 27
- தாம் தனியாக செயற்படாமல் ஒன்றாக இணைந்து செயல்படுவது எப்படி அதிக நன்மையாயிருக்கிறது?
- ஒன்றாகச் செயற்படுவதைக் கடினமாக்குவது எது?

3. கிறிஸ்துவுக்காக வாழ்வதும் மரிப்பதும்
பிலிப்பியர் 1:20-25
- நீங்கள் கிறிஸ்துவுடன் இருக்க விரும்புகிறீர்களா? மரணத்திற்கு நீங்கள் அஞ்சுகிறீர்களா?
- கிறிஸ்துவுக்காக இப்போது நீங்கள் வாழ விரும்புகிறீர்களா? இதற்காக எவைகளைத் தெரிவு செய்ய வேண்டியிருக்கும்.

4. சுவிசேஷ செய்திக்கு பொருந்தும் வாழ்க்கை
பிலிப்பியர் 1:27
- சுவிசேஷத்திற்கு பொருந்தாத நடத்தை என்ன?
- மக்கள் இயேசுவைக் குறித்து அறிந்துகொள்ள அவர்களுக்கு விருப்பத்தை ஏற்படுத்தும் நடத்தை என்ன?

## பிலிப்பியர் 2ம் அதிகாரம்

1. இயேசுவைப் போல
பிலிப்பியர் 2:1-8
- ஒரு ஊழியக்காரனாயிருப்பதை கடினமாக்குவது என்ன என்பதைக் குறித்து உரையாடவும்.
- மேலும் இயேசுவைப் போலாக நமக்கு உதவும் மாற்றங்கள் யாவை?

2. நட்சத்திரங்களைப் போல
பிலிப்பியர் 2:14-16
- நாம் வாழும் உலகத்தைக் குறித்து கடினமாக உணருகிறீர்களா? என்ன பாவங்கள் அதை ஒரு "இருண்ட" இடமாக ஆக்குகிறது?
- மற்றவர்கள் இருளில் ஜீவிக்கும் போது நாம் எப்படி "நட்சத்திரங்களாகப்" பிரகாசிக்க முடியும்?

3. தீமோத்தேயுவைப் போல
பிலிப்பியர் 2:20~22

- தீமோத்தேயுவைக் குறித்து நீங்கள் விரும்பும் காரியம் என்ன? அவரைப்போல அதிகமாக நாம் எப்படி மாற முடியும்?
- பவுல் ஏன் தீமோத்தேயுவை அதிகமாக நம்பினார்? மக்கள் அதைப்போல உங்களை நம்புகிறார்களா?

4. எப்பாப்பிரோதீத்துவைப்போல
பிலிப்பியர் 2:25~30

- எப்பாப்பிரோதீத்துவைக் குறித்து நீங்கள் விரும்பும் காரியம் என்ன? அவரிடமிருந்து நீங்கள் எதைக் கற்றுக் கொள்ளலாம்?
- எப்பாப்பிரோத்தீத்து சுவிசேஷத்திற்கு முதலிடம் கொடுக்கவும், அதற்காக தன் ஜீவனையும் பணயம் வைக்கவும் தயாராக இருந்தார். அதைப்போல எவரையாவது உங்களுக்குத் தெரியுமா? அவர்களை நீங்கள் கனப்படுத்துகிறீர்களா? எந்த விதங்களில் நீங்கள் அவர்களைப் போலிருக்க முடியும்?

## பிலிப்பியர் 3ம் அதிகாரம்

1. தவறான வகைப்போதகர்கள்
பிலிப்பியர் 3:2~3, 18~19

- எந்த வகைப்போதனைகளும், வாழ்க்கையும், கள்ளப் போதகர்களை வெளிப்படுத்தும்?
- இதைப் போன்றவர்கள் உங்கள் நகரத்தில் பிரசங்கித்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?

2. நற்கிரியைகள் உங்களை இரட்சிப்பதில்லை
பிலிப்பியர் 3:3~9

- உங்கள் நற்கிரியைகளினால் தேவன் உங்கள் மேல் பிரியமாயிருக்கிறாரென்று நீங்கள் முன்பு நினைத்தீர்கள்? பவுலின் நற்கிரியைகளின் பெறுமதி என்ன?
- நீங்கள் இயேசுவின் மேல் எவ்வளவு நம்பிக்கை உள்ளவராயிருக்கின்றீர்கள்? உங்களை தேவனுடன் சரிப்படுத்த தேவையான யாவற்றையும் இயேசு செய்து முடித்து விட்டாரென்பதை நீங்கள் உறுதியாய் நம்புகிறீர்களா?

3. கிறிஸ்துவை மென்மேலும் அறிவது
பிலிப்பியர் 3:10

- இயேசு கிறிஸ்துவைப் பற்றி நாம் அதிகமாக அறிந்து கொள்வதற்குத் தடையை ஏற்படுத்தக்கூடிய காரியங்கள் என்ன? பவுல் எந்த விதமான பெரும் வல்லமைக்காக ஜெபிக்கிறார்? இந்த வல்லமை எப்படி கிறிஸ்துவை இன்னும் நன்றாக அறிந்து கொள்ள உங்களுக்கு உதவியாக இருக்கும்?
- நீங்கள் இயேசுவுக்காகப் பாடனுபவிக்கும் போது அது எப்படி அவரை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள உங்களுக்கு உதவி செய்கிறது?

4. பரலோகத்திற்குச் சொந்தமான மக்கள்
பிலிப்பியர் 3:14, 20~21

- நீங்கள் உங்கள் வாழ்க்கையை பரலோகத்தை நோக்கி ஓடும் ஒரு ஓட்டமாக எண்ணுகிறீர்களா? இது எப்படி உங்களுக்கு உதவியாயிருக்கும்?
- இயேசு மீண்டும் சீக்கிரம் வரவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? ஏன் அல்லது வேண்டாமா?

## பிலிப்பியர் 4ம் அதிகாரம்

1. கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்!
   பிலிப்பியர் 4:4

- சிறையிலிருக்கும் பவுல் இந்த நிருபத்தில் அதிக மகிழ்ச்சியைக் வெளிக்காட்டுகிறார். உங்கள் சந்தோஷத்திற்குத் தடையாயிருப்பது எது?
- இயேசுவைக் குறித்த எந்த விடயங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன? இயேசுவுக்குள் சந்தோஷமாய் இருப்பதற்கு நாம் எப்படி ஒருவருக்கொருவர் உதவி செய்ய முடியும்?

2. கவலையைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்?
   பிலிப்பியர் 4:6~7

- நீங்கள் எதைப்பற்றிக் கவலைப்படுகிறீர்கள்? கவலைப்படுவது என்ன உணர்வை ஏற்படுத்துகிறது?
- தேவன் இங்கே சொல்லுவதை செய்வது உங்களுக்குக் கடினமாகத் தோன்றுகின்றதா? நீங்கள் இதைப்போல ஜெபிப்பதை தடை செய்வது என்ன?

3. திருப்தியாக இருக்கக் கற்றுக்கொள்வது
   பிலிப்பியர் 4:11~13

- தேவன் எங்களுக்குக் கொடுத்திருப்பதைக் குறித்து சில வேளைகளில் நமக்கு சந்தோஷம் இல்லாமல் இருக்கக்கூடும். அது ஏன்?
- நாம் எப்படி திருப்தியாக இருக்கக் கற்றுக்கொள்ள முடியும்? (பவுல் ஏன் திருப்தியாக இருந்தார் என்பதை சிந்திக்கவும்)

4. தேவனுக்குக் கொடுப்பது
   பிலிப்பியர் 4:10, 14~19

- உங்கள் பணத்தையும், நேரத்தையும் தேவனுக்குக் கொடுக்க உங்களுக்குக் கடினமாகத் தோன்றுகின்றதா? அதைக் கடினமாக்குவது என்ன?
- நாம் நமது இருதயத்திலிருந்து கொடுக்கும்போது தேவன் என்ன நினைக்கிறார்?

# ஊ. பயிற்சி வழிகாட்டி: பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கிப்பது எப்படி?

இந்தப் பயிற்சி வழிகாட்டி எப்படி பிரசங்கங்களைத் தயார் செய்வது என்பதைப் கற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு உதவுகிறது. (பின்பு நீங்கள் இதை உபயோகித்து வேதாகமத்தின் மற்ற பகுதிகளிலிருந்தும் பிரசங்கங்களை தயார் செய்யலாம்).

இந்தப் புத்தகத்தை உபயோகிப்பதற்கு முன், நீங்கள் ஒரு பிரசங்கத்தைத் தயார் செய்வதற்கு உங்களுக்குப் பயிற்சியளிக்கும் ஐந்து பாடங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் சுயமாகவே இந்தப் பாடங்களைப் படிக்கலாம். அல்லது, உங்களால் முடிந்தால், ஒரு பிரசங்கிகள் குழுவை சந்தியுங்கள். அப்போது, உங்களில் ஒருவருக்கொருவர் இதைக் கற்றுக்கொள்வதற்கு உதவி செய்ய முடியும். பிரசங்கிப்பதற்கு நீங்கள் உதவி செய்யக்கூடிய மற்ற மனிதர்களைக் குறித்து சிந்திக்கும்படி நாங்கள் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறோம். இந்தப் பயிற்சி வழிகாட்டி மற்றவர்களுக்கு உதவி செய்ய உங்களுக்கு உதவும். நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் கற்பதற்கு ஒன்று கூடினால், ஒருவருக்கொருவர் உதவ முடியும். அப்போது தேவனுடைய வார்த்தையை நீங்கள் தெளிவாகப் பிரசங்கிப்பீர்கள்.

வாரத்திற்கொரு முறையாக ஐந்து வாரங்கள் தொடர்ந்து ஒன்று கூடுங்கள். நீங்கள் ஒன்று கூடும் ஒவ்வொரு முறையும் ஒரு பாடத்தைப்படிக்கவும். இந்த விடயங்களைத் தொடர்ந்து நீங்கள் கற்பீர்கள்:

- **நிருபத்தின் செய்தி.**
- **பின்னணியை எப்படிப் பார்ப்பது.**
- **வேதப்பகுதி கூறுவதென்ன.**
- **முக்கிய விடயத்தை எப்படிக் கண்டுபிடிப்பது.**
- **வேதப்பகுதி எப்படி நம்முடன் பேசுகிறது.**

இதன் அர்த்தம் நீங்கள் இப்போது வேதப்பகுதியை நன்றாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதாகும். இப்போது உங்களால் செய்தியை தயார் செய்து அதை தெளிவாகப் பிரசங்கிக்க முடியும்.

ஜெபிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எப்போதும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்! தேவனுடைய வார்த்தையை நீங்கள் கற்கும்போது தேவனுடைய உதவிக்காக ஜெபியுங்கள். நாம் எப்படி பிரசங்கிப்பது என்று சிந்திக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் உதவி நமக்கு எவ்வளவு அவசியமாயிருக்கிறது!

நீங்கள் ஒரு குழுவாய் ஒன்று கூடுவீர்களானால், **உங்களுடைய முதல் சந்திப்பிற்கு முன்பதாகவே** நீங்கள் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு. நீங்கள் யாவரும் பிலிப்பியர் நிருபத்தை வாசித்து சில ஆய்வு வினாக்களை தயார் செய்ய வேண்டும். (அடுத்த பக்கங்களைப் பார்க்கவும்)

# ஆய்வு 1. முழு நிருபம்

ஒரு கடிதத்தை எழுதும்போது, நாம் வித்தியாசமான எண்ணங்களை அதில் எழுதுவதில்லை. நமக்கு அதை எழுதுவதற்கு எப்போதும் ஒரு காரணம் இருக்கும். நாம் கூற நினைப்பதை எப்படி விளக்குவது என்று நாம் கவனமாக சிந்திப்போம்.

பிலிப்பியர் நிருபத்தை நாம், பவுல், பிலிப்பியில் தான் அறிந்திருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியதொரு உண்மையான கடிதமாகவே எண்ண வேண்டும். அவர் சில நல்ல எண்ணங்களை மட்டும் எழுதவில்லை! அவர் அவர்களுக்கு கூற வேண்டியதை பவுல் அறிந்திருந்தார். எனவே அவர் மிகவும் கவனமாக எழுதுகிறார். அவர் அந்த கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய விரும்பினார். பவுல் பிலிப்பியருக்கு எழுதின இந்நிருபம் இன்று தேவன் நமக்கு எழுதும் நிருபமாகவும் இருக்கிறது. எனவே பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தின் மூலம் தேவன் அவர்களுடனும், நம்முடனும் உரையாடுகிறார்.

## உங்கள் குழு ஆய்வுக்கு முன்

பவுலின் நிருபத்தை ஒரு சிலமுறை வாசித்து இந்தக் கேள்விகளைக் குறித்து சிந்திக்கவும். (உங்கள் உதவிக்கு "பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்" நூலினை உபயோகிக்க வேண்டாம்!).

1. பவுல் எங்கிருக்கிறார்? அவரை சந்திக்க வந்தது யார்? அவர் ஏன் வந்தார்?

2. பிலிப்பிய கிறிஸ்தவர்களைக் குறித்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும்? (அப்போஸ்தலர் 16ஐயும் பார்க்கவும்)

3. பவுல் ஏன் நிருபத்தை எழுதுகிறார்?

4. பவுல் கூற நினைக்கும் முக்கிய விடயங்கள் என்ன? ஏன் அவர் அவைகளை அவர்களுக்குக் கூற விரும்புகிறார்?

5. பவுல் ஏதாவது வார்த்தைகளை அல்லது எண்ணங்களை மீண்டும் கூறுகின்றாரா?

## உங்கள் குழு ஆய்வில்

ஐந்து ஆய்வுக் வினாக்களுக்கான பதில்களைக் குறித்து கலந்துரையாடவும்.

வித்தியாசமான பதில்கள் கிடைத்திருக்கின்றதா?

பவுலின் நிருபத்தைப் அதிகமாகப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவி செய்பவைகள் என்ன?

வினாக்கள் 3 மற்றும் 4க்கு பல பதில்கள் இருக்கக்கூடும். பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கின்றன. அவர் அவர்களுக்குச் கூற வேண்டிய பல முக்கிய காரியங்கள் இருக்கின்றன.

- அது முழு நிருபத்திலிருந்து ஒரு தலைப்பு, அல்லது அதன் "முக்கிய கருத்தில்" என்ன கூறப்படுகிறது என்பதைக் கண்டுபிடிப்பதில் கடினத்தை ஏற்படுத்துகிறது. தலைப்புக்கான ஒரு கருத்து "சுவிசேஷ சிந்தனை" என்பதாகும். இந்தத் தலைப்பு பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கான நோக்கத்தைப் புரிந்து கொள்ள நமக்கு உதவுகிறது. பவுல் இந்தக் கிறிஸ்தவர்கள் சரியாக **சிந்திப்பதற்காக** அவர்களுக்குப் பயிற்சியளிக்க விரும்புகிறார். **சுவிசேஷம்** (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியம்) அவர்களை மாற்ற வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

(உதாரணம்: பிலிப்பியர் 1ம் அதிகாரத்தில் அவர்கள் சிறையிலிருக்கும் பவுலைக் குறித்துச் சரியாகச் சிந்திக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர்கள் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஏனென்றால் சுவிசேஷம் இன்னும் பரவிக்கொண்டிருக்கிறது)

## இதைப் பற்றி உரையாடவும்

இப்போது இந்நூலில் "பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தைப் பற்றி" என்னும் பகுதியை எல்லோரும் ஒன்றாக வாசிக்கவும் (பக்கம் 7).

- இது நீங்கள் கண்டுபிடித்த விடயத்துடன் ஒத்துப்போகின்றதா?

- அதில் ஏதாவது புதிதாக உள்ளதா? அது எங்கிருந்து வருகிறதென்று இப்போது உங்களால் காண முடிகின்றதா?

**நீங்கள் பிலிப்பியர் நிருபத்தை கற்றுக்கொள்ளும்போது, முழு நிருபத்தையும் குறித்த இந்த விளக்கமானது, அதன் சிறு பகுதிகளைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவியாயிருக்கும். நீங்கள் சிறுபகுதிகளை அவைகளின் சூழலில் பார்க்க முடியும். (முழு நிருபத்திலும் அவைகள் பெறும் சரியான இடத்திலாகும்).**

**நீங்கள் கற்றதை மனதில் வைத்துக் கொள்ள முயலுங்கள்.**

# ஆய்வு 2. பின்னணி

விமானத்தின் முதல் படத்தைப் பாருங்கள். அது என்ன என்று உங்களுக்குப் புரிகிறது அல்லவா. இப்போது பின்னணியினுடனான இரண்டாவது படத்தைப் பாருங்கள். இப்போது முன்னைவிட அதிகமாக புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா.







- அது நாட்டிலா அல்லது நகரத்திலா இருக்கிறது என்பதை உங்களால் காண முடிகிறது - விமானத்தைக் குறித்து அது உங்களுக்குச் கூறுவதென்ன?
- விமானத்தைச் சுற்றிலும் மக்களை நீங்கள் காணக்கூடும் - ஒருவேளை அவர்கள் நீங்கள் அறிந்த மக்களாயிருக்கக்கூடும்.
- விமானத்திலிருந்து மக்கள் வெளியே வருவதை நீங்கள் பார்த்தால் அது அவர்கள் பயணம் செய்த நோக்கத்தை உங்களுக்குச் கூறக்கூடும். அது ஒருவர் இல்லத்திற்கு வருவதாயிருக்கலாம் - அல்லது ஒரு நோயாளி வைத்தியசாலைக்கு வருவதாயிருக்கலாம்.

பின்னணி ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.

எனவே நாம் தேவனுடைய வார்த்தையைப் கற்கும்போது நாம் அதன் பின்னணியைக் காண முயற்சிக்கின்றோம். நீங்கள் முழு நிருபத்திலும் வாசித்தவற்றை உங்களுக்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். பவுல் ஏன் இதை எழுதுகிறார் என்பதைக் குறித்து என்ன கற்றீர்கள்? இதுதான் பின்னணி.

பிலிப்பிய மக்களையும், அது அவர்களுக்கு எப்படியிருந்தது என்பதையும் புரிந்து கொள்ள முயற்சிக்கவும். அவர்கள் எப்படி உணர்ந்தார்கள்? நீங்கள் அங்கே இருப்பதாகக் கற்பனை செய்யுங்கள். இது இந்தப் பகுதியிலுள்ள வார்த்தைகளைப் புரிந்து கொள்ள நமக்கு உதவுகிறது.

## உதாரணம் 1: பிலிப்பியர் 1:1-5

**1. பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது இருந்த நிலையைக் குறித்து சிந்திக்கவும்.**

- அவர் எங்கே இருக்கிறார்? ஏன்? (பிலிப்பியர் 1:13)
- தீமோத்தேயு அவருடனிருந்தாரென்பதைக் கவனிக்கவும். தீமோத்தேயுவும் பிலிப்பிய விசுவாசிகளைக் குறித்து அக்கறை உள்ளவராயிருந்தார்.
- பிலிப்பிய கிறிஸ்தவர்களைக் குறித்து பவுல் சிந்திக்கும்போது அவர் உணர்வதென்ன? ஏன்?
- பவுல் இந்த விசுவாசிகளைச் சந்திக்க ஆசைப்படுகிறார். (**பிலிப்பியர் 2:19~24**). ஆனால் அவரால் இப்போது சந்திக்க இயலாது எனவே அவர், அவர்களுக்கு எழுதுகிறார். அவருடைய நிருபம் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதை தெளிவுபடுத்துகிறார். (அவர்களை, அவருக்காகத் துக்கப்பட வைத்தது பற்றியும், அவர்களை ஊக்குவித்தது பற்றியும் அவர்களுக்குக் கூறுங்கள்...?)
- பவுல் அவரையும், தீமோத்தேயுவையும் எப்படி அழைக்கிறார் (பிலிப்பியர் 1:1)? இது எதைக் காட்டுகிறது?

**2. பிலிப்பியர் இந்நிருபத்தைப் பெற்றுக்கொள்கையில் இருந்த நிலையைக் குறித்து சிந்திக்கவும்.**

- இந்த விசுவாசிகளில் சிலர் யாரென்று அப்போஸ்தலர் 16 நமக்குக் கூறுகின்றது.
- அவர்கள் ஒரு அன்புப் பரிசை சிறையிலிருக்கும் பவுலுக்கு அனுப்பினார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.
- பிலிப்பியர் 1:1-5ஐ வாசிக்கும்போது அவர்கள் என்ன உணர்ந்திருப்பார்களென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- இந்தப் பகுதி அவர்களுக்கு பவுலின் மேல் அதிக அன்பை ஏற்படுத்துகின்றதா? ஏன்?
- "சுவிசேஷத்தில் பங்காளிகளாயிருத்தல்" என்பதென்ன? பிலிப்பியர் 1ம் அதிகாரத்தை வாசித்து பவுல் ஏன் அப்படிக் கூறுகிறார் என்பதைக் கண்டுபிடிக்கவும். பவுலும்,பிலிப்பியர்களும் சுவிசேஷத்தைக் குறித்து எப்படி ஒன்றாகச் சிந்திக்கிறார்கள்?

## உதாரணம் 2: பிலிப்பியர் 1:6-8

இதற்கான பின்னணி அதிகமாக பிலிப்பியர் 1:1-5க்கான பின்னணிக்கு சமமாகவே இருக்கிறது.

- பிலிப்பியிலுள்ள இந்தக் கிறிஸ்தவர்களைக் குறித்து பவுல் சிந்திக்கும்போது அவர் உணரும் இரண்டு காரியங்கள் என்ன?
- விசுவாசிகளைக் குறித்து பவுல் ஏன் இவ்விதமாகச் சிந்திக்கிறார்? அவர்களைக் குறித்து அவருக்கு என்ன தெரியும்? இது ஏன் அவரை அன்பினாலும், நம்பிக்கையினாலும் நிரப்புகிறது?
- பவுல் கிறிஸ்தவர்களைக் குறித்து நம்பிக்கை உள்ளவராயிருப்பதாக பவுல் ஏன் கூறுகிறாரென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர்களுக்கு ஊக்குவித்தல் தேவைப்பட்டதா? **பிலிப்பியர் 1:27~30** அவர்களுடைய நிலைமை கடினமாக இருந்ததாகக் கூறுகிறது! கிறிஸ்தவர்களாக அவர்கள் தொடர்ந்து முன்னேற வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

# ஆய்வு 3. அது என்ன கூறுகிறது?

விமானத்தின் படத்தைப் பார்க்கவும். விமானத்தையும், மக்களையும் கவனமாகப் பார்க்கவும். இதிலிருந்து அறிவது என்ன? விமானப் பயணத்தின் நோக்கம் என்ன?



இதைப்போலவே நாம் வேதாகமம் சொல்வதையும் **கவனமாகப் பார்க்க வேண்டும்**. அதில் கூறப்பட்டிருப்பது நமக்கு ஏற்கனவே தெரியுமென்று நாம் நினைக்கக்கூடாது! வினவ வேண்டிய சில வினாக்கள் இதோ:

1. பவுல் **உண்மையில்** கூறுவது **என்ன**?
2. **ஏன்** அதைச் கூறுகிறார்?
3. அதில் வழக்கத்திற்கு மாறான எதுவும் இருக்கின்றதா?
4. உங்களால் புரிந்து கொள்ள முடியாத எதுவும் அதில் உண்டா?
5. அவர் ஏதாவது வார்த்தைகளையோ அல்லது கருத்துக்களையோ மீண்டும் கூறுகின்றாரா?

## உதாரணம் 1: பிலிப்பியர் 1:1-5

பவுல் கூறுவதை கவனமாகப் பார்க்கவும்.

- இந்த ஐந்து கேள்விகளைக் வினவவும்.

1. பவுல் உண்மையில் கூறுவது என்ன?
2. ஏன் அதைச் கூறுகிறார்?
3. அதில் வழக்கத்திற்கு மாறான எதுவும் இருக்கின்றதா?
4. உங்களால் புரிந்து கொள்ள முடியாத எதுவும் அதில் உண்டா?
5. அவர் ஏதாவது வார்த்தைகளையோ, அல்லது கருத்துக்களையோ மீண்டும் கூறுகின்றாரா?

உங்கள் உதவிக்கு **கற்றுக்கொள்ளுதல்** பகுதியை உபயோகிக்கவும்.

**நீங்கள் கவனித்திருக்கக்கூடிய சில காரியங்கள்:**

- பவுல் தனது நிருபங்களில் அடிக்கடி “பரிசுத்தவான்களுக்கு” என்று எழுதுவார். இங்கே அவர் “கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்” (தலைவர்கள்) என்று எழுதுகிறார்.
- பிலிப்பியர் 1:3,4 விசேட மகிழ்ச்சியைக் காட்டுகிறது. பவுலுக்கு இந்த விசுவாசிகளுடனிருந்த நட்பைக் குறித்து இதனூடாக நமக்குக் கூறுவது என்ன?
- “சுவிசேஷத்தில் பங்காளிகளாயிருத்தல்” (பிலிப்பியர் 1:3) என்பது வழக்கத்திற்கு மாறானது. பவுல் இப்படியாக மற்ற சபைகளுக்கு எழுதவில்லை. இந்த சபையை குறித்து இது நமக்குத் தெரிவிப்பதென்ன?

## உதாரணம் 2: பிலிப்பியர் 1:6-8

இந்த ஐந்து வினாக்களையும் வினவி, **கற்றுக்கொள்ளுதல்** பக்கத்தை உங்கள் உதவிக்காக உபயோகிக்கவும் (பக்கம் 12).

1. பவுல் உண்மையில் கூறுவது என்ன?
2. ஏன் அதைச் கூறுகிறார்?
3. அதில் வழக்கத்திற்கு மாறான எதுவும் இருக்கின்றதா?
4. உங்களால் புரிந்து கொள்ள முடியாத எதுவும் அதில் உண்டா?
5. அவர் ஏதாவது வார்த்தைகளையோ, அல்லது கருத்துக்களையோ மீண்டும் கூறுகின்றாரா?

நீங்கள் கவனித்திருக்கக்கூடிய சில காரியங்கள்

- இந்தக் கிறிஸ்தவர்களைக் குறித்து அவர் நம்பிக்கை உள்ளவராயிருப்பதாக பவுல் கூறுகின்றார். பின் சில காரணங்களைக் கூறுகின்றார். அவர்கள் தேவனைக் குறித்து நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புவதை இது காட்டுகின்றது.
- இந்த விசுவாசிகளின் மேல் பவுல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாரென்பதை அவர் மீண்டும் கூறுகின்றார். (பிலிப்பியர் 1:7,8) (பிலிப்பியர் 1:3-4 ஐயும் பார்க்கவும்). இதை ஏன் அவர் அதிகமாகக் கூறுகிறார்?

# ஆய்வு 4. முக்கிய விடயம்



இந்த விமானப் படத்தை விளக்க வேண்டுமானால் உங்களால் பல விடயங்களைக் கூறமுடியும். இதைப் போன்றதொரு நீண்ட பட்டியலை நீங்கள் தயாரிக்கலாம்.

- இது ஒரு இயந்திரத்துடனான சிறுவிமானம்.
- அதன் நிறம் வெள்ளை.
- அதில் 6 பேர் இருந்தார்கள்.

சிலவேளைகளில் நமது உரையாடல்களும் இப்படித்தான் இருக்கிறது. நாம் அநேக உண்மையான காரியங்களைச் கூறுகிறோம். ஆனால் **முக்கியமானதை விட்டுவிடுகிறோம்.**

தாதியர்கள் எப்படி ஒரு நபரை விமானத்திலிருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு போகிறார்கள் என்பதைப் பார்க்கவும். **இந்தப் படத்தின் முக்கிய விடயம் அதுதான்!** விமானம் சிறிதா, வெள்ளையா என்பது முக்கியமல்ல.

எப்போதும் இந்த வினாவைக் கேளுங்கள்: **"முக்கிய விடயம் என்ன (முக்கிய கருத்து)?"**

அல்லது பவுலினால் ஒன்றை மாத்திரமே இந்தப் பகுதியில் கூறக்கூடுமானால் அவர் கூறுவது எதுவாயிருக்கும்?

நாம் நமது பிரசங்கத்தில் பல காரியங்களைக் கூறுவோம். நாம் சிலவேளைகளில் விவரங்களைக் குறித்துப் பேச விரும்புவோம். **ஆனால், எல்லோரும் முக்கிய விடயத்தை மனதில் வைத்துக் கொண்டே அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும்.** இதை நாம் தவற விட்டுவிடக் கூடாது.

## உதாரணம் 1: பிலிப்பியர் 1:1-5

பவுல் இந்தக் கிறிஸ்தவர்களுக்காக நன்றி செலுத்திச் செய்யும் ஜெபத்தைக் குறித்து நீங்கள் உரையாடலாம். (ஆனால் அது முக்கிய விடயமல்ல). பவுல் **ஏன்** நன்றியும், சந்தோஷமுமுள்ளவராய் இருக்கிறார்? அவர் பிலிப்பியரைக் குறித்துச் சிந்திக்கும்போது, அவர் **"சுவிசேஷத்தில் அவர்கள் பங்காளிகளாயிருப்பதை"** நினைக்கிறார். அவரைப் போலவே அந்தச் சபையையும் சிந்திப்பதைக் குறித்து அவர் தேவனைப் புகழ்கிறார். எல்லோரும் இயேசுவைப் பற்றி அறிய வேண்டும் என்று பவுலைப் போலவே அவர்களும் விரும்பினார்கள். அத்துடன் அவர்களால் முடிந்தளவு சுவிசேஷத்திற்காக உதவி செய்தார்கள்.

எனவே முக்கிய விடயம் இதுதான்:

**பவுலும் பிலிப்பிய கிறிஸ்தவர்களும் பங்காளிகள். சுவிசேஷப் பணியில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள்.**

இப்போது பிலிப்பியர் 1:1-5க்குரிய பிரசங்கித்தல் **பகுதியைப்** பார்க்கவும் (பக்கம் 13-14).

- அதன் தலைப்புகளைப் பார்க்கவும். அவை உங்களுக்கு முக்கிய விடயத்தைக் காண உதவுகின்றதா? அவை அந்தப்பகுதியின் எஞ்சியுள்ள விடயங்களை விளக்கும் அதேவேளை, முக்கிய விடயத்தையும் தவற விட்டுவிடாமல் இருக்கின்றதா?

## உதாரணம் 2: பிலிப்பியர் 1:6-8

இந்தப் பகுதியின் முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவும்.

பின் பிலிப்பியர் 1:6-8க்கான **கற்றுக்கொள்ளுதல்** பகுதியில் உள்ள **முக்கிய விடயத்தை** பார்க்கவும் (பக்கம் 12).

- நாம் எழுதியிருப்பவைகளை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? பவுல் என்ன கூற நினைக்கிறார் என்பதை அது கூறுகின்றதா? அதை உங்களால் இன்னும் மேம்படுத்த முடியுமா?
- பிரசங்கித்தல் பகுதியிலுள்ள தலைப்புகள் முக்கிய விடயத்தைக் காண உங்களுக்கு உதவியிருக்கின்றதா?

# ஆய்வு 5. அது எவ்வாறு நம்முடன் உரையாடுகிறது

மற்றவர்களுடைய படங்களை நாம் பார்க்க விரும்புவோம். ஆனால் நாம் அறிந்த மக்களுடைய படங்களாயிருந்தால், அவை எங்களுக்கு இன்னும் அதிக ஆர்வத்தைக் கொடுக்கும். அந்த விமானத்தில் இருப்பது உங்கள் பிள்ளையென்றும், அப்பிள்ளை பாம்பு கடித்ததினால் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் கற்பனை செய்து பாருங்கள்! இப்போது அந்தப்படம் உண்மையிலேயே உங்களுடன் உரையாடும்!

நீங்கள் பிலிப்பியர் நிருபத்தை வாசிக்கும்போது, இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்:

- பவுல் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் அதை பிலிப்பியிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதினார்.
- தேவன் அதை இன்று எங்களுக்கு எழுதுகிறார்.

பவுல் அன்று அந்தக் கிறிஸ்தவர்களுக்குச் கூறுவதை நாம் புரிந்து கொள்ளும்போது, **தேவன்** அவருடைய வார்த்தைகள் மூலம் **இன்று எங்களுடன்** உரையாடுகிறார். ஏனென்றால் வேதாகமம் தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையாயிருக்கிறது. தேவனுடைய ஆவியானவர் அந்த வார்த்தைகளுக்கு ஜீவனைக் கொண்டு வருகிறார்.

**நாம் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும்போது, நாம் வேதாகமத்தைப் பற்றி மட்டும் போதிக்காமல், தேவனுடைய வார்த்தை நம்மெல்லாருடனும் பேச வேண்டுமென்றும், தேவனுடைய வார்த்தை நம்மை மாற்றும்படியும் நாம் ஜெபிக்கிறோம்.**

**சில ஆய்வு வினாக்கள்**

- **முக்கிய விடயம்** இன்று எப்படி நம்முடன் பேசுகின்றது? அது பிலிப்பிய கிறிஸ்தவர்களுக்கு இருந்தது போலவே நமக்கும் இருக்கிறதா? அது எப்படி **வித்தியாசமாயிருக்கிறது**?
- நீங்கள் பேசப்போகும் **வித்தியாசமான மக்களைக்** குறித்து சிந்திக்கவும். முக்கிய விடயம் எப்படி பிள்ளைகளுடனும், இன்னும் விசுவாசிகளாகாதவர்களுடனும், பெலவீனமான கிறிஸ்தவர்களுடனும்... உரையாடுகிறது?
- உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்களுக்கு இருக்கக்கூடிய **வினாக்கள்** என்ன? (இல்லத்தில் எனது பிள்ளைகளுடன் இது எப்படி ஒத்துப்போகும்? நிஜ வாழ்க்கையுடன் இது ஒத்துப்போகாததுபோல் காணப்படுவதால், நீர் சொல்வது எப்படி உண்மையாயிருக்க முடியும்? போன்றவை)
- வேதாகமப்பகுதியில் உங்கள் உரையாடலைக் கேட்பவர்களுக்கு வேறு என்ன முக்கியமான விடயங்கள் இருக்கின்றன? அது அவர்களுடைய பலவீனமான பகுதிகளுக்கு உதவியாயிருக்கின்றதா? மக்களுக்குக் கடினமாகத் தோன்றும் காரியங்களில் அது அவர்களுக்கு உதவி செய்கின்றதா? கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறித்து அது அவர்களை எச்சரிக்கின்றதா?

## உதாரணம்: பிலிப்பியர் 1:1–15 மற்றும் பிலிப்பியர் 1:6–8

இரண்டு பிரசங்கங்களுக்கும் -

ஆய்வு வினாக்களை உபயோகித்து தேவனுடைய வார்த்தையை எப்படி மக்களுக்குப் புரிய வைப்பது என்பதைக் குறித்து சிந்திக்கவும்.

இப்போது பிரசங்கித்தல் பகுதியில் இதைப்போலக் காணப்படும் பகுதிகளைக் குறித்து சிந்திக்கவும்.

- உங்கள் உரையாடலைக் கேட்பவர்கள் முக்கிய விடயத்தைப் புரிந்து கொள்ள அவை எப்படி உதவுகின்றன? மேலும் அதைத் தெளிவாக்குவதற்கு இன்னும் அதிகமாக நீங்கள் கூற வேண்டியது என்ன?
- நாம் கூறக்கூடிய மற்ற விடயங்கள் என்ன? அவை உதவியாயிருக்கின்றனவா?

வேதப்பகுதியில் கற்ற யாவற்றையும் நினைவுபடுத்திக் கொள்ளவும். முக்கிய விடயத்தையும் அது எப்படி உரையாடலைக் கேட்பவர்களுடன் பேசுகிறது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவும்.

ஜெபித்து தேவனுடைய உதவியைக் கேட்க மறக்க வேண்டாம்.

இப்போது உங்கள் பிரசங்கத்தை உங்கள் சொந்த மொழியில் எழுத நீங்கள் தயாராயிருக்கின்றீர்கள். அதை எழுதுவது நல்லது. ஏனென்றால் தெளிவாய்ப் பேச அது உங்களுக்கு உதவியாயிருக்கும். பிரசங்கித்தல் பக்கத்தை உங்கள் உதவிக்கு உபயோகிக்கவும். நாம் உங்களுக்குப் பிரசங்கத்தின் எலும்புகளை மட்டுமே தருகிறோம். நீங்கள் அதன் மேல் சதையை வைக்க வேண்டும். நீங்கள் மேலதிக விளக்கங்களையும், உதாரணங்களையும் கொடுக்க வேண்டும். முக்கிய விடயம் எப்படி நமது வாழ்க்கையுடன் உரையாடுகிறது என்பதைக் குறித்த மேலதிக விளக்கங்களைச் சேர்த்துக் கொள்ளவும்.

பிலிப்பியர் நிருபத்தின் ஏனைய பகுதிகளை எப்படி கற்பது என்பதற்கான வழியை நாம் உங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றோம். நிருபத்தின் ஒவ்வொரு பகுதியையும், பின்னணி, அது என்ன கூறுகிறது?, முக்கிய விடயம், அது எவ்வாறு நம்முடன் உரையாடுகிறது என்பவற்றின் மூலம் செயற்பட முயற்சிக்கவும்.

**முதலில் உங்கள் சொந்த முயற்சியில் நிருபத்தைப் கற்கவும்.** அதன்பின் "பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்" நூலினைப் பார்க்கவும்!

இதை நீங்கள் ஒரு குழுவாகப் கற்றிருப்பீர்களானால், பிலிப்பியர் நிருபத்தின் மற்ற பகுதிகளையும் ஒன்றாகப் கற்றுக்கொள்ள உங்களுக்கு உதவியாயிருக்கும். இந்தப் பயிற்சி வழிகாட்டியானது பிலிப்பியர் நிருபத்தை திறமையாகப் பிரசங்கிக்க உங்களுக்கு உதவியாயிருக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்கிறோம்.

# பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்

## பிலிப்பியர் நூலுக்கான பேசும் வரைகோடுகள்

***...உலகமெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்களுக்காக எழுதப்பட்டுள்ளது***

**ஜெபம் செய் - தயார் செய் - போதனை செய்** என்பது உலகெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்கள் தேவனின் வார்த்தையைத் தெளிவாகவும், துல்லியமாகவும் விளக்குவதற்கு அவர்களுக்கு உதவியாயிருப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதொரு புதிய வழிகாட்டித் தொடராகும். 2 தீமோத்தேயு 2:15 இப்படிக் கூறுகிறது: 'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்,சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.' 'பிலிப்பியர் நிருபத்தைப் பிரசங்கித்தல்' என்னும் இந்தப் புத்தகம் இதைச் செய்ய உங்களுக்கு உதவியாயிருக்கும்.

அது உங்களுக்கு இவைகளில் உதவி செய்யும்.

- தேவன் எப்படி அவருடைய மக்களின் வாழ்க்கையை மாற்றுகிறார் என்பதைப் **புரிந்து கொள்வதற்கு.**
- ஏனைய கிறிஸ்தவர்களுடன் எப்படிப் பங்காளிகளாக இருப்பது என்பதைக் **கற்றுக் கொள்வதற்கு.**
- இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை உலகத்திற்கு **எடுத்துச் செல்வதற்கு.**
- இந்த நிருபத்தின் ஒவ்வொரு பகுதியும் எப்படி உங்கள் மக்களுக்கு முக்கியம் என்பதைச் **சிந்திப்பதற்கு.**
- இந்த நிருபத்தின் முக்கிய விடயத்தைத் தெளிவாகப் **போதிப்பதற்கு.**



அண்மைக் காலமாக, வியாக்கியான பிரசங்கத்தின் அவசியம் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகின்றது, எனினும் ஆசியாவிலே இப்பிரசங்கமானது மிகக் குறைந்த அளவிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த பாடநூல் தொடரானது ஊழியர்களினதும் மற்றும் அநேக பிரசங்கிகளின் வாழ்விலும் அவர்கள் விரைந்து இப்படிமுறையை ஆரம்பிக்க உதவி செய்யும். இன்றைய நாள் ஊழியர்களுக்கு வியாக்கியான பிரசங்கமானது செய்ய முடியாத மற்றும் நடைமுறைக்கொவ்வாத ஒன்றல்ல என்பதை இது காட்டுகிறது. வேதாகமப் பகுதிகளைத் திறந்து நடைமுறைக் காரியங்களில் பிரசங்கம் செய்வதற்கு, இத்தொடரானது புதிய சந்ததியின் ஊழியர்களை வேதவார்த்தையில் வளர்ப்பதற்கு உதவி செய்யும்.

***அஜித் பெர்னான்டோ, கற்பித்தல் இயக்குனர், கிறிஸ்துவுக்காக வாலிபர், இலங்கை.***



வேதாகமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, அதன் வல்லமையையும் அதன் பொருந்தும் தன்மையையும் வெளிப்படுத்தும் பிரசங்கங்கள் உலகம் முழுவதிலும் இன்று மகத்தான தேவைகளிலொன்றாக இருக்கிறது. **'மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்'** வேத வசனத்தைப் போதிக்க அவர்களுக்குத் தேவையான வளங்கள் போதுமான அளவு இல்லாத போதகர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் மிகப் பெரியதொரு உதவியாயிருக்கும்.

***யோனத்தான் லாம், இயக்குநர், இலங்கம் பிரசங்கித்தல், சர்வதேச இலங்கம் பங்குதாரர்.***

Rs. 100/-

ISBN 978-955-36400-2-4

Langham PARTNERSHIP

CTS Publishing
Colombo Theological Seminary